


# இந்து ஒளி
# HINDU OLI

தீபம் - 16 சுடர் - 4




## இந்து வித்தியாவிருத்திச் சங்க வைர விழா சிறப்பிதழ்

அகில இலங்கை இந்து மாமன்றக் காலாண்டிதழ்

கர வருடம் ஐப்பசி-மார்கழி வெளியீடு
October-December 2011

Quarterly of
All Ceylon Hindu Congress

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து மாமன்ற அனுசரணையுடன் நாவலப்பிட்டி இந்து மாமன்றம் நடாத்திய சைவ சமய எழுச்சி விழா - 23. 10. 2011 ஞாயிற்றுக்கிழமை





நாவலப்பிட்டி சைவ எழுச்சி மாநாட்டில் பார்வையாளர் வரிசையில்
நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
மாமன்றச் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன், கலாநிதி மு. கதிர்காமநாதன், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
ஆகியோருடன் விழாவிற்கு வருகைதந்த சபையோரையும்,
கதிரேசன் மத்திய கல்லூரி மாணவிகளின் நாட்டிய நாடகத்தில் ஒரு காட்சியையும் காணலாம்.



நாவலப்பிட்டி இந்து மன்ற வயலின் கலைஞர்கள்
வயலின் இசை வழங்குவதைக் காணலாம்



சைவ சமய எழுச்சி விழாவில் கலந்துகொண்ட
பார்வையாளர்கள்



நாவலப்பிட்டி பர்வதா நர்தனாலய மாணவிகளின்
அபிநயத் தோற்றம்



அகில இலங்கை இந்து மாமன்ற சைவ வித்தகர்
பயிற்சி மாணவர்கள், நாவலப்பிட்டி சைவ சமய எழுச்சி விழாவில்
வில்லுப்பாட்டு நிகழ்த்துவதைக் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

எங்கள் நாயகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமா ரிருவர்
தங்கள் நாயகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கண் நாயகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா வடியே னாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே!

## திருவிசைப்பா

கருவளர் மேகத் தகடுநோய் மகுடக்
கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சா
லெழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியம்
திரண்டசிற் றம்பலக் கூத்தா
உருவள ரின்பச் சிலம்பொலி யலம்பு
முன்னடிக் கீழதென் னுயிரே.

## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட்
டின்னும் புகலரிதாய்
இந்திரந் தழைப்பவென் னுயிராண்ட கோவினுக்
கென்செய வல்லமென்றுங்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே.

திருச்சிற்றம்பலம்


உ

சிவமயம்

# இந்து ஒளி

தீபம் – 16 சுடர் – 01

கர வருடம் மார்கழித் திங்கள் 1ம் நாள்

17.12.2011


## 'இந்து ஒளிக்கு' அகவை பதினாறு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டு இதழான இந்து ஒளி பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து மனித வாழ்வியலின் தேவைகளில் இன்றியமையாத ஆன்மீக விழுமியங்களைச் சுமந்தவண்ணம் வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆன்மீக தத்துவங்களையும், அவற்றின் சிறப்பையும் இந்துமக்களின் மனதிலே வீரிய நல்வித்துக்களாய் விதைத்து சிறந்த அறுவடைவேண்டிநிற்பதே இந்து ஒளியின் அளப்பரிய பணியாக வேண்டும் என்பதில் மாமன்றம் உறுதியாக இருக்கிறது.

தெய்வீகமான எமது வழிபாட்டு மரபுகள், கொள்கைகள், சான்றோர் விட்டுச் சென்ற சமய விழுமியங்கள், சமய நீதியுரைக்கும் புராண, இதிகாச வரலாற்றுச் சான்றுகள் என்பன காக்கப்படவேண்டிய கட்டாயத்தேவையாகி காலத்தின் கட்டாயமாகியும் விட்டது. அதுமட்டுமல்ல எமது சேவையோடு கூடிய சமயப்பணியின் தொடர்பணிகளை வருங்கால சமுதாயத்திற்கு ஒழுக்கநெறிமுறையோடு கையளித்தலே சிறப்புடையதாகும். இதற்காகவே அகில இலங்கை இந்து மாமன்றம் சமூக, சமய, கல்வி, மனிதநேயம் என பணிகளை விரிவுபடுத்திச் செல்கிறது. இப்பணி சிறக்க எம்மோடு இணைந்திருக்கும் நிறுவனங்களையும் இணைத்துக்கொண்டு முன்னோக்கி நகர்கிறது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆரம்பகால அங்கத்துவ சங்கங்களில் ஒன்று இந்து வித்யாவிருத்திச் சங்கமாகும். அச்சங்கத்தின் சரஸ்வதி மண்டபம், மாமன்றத்தின் அலுவலகமாக மாமன்றத் தலைமையகம் 1996 இல் பூர்த்தியாகும் வரை இருந்தது. அதுமட்டுமல்ல மாமன்றத் தலைமையகத்தில் நாங்கள் செயற்படமுடியாத தருணங்களில் சரஸ்வதி மண்டபமே எங்களுக்குத் தஞ்சம். அச்சங்கத்தின் வைரவிழாவையொட்டி இம்மலரினை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இந்துஒளி மூலம் நற்காரியங்களையும், சமய வீரியங்களையும் காவிச் செல்லும் இப்பணியில் உங்கள் ஆதரவையும் கோரி நிற்கின்றோம். இளம்பராயமடைந்துவிட்ட 'இந்து ஒளி' இனி இளமைத்துடிப்புடன் கூடிய வேகத்துடன் தன் பணியைத் தொடரவேண்டும் என மாமன்றத் தலைமையகத்தில் எழுந்தருளியிருக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை பிரார்த்தித்து நிற்கிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணங்கள் 01
- அருளாசிச் செய்திகள் 03
- வாழ்த்துச் செய்திகள் 04
- பதினாறாவது வருடத்தில் ஒளிவீசும்.. 06
- கொழும்பில் இந்துக்கல்வி மறுமலர்ச்சி 09
- அறியாமை அழித்து அறிவொளி... 13
- பண்டிதமணியும் புலவர்மணியும் 14
- நல்ல கதி கேள் மனமே 18
- சிந்தனைக் கதைகள் 20
- பெரிய புராணக் கதைகள் 21
- எங்கள் ஆசான், சைவம் என்பது 23
- நாட்காட்டி (2012) 24
- இந்து சமய விழாக்களும் நாட்களும் 25
- தரணி போற்றும் தாய்க்கோர் விழா 26
- கட்டுரைப் போட்டி முடிவுகள் 27
- விபுலாநந்த அடிகளின் சமூகப்பணிகள் 28
- வித்தையில் சிறந்த வித்தகர்.... 30
- முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் 32
- நல்லவற்றை கடைப்பிடித்தல் 33
- சைவ பாரம்பரியம் பேணுவோம் 34
- தீப ஒளியில் திருவிளக்கு 35
- இரத்மலானை விடுதிப் பிள்ளைகளின்... 36
- இந்து மாமன்றத்தின் அனுதாபம் 37
- நல்லை ஆதினக் கட்டிடத்தின்... 38
- இந்து ஒளி – நல்லைக் கந்தன் மகோ.. 39
- 2011 – நன்கொடைகள் 40
- தரணி போற்றும் தஞ்சாவூர் 42
- அடக்கம் 45


**அடுத்த சுடர்**

**கர வருடம்**

**தை-பங்குனி**


ISSN : 2012-9645


## வாழ்த்து

கரிமுகன் கழல்கள் வாழ்க கந்தவேள் கருணை வாழ்க
அரியயன் காணொணாத அரனடி நீடு வாழ்க
விரிசடைப் பெருமானார் தம் அடியவர் எல்லாம் வாழ்க
பரிதிசூழ் பாடும் விண்ணும் பொலிவுடன் நீடுவாழ்க!


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
கர வருடம் ஐப்பசி – மார்கழி இதழ்
மார்கழித் திங்கள் 1ம் நாள் 17.12.2011



**ஆசிரியர் குழு :**
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. த. மனோகரன்



| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 50.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா | 200.00 |
| | (தபாற் செலவு தனி) | |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் | 10.00 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A.C.H.C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி எண் : 0112434990, தொலைநகல் : 0112344720


இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.


# HINDU OLI

**Issue of**
**ALL CEYLON HINDU CONGRESS**
**AIPASI - MARKAZHI 17th December 2011**



**Editorial Board :**
Prof. A. Shanmugadas
Dr. Kumarasamy Somasundaram
Sivasri M. Balakailasanatha Sarma
Mr. Kandiah Neelakandan
Mr. D. Manoharan



| | | |
|---|---|---|
| Price : | Rs. 50.00 | Per copy |
| Annual Subscription (Inland) | Rs. 200.00 | |
| | (Postage Exclusive) | |
| Annual Subscription (Foreign) (Including Postage) | U. S. $ 10.00 | |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720


Next Issue :
**THAI - PANKUNI**

**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய**

அவர்கள் வழங்கிய



# அருளாசிச் செய்தி

ஈழத்திருநாட்டின் உன்னத இந்து சமய நிறுவனமாக விளங்குவது அகில இலங்கை இந்துமாமன்றம். கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக எம் மண்ணிலருந்து இந்து மக்களுக்காக குரல் கொடுக்கும் உன்னத நிறுவனமாக இந்து மாமன்றம் திகழ்வது யாவரும் அறிந்ததே. இந்து மாமன்றம் ஆற்றும் மகோன்னத பணிகளில் இந்து ஒளி வெளியீடு சிறப்புக்குரியது. ஆன்மீக செய்திகளையும் தத்துவக் கருத்துக்களையும் மக்களுக்கு எடுத்துரைக்கும் பயனுள்ள மலராக இந்து ஒளி தொடர்ந்து வெளிவருகிறது. இந்து மாமன்ற கௌரவ செயலர் கந்தையா நீலகண்டன் அவர்களது ஊக்கத்தாலும், மலர் குழு உறுப்பினர்களின் ஆர்வத்தாலும் கடந்த பதினைந்து ஆண்டுகளாக தடங்களின்றி இந்து ஒளி வெளிவந்து கொண்டிருப்பது திருவருளே. இந்து ஒளி அழகிய அட்டைப் படங்களுடன் வெளிவருவது மகிழ்ச்சியை தருகிறது. எதிர்காலத்தில் வெளியீட்டு பணி மேன்மை பெற பரம்பொருளை வேண்டி அமைகிறோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.
Email - rkmcey@gmail.com

*Phone - 2588253*
*5013805*
*Fax - 2361438*



இராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை) தலைவர் **சுவாமி சர்வரூபானந்தா** அவர்களது

# ஆசிச்செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றம் தனது 56வது அகவையில் காலெடுத்து வைத்துள்ள இந்தத் தருணத்தில் மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" யும் பதினாறாவது ஆண்டில் கால் பதித்துள்ளது. மாமன்றத்தின் பணிகள் என்றும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல இறைவன் தன் அருளையும், ஆசியையும் வழங்க வேண்டும் என்று வேண்டுவதோடு என் அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் மாமன்றத்தின் தலைவர், செயலாளர் மற்றும் அங்கத்தினர் அனைவருக்கும் நல்ல ஆரோக்யத்தையும், நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

அகில இலங்கை இந்து மாமன்றமானது ஆன்மீக வாழ்க்கை, மக்களின் நலன் ஆகியவற்றிக்காக பலவிதமான ஆன்மீகப் பணிகளையும், பயிற்சிப் பட்டறைகளையும், நிவாரண உதவிகளையும் வழங்கி வருகிறது. பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக மனதாலும், உடலாலும் பல துன்பங்களுக்கு ஆளான மக்களுக்கு மனவலிமையும், பொருளுதவியையும் பல்வேறு வழிகளில் வழங்கியது; வழங்கி வருகிறது.

"பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும். தனிமனிதர்களின் நிலை உயர்த்தப்பட்டால், தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்." என்றார் சுவாமி விவேகானந்தர்.

"நம்மைப் பற்றியே முதலில் நினைத்துக் கொள்ளும் சுயநலம்தான் மிகப் பெரிய பாவமாகும். 'நான்தான் முதலில் சாப்பிடுவேன், நான்தான் மற்றவர்களைவிட அதிகச் செல்வம் பெற்றவனாக இருப்பேன், எல்லாவற்றையும் நானே வைத்திருக்கவேண்டும்' என்றும், 'மற்றவர்களுக்கு முன்பு நான்தான் சொர்க்கம் போவேன், மற்றவர்களுக்கு கிடைப்பதற்கு முன்பு நான் முக்தியை அடைவேன்' என்றும் நினைப்பவன்தான் சுயநலவாதி ஆவான்.

நான்தான் கடைசி ஆளாக இருப்பேன். சொர்க்கத்திற்குப் போவதைப் பற்றியும் நான் பொருட்படுத்தவில்லை. நரகத்திற்குச் செல்வதன் மூலமாக என்னுடைய சகோதரர்களுக்கு என்னால் உதவி செய்ய முடியுமானால், நரகத்திற்குச் செல்லவும் நான் தயாராக இருக்கிறேன்.' என்று சுயநலம் இல்லாதவன் சொல்கிறான்" என்றார் சுவாமி விவேகானந்தர்.

இத்தகைய தன்னலமற்ற மனப்பான்மைதான் ஆன்மீக வாழ்க்கை இருப்பதற்கும் உரிய சோதனையாகும். இவ்விதச் சுயநலமற்ற தன்மையைப் பெருமளவில் பெற்றிருப்பவர், பெருமளவிற்கு ஆன்மீக வாழ்க்கையைப் பெற்றவராகிறார். அவரே மற்றவர்களைக் காட்டிலும் சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறார்.

மேற்படிக் கருத்துக்களை மாமன்றவெளியீடான "இந்து ஒளி" ஊடாக மக்கள் மனதில் ஆழமாகப் பதியவும், அவர்களுடைய வாழ்க்கையில் ஒளிவிளக்காக வழிகாட்டவும், யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கோட்பாட்டிற்கு இணங்க அயராது உழைக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திரு. கயிலாசபிள்ளை, செயலாளர் திரு. நீலகண்டன் மற்றும் அகில இலங்கை இந்து மாமன்றத்தைச் சேர்ந்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எல்லாம் வல்ல இறைவனின் அருளும், ஆசிகளும் வழங்க வேண்டும் என்று இறைவனை மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs


| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂක<br>பணிப்பாளர்<br>Director | 2552643 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 2552825 | ඊමේල්<br>மின் அஞ்சல்<br>E-Mail | hindudir@yahoo.com |
| පොදු<br>பொது<br>General | 2552641 | | | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | HA/ | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 24.11.2011 |




## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களது

# வாழ்த்துச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றம் நாடளாவிய ரீதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தி வருவது பாராட்டிற்குரிய விடயமாகும். அதே சமயம் ' இந்து ஒளி' காலாண்டு சஞ்சிகை சமய விழாக்கள், விரதங்கள், சமயப் பெரியார்கள் குருபூசைத் தினங்கள், சமய தத்துவங்கள் எனப் பல சமய அறிவுசார் கட்டுரைகளைத்தாங்கி வருவது இந்து ஒளியின் சிறப்பம்சமாகும்.

அறிஞர்கள் பலர் இச்சஞ்சிகைக்கு பயனுள்ள கருத்தும் செறிவும் மிக்க ஆக்கங்களை நல்கி வருகின்றனர். அதே சமயம் இச்சஞ்சிகை பதினைந்தாவது அகவையைப் பூர்த்தி செய்து பதினாறவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பது அனைவருக்கும் மனமகிழ்ச்சியைத் தரும் விடயமாகும். இதனையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்து சமயம் சார்ந்த சமூகத்தவர்களுக்கு மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகத்தினர் அனைவரும் பயன்பெறும் வண்ணம் சேவையாற்றி வரும் இந்து மாமன்றத்தினர் எழுத்துலகிற்கும் எடுத்துக்காட்டாக விளங்குவதற்கு ஆதாரமாக 'இந்து ஒளி' விளங்குகின்றது.

கருத்திற்கும் கேள்விக்கும் களமாய் அமைந்து நல்ல சமய வித்துக்களை விதைத்து, அவை மக்களில் விருட்சமாய் வளர வழிவகுக்கும் இந்து ஒளி என்றும் அணையா விளக்காய் ஒளிர என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்**
*பணிப்பாளர்*



## சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

**மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநர்**

**(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை, சிவபூமி அறக்கட்டளை கோண்டாவில், யாழ்ப்பாணம்)**

# வழங்கிய வாழ்த்துச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றம் ஈழத்தில் சைவத்தையும் தமிழையும் காப்பாற்றுவதற்கு அரும்பாடுபட்டு உழைப்பதை யாவரும் அறிவர். சொல்லாலும் செயலாலும் அர்த்தமுள்ள காரியங்களை ஆற்றும் மாமன்றத்தின் பணிகள் பெருமைக்குரியன. கடந்த பதினைந்து ஆண்டுகாலமாக மாமன்றத்தின் காலாண்டிகழாக வெளிவரும் இந்து ஒளி சஞ்சிகையின் சிறப்பு பாராட்டுக்குரியது.பல அறிஞர்களின் ஆக்கங்களை கொண்டு வெளிவரும் இச்சஞ்சிகை சைவத்தமிழர்களின் உன்னத ஆவணமாக இன்று விளங்குகின்றது. காலத்துக் காலம் சிறப்பு மலர்களாக வெளிவந்த இந்துஒளி அரியசெய்திகளை இவ் அவனிக்கு தந்தது. பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக பேரறிஞர்கள் வரை இந்துஒளியை ஆதாரமாகப் பின்பற்றும் நடைமுறை தொடர்கிறது. உலக சைவமகாநாடு முதல் திருக்கேதீஸ்வர மகா கும்பாபிஷேகம், தெல்லிப்பழை துர்க்காதேவி மகா கும்பாபிஷேகம், சிவத்தமிழ்ச்செல்வி குறித்த மலர் என பல அரிய மலர்களை இந்து ஒளி வெளியிட்டமை வரலாற்றுச் சான்றாகும். நல்லை நகர் நாவலர் பெருமான் எதிர்பார்த்த சமயப் பிரசார யுத்தியின் பத்திரிகை மலர் வெளியிடுதல் போன்றவை முக்கிய இடத்தை பெற்றன. அன்று இந்து சாதனம் இலங்கை முழுவதும் சைவத்தை காப்பதில் பெருந்துணை செய்தது. இன்று இந்து ஒளி இலங்கையில் மட்டுமன்றி உலகத்தின் பல பாகங்களிலும் வாழும் இந்து மக்களுக்கு அரியதோர் சொத்தாக வெளிவந்து கொண்டிருப்பது பெருமை தருகிறது. இந்து ஒளியில் வெளிவரும் கட்டுரைகள் பல அறச்சிந்தனைகளை மக்களுக்கு எடுத்து இயம்புகின்றன. திருவள்ளுவப்பெருமானின் திருக்குறளில் "அறத்தான் வருவதே இன்பம் மற்று எல்லாம் புறத்த புகழும் இல." என்ற கருத்துக்கு அமைய அறநெறிக்கு மக்களை ஆற்றுப்படுத்தும் சாதனமாக இந்து ஒளி விளங்குகின்றது. இந்து ஒளி மேலும் தனது சீரிய பணியைத் தொடர எல்லாம்வல்ல துர்க்காதேவியை பிரார்த்திப்பதோடு இந்து ஒளியின் மேன்மையை கண்போல் காத்திடும் இந்து ஒளி வெளியீட்டுக் குழுவினருக்கு எனது இனிய வாழ்த்துக்களை சமர்ப்பித்து அமைகிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)



தலைவர்:
வி. கயிலாசபிள்ளை
தொலைபேசி: 2575566 (இல்லம்)
தொலைநகல்: 2575472
மின்னஞ்சல்:
chairman@manithaneyam.org

பொதுச் செயலாளர்:
கந்தையா நீலகண்டன்
தொலைபேசி: 2580807 (இல்லம்)
2371100 (அலுவலகம்)
தொலைநகல்: 2371111
மின்னஞ்சல்: neela@mnlaw.lk

பொருளாளர்:
வே. கந்தசாமி
தொலைபேசி: 2586630 (இல்லம்)
மின்னஞ்சல்:
vkandasmi@gmail.com




அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி, இந்து சிரோரத்தினம்
திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களது

## வாழ்த்துச் செய்தி

இலங்கை இந்து மாமன்ற அமைப்புக்களினதும், ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் கூட்டமைப்பாக இயங்குவதுடன் சமயப்பணிமட்டுமல்ல, சமூகநலன், மனிதநேயம், கல்விப்பணி என பல்வேறு கிளைகளைப் பரப்பி நாட்டின் எட்டுத்திக்கும் அகில இலங்கை இந்து மாமன்றம் தனது சேவையைச் செய்து வருகின்றது. எமது எண்ணங்கள், செயற்பாடுகள், முயற்சிகள் அனைத்தையும் அச்சூடகம் வாயிலாக நம் நாட்டில் வாழும் மக்களுக்கு மட்டுமல்ல தமிழர்கள் வாழும் நாடெங்கும் 'இந்து ஒளி' என்னும் சஞ்சிகையூடாகவும், இணையதளமூடாகவும் உங்கள் பார்வைக்கு மூன்று மாதத்திற்கொருமுறை வெளிக்கொண்டு வருகின்றோம்.

மாமன்றத்தின் குரலாக ஒலிக்கும் இந்து ஒளிக்கு இந்து மக்களின் பேராதரவு கிடைத்துள்ளதில் பெருமகிழ்ச்சி. இந்து ஒளி தற்பொழுது தனது 15ஆவது ஆண்டை நிறைவு செய்து பதினாறாவது அகவையில் காலடியெடுத்து வைக்கிறது. சிறியோர், மாணவர், பெரியோர் என அனைவரும் பாராட்டும் வகையில் வெளிவரும் சஞ்சிகையால் நாமும் இறும்பூதெய்துகின்றோம். சஞ்சிகையினூடாக எமது செயற்பாடுகள், பணிகள் சேவைகள் என்பவைகளை உங்கள் பார்வைக்கு கிட்டவைப்பதே எமது கடனும், நோக்கமுமாகும். இச் சேவை மென்மேலும் சிறக்க சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

தலைவர்

**வி. கயிலாசபிள்ளை**

### பொன் மொழிகள்

- நீ எங்கிருந்து எச்செயலைச் செய்தாலும் மனதை மட்டும் சதா சர்வகாலமும் தெய்வத்தின் திருவடியில் வைத்திரு.
- ஒருவன் எப்பொழுதும் உண்மையே பேசுகிறவனாக இருந்தால் அல்லாமல் உண்மையே உருவான இறைவனை காணமுடியாது.
- கிடைத்ததைக் கொண்டு சந்தோஷமடைவது நல்லது, சேர்த்து வைக்க ஆசைப்படாதே.
- வெறும் ஏட்டுக் கல்வியால் மனிதனுக்கு ஆவதென்ன? பிரார்த்தனையும் ஆத்மசாதனமும் அவனுடைய முன்னேற்றத்திற்கு அவசியமானவைகள்.
- திரும்பத் திரும்ப மனமே நீ தேவி துர்க்கை பெயர் கூறு. கரும்பிலும் இனிய அப் பெயரை காலம் முழுவதும் நீ பாடு.
- பக்தியுடன் பகவான் நாமத்தை பாடு. அப்போது மலை போலக் குவிந்திருக்கும் உனது பாவங்கள் எல்லாம் நெருப்புப் பொறி ஒன்றினால் பஞ்சுப் பொதிகள் எரிந்து சாம்பலாவதைப் போல நசிந்து போய்விடும்.
- மணிக் கணக்கில் நிறையப் பேசுவதைக் காட்டிலும் குறைந்தளவு காரியங்களைச் செய்வது மேலானது.
- பொறாமையையும் ஆணவத்தையும் விட்டுவிடு, பிறருக்காகக் கூடி உழைக்கக் கற்றுக்கொள். நமது நாட்டிற்கு மிகவும் தேவையானது இதுவே.
- நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைகளானால் எதற்குமே அஞ்சி நின்று விடமாட்டீர்கள். நீங்கள் சிங்கக் குட்டிகளைப் போல் திகழ்வீர்கள்.
- இதயபூர்வமான காரியங்களை செய்பவனுக்கு இறைவனும் உதவி புரிகின்றான். உன்னால் இயன்றவரையில் நற் செயல்களைச் செய்.
- நாம் மற்றையவர்களுக்கு செய்ய வேண்டிய கடமை பிறருக்கு உதவி புரிவதும் உலகுக்கு நன்மை செய்வதும் தான். இறைவனை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாறாவது வருடத்தில் ஒளிவீசும்

# இந்து ஒளி

**அ. கனகசூரியர்**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழாக சுடர்விட்டுப் பிரகாசித்துவரும் ''இந்து ஒளி'' பதினைந்து வருடங்களை நிறைவு செய்திருப்பது பெருமகிழ்ச்சிக்குரியது. கடந்த பதினைந்து வருடங்களில் – வருடம் ஒவ்வொன்றாக – பதினைந்து தீபங்களை ஏற்றிவைத்து, ஒவ்வொரு தீபங்களிலுமிருந்து நான்கு சுடர்களாக மொத்தம் அறுபது சுடர்கள் இதுவரையில் ஒளிபரப்பியிருக்கிறது. இப்போது பதினாறாவது தீபம் ஏற்றிவைக்கப்பட்டு, இதன் முதலாவது சுடராக பிரகாசிக்கும் ''இந்து ஒளி'' (கரவருடம் ஐப்பசி–மார்கழி இதழ்) ஆண்டுச் சிறப்பிதழாக இந்துப் பெருமக்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

''இந்து ஒளி'' 1996ஆம் ஆண்டிலிருந்து கிரமமாக வெளிவந்து கொண்டிருப்பது ஒரு சாதனையாகவே பலராலும் பாராட்டிப் போற்றப்படுகிறது. இந்த வேளையில், ''இந்து ஒளி''யின் வரலாற்றுப் பாதையை மீண்டும் நோக்குவது பொருத்தமாகவிருக்கும்.

மாமன்றத்தின் பணிகளுள் ஒன்றாக, சமய சஞ்சிகை யொன்றை வெளியிட வேண்டும் என்ற மாமன்ற உறுப்பினர்களது நீண்டகால விருப்பமும், வேண்டுகோளும் 1996ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறைவேறுவதற்கு திருவருள் துணை நின்றது. ''இந்து ஒளி'' என்ற பெயரில் காலாண்டு சஞ்சிகையாக உதயமான இவ்விதழ், தாது வருடம் கார்த்திகைத் திங்கள் 9ஆம் நாள் (24.11.1996) திருக்கார்த்திகைத் திருநாளில் முதலாவது தீபத்தின் முதலாவது சுடராகப் பிரகாசித்தது.

''இந்து ஒளி''யின் முதலாவது சுடருக்கு ஆசிச் செய்தி வழங்கியிருந்த நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ''இந்து ஒளி எனும் சஞ்சிகை ஆழமான சமய தத்துவங்களை – மக்களுக்கு விளங்கக்கூடிய கருத்துக்களை முன்வைக்க வேண்டும்'' என்று சொல்லியிருந்தார். கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் அன்றைய தலைவர் சுவாமிஜி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்கள் தனது ஆசிச் செய்தியில் ''கடலைப் போன்று பரந்து கிடக்கும் இந்து சமயக் கருத்துக்களை மக்கள் அறியச் செய்யவும், அவர்களது சமய அறிவு வளரும் வகையிலும் மாமன்றத்தின் சஞ்சிகை வெளியீட்டு முயற்சி அமைய வேண்டும்'' என்று தெரிவித்திருந்தார். தெய்வத் திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் ''இந்து ஒளி வெளியீடு பற்றி அறிந்து மகிழ்கிறோம். அந்த இதழ் சிறப்புற அமைய அம்பாள் துணை நிற்பாராக'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்து மதத் தலைவர்களினதும் பெரியார்களினதும் ஆசிகளுடனும் வாழ்த்துக்களுடனும் 1996ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தாது வருடத்தின் ஐப்பசி – மார்கழி இதழாக சுடர்விட்டு ஒளிவீச ஆரம்பித்த ''இந்துஒளி'', மாமன்றத்தின் காலாண்டிதழாக உரிய காலங்களில் கிரமமாக வெளிவந்து பதினைந்து வருடங்களை நிறைவு செய்திருப்பது வெற்றிகரமானதொரு சாதனை நிகழ்வு என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

''இந்துஒளி'' வெளியீடுகள் காலத்திற்குப் பொருத்தமான வகையில், அவ்வப்போது சிறப்பிதழ்களாகவும் வெளியிடப்பட்டு வந்துள்ளன. இந்தவகையில் 1997ஆம் ஆண்டின் ஐப்பசி – மார்கழி இதழ் (தீபம் :2, சுடர்: 1) கந்த சஷ்டி சிறப்பிதழாகவும், 1998ஆம் ஆண்டின் தை – பங்குனி இதழ் (தீபம்: 2, சுடர்: 2) மகாசிவராத்திரி சிறப்பிதழாகவும் வெளிவந்தன. தொடர்ந்து 1999ம் ஆண்டின் தை – பங்குனி இதழ் (தீபம்: 3, சுடர்: 2) மகாசிவராத்திரி சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம்: 3, சுடர்: 3) ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் இன்னிசை விருந்து சிறப்பிதழாகவும், ஆடி – புரட்டாதி இதழ் (தீபம்: 3, சுடர்: 4) இரத்மலானை – கொழும்பு இந்துக் கல்லூரி ஸ்ரீ கற்பக விநாயகர் மண்டலாபிஷேக பூர்த்தி சிறப்பிதழாகவும் வெளிவந்தன.

2000ஆம் ஆண்டின் தை – பங்குனி இதழ் (தீபம்: 4, சுடர்: 2) மகாசிவராத்திரி சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம்: 4, சுடர்: 3) இராமாயணம் நாட்டிய நாடகம் சிறப்பிதழாகவும், ஐப்பசி – மார்கழி இதழ் (தீபம்: 5, சுடர்: 1) கந்த சஷ்டி சிறப்பிதழாகவும் வெளிவந்தன.

2001ஆம் ஆண்டின் தை – பங்குனி இதழ் (தீபம்: 5, சுடர்: 2) மகா சிவராத்திரி சிறப்பிதழாகவும், ஆடி – புரட்டாதி இதழ் (தீபம்: 6, சுடர்: 4) சுவாமி விபுலானந்தர் நினைவுச் சிறப்பிதழாகவும், ஐப்பசி – மார்கழி இதழ் (தீபம்: 5, சுடர்: 1) ஆறாவது ஆண்டு சிறப்பிதழாகவும் வெளிவந்தன. ''இந்து ஒளி'' தனது வளர்ச்சிப் பாதையில் ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்து கொண்டு, ஆறாவது ஆண்டில் அடியெடுத்து வைத்த சிறப்பான நிகழ்வை நினைவூட்டும் வகையில் அந்த சிறப்பிதழ் வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, 2002ஆம் ஆண்டில் வெளியாகிய தை – பங்குனி இதழ் (தீபம்: 6, சுடர்: 2) மகாசிவராத்திரி சிறப்பிதழாகவும், ஆடி – புரட்டாதி இதழ் (தீபம்: 6, சுடர்: 4) நவராத்திரி சிறப்பிதழாகவும், ஐப்பசி – மார்கழி இதழ் (தீபம்: 7, சுடர்: 1) திருவெம்பாவை சிறப்பிதழாகவும் அமைந்திருந்தன.

2003ஆம் ஆண்டின் தை – பங்குனி இதழ் (தீபம்: 7, சுடர்: 2) மகாசிவராத்திரி சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம்: 7, சுடர்: 3) இரண்டாவது உலக இந்து மாநாட்டு சிறப்பிதழாகவும், ஆடி – புரட்டாதி இதழ் (தீபம்: 7, சுடர்: 4) திருக்கேதீச்சரம் மகா கும்பாபிஷேக சிறப்பிதழாகவும், ஐப்பசி – மார்கழி இதழ் (தீபம்: 8, சுடர்: 1) திருக்கார்த்திகை சிறப்பிதழாகவும் வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004ஆம் ஆண்டில் வெளியாகிய தை – பங்குனி இதழ் (தீபம்:8, சுடர்: 2) இரத்மலானை மாணவர் விடுதி ஆறாவது ஆண்டு நிறைவு சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம்: 8, சுடர்:3) அமரர் ஆ. குணநாயகம் நினைவு தின சிறப்பிதழாகவும், ஆடி – புரட்டாதி இதழ் (தீபம்: 8, சுடர்: 4) நவராத்திரி சிறப்பிதழாகவும், ஐப்பசி – மார்கழி இதழ் (தீபம்: 9, சுடர்:1) திருவெம்பாவை சிறப்பிதழாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தன.

2005ஆம் ஆண்டின் தை – பங்குனி இதழ் (தீபம்: 9, சுடர்: 2) மகாசிவராத்திரி சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம்:9, சுடர்: 3) யாழ். இந்து மாநாடு சிறப்பிதழாகவும், ஆடி – புரட்டாதி இதழ் (தீபம்: 9, சுடர்: 4) நவராத்திரி சிறப்பிதழாகவும் ஐப்பசி – மார்கழி இதழ் (தீபம்: 10, சுடர்: 1) திருவெம்பாவை சிறப்பிதழாகவும் வெளிவந்தன.

2006ஆம் ஆண்டின் தை – பங்குனி இதழ் (தீபம்: 10, சுடர்: 2) மகா சிவராத்திரி சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம்: 10, சுடர்:3) அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுச் சிறப்பிதழாகவும், ஆடி – புரட்டாதி இதழ் (தீபம்: 10, சுடர்: 4) பத்தாண்டு நிறைவுச் சிறப்பிதழாகவும், ஐப்பசி – மார்கழி இதழ் (தீபம்: 11, சுடர்: 1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுச் சிறப்பிதழாகவும் வெளிவந்துள்ளன.

2007ஆம் ஆண்டின் தை – பங்குனி இதழ் (தீபம்: 11, சுடர்: 2) துர்க்காபுரம் மகளிர் இல்லம் வெள்ளிவிழா சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம்: 11, சுடர்: 3) அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுச் சிறப்பிதழாகவும், ஆடி – புரட்டாதி இதழ் (தீபம்:11, சுடர்: 4) கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேக சிறப்பிதழாகவும், ஐப்பசி – மார்கழி இதழ் (தீபம்: 12 சுடர்:1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுச் சிறப்பிதழாகவும் வெளிவந்தன.

2008ஆம் ஆண்டின் தை–பங்குனி இதழ் (தீபம்: 12, சுடர்: 2) மகாசிவராத்திரி சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம்: 12, சுடர்: 3) தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு அஞ்சலி சிறப்பிதழாகவும், ஆடி–புரட்டாதி இதழ் (தீபம்: 12, சுடர்: 4) நவராத்திரி சிறப்பிதழாகவும், ஐப்பசி – மார்கழி இதழ் (தீபம்:13, சுடர்: 1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுச் சிறப்பிதழாகவும் வெளிவந்தன.

2009ஆம் ஆண்டின் தை–பங்குனி இதழ் (தீபம் : 13, சுடர்: 2) ஐம்பதாவது சுடராக – இரத்மலானை ஸ்ரீ கற்பக விநாயகர் மண்டலாபிஷேகப் பூர்த்தி சிறப்பிதழாகவும், மகா சிவராத்திரி சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம் : 13, சுடர்:3) முப்பெரும் சிறப்பிதழாகவும் (தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி முதலாவது குருபூசை சிறப்பிதழ், அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவு அஞ்சலி சிறப்பிதழ், சிவஞானச்செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் நினைவு அஞ்சலி சிறப்பிதழ்), ஆடி – புரட்டாதி இதழ் (தீபம் : 13, சுடர் : 4) தீபாவளி சிறப்பிதழாகவும், ஐப்பசி–மார்கழி இதழ் (தீபம் : 14, சுடர் :1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுச் சிறப்பிதழாகவும், 2010ஆம் ஆண்டின் தை – பங்குனி இதழ் (தீபம் : 14, சுடர் : 2) மகா சிவராத்திரி சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம் : 14 சுடர் : 3) அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுச் சிறப்பிதழாகவும், ஆடி–புரட்டாதி இதழ் (தீபம் : 14, சுடர் : 4) நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழாகவும், ஐப்பசி மார்கழி இதழ் (தீபம் : 15, சுடர் : 1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுச் சிறப்பிதழாகவும் வெளிவந்துள்ளன.

இவ்வாண்டு (2011) தை–பங்குனி இதழ் (தீபம் : 15, சுடர் : 2) அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான மகாகும்பாபிஷேக சிறப்பிதழாகவும், சித்திரை – ஆனி இதழ் (தீபம் : 15, சுடர் : 3) யாழ் சிவதொண்டர் மாநாடு சிறப்பிதழாகவும் ஆடி–புரட்டாதி இதழ் (தீபம் : 15 சுடர் : 4) நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழாகவும் வெளிவந்துள்ளன.

இதுவரையில் சமய அறிஞர்கள், சமய ஆர்வலர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள் எனப் பலர் "இந்து ஒளி" சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதி வந்துள்ளனர். கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண, உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் பயனுள்ள வகையிலான, அவர்களது பாடத்திட்டத்திற்கு அமைவான பல கட்டுரைகளை "இந்து ஒளி" சஞ்சிகையில் பல அன்பர்கள் எழுதி வருவதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். "சிறுவர் ஒளி", "மாணவர் ஒளி" என்ற தலைப்புகளில் அவரவர்களுக்குப் பயனுள்ள விடயங்களை வெளியிட்டு வருவதும் சிறப்பானதொரு அம்சமாகும். "இந்து ஒளி" சஞ்சிகையின் தீபம்: 9, சுடர்: 3 (2005) வெளியீட்டிலிருந்து "மங்கையர் ஒளி" என்ற புதிய அம்சமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக "இந்து ஒளி" சஞ்சிகையின் ஒவ்வொரு இதழிலும் நந்திக்கொடியின் சிறப்புகளை எடுத்துக் காட்டும் வகையிலான கட்டுரைகள் வெளியாகிவருவதும் சிறப்பான விஷயமாகும். பல அறிஞர்களும், அன்பர்களும் தாங்களாகவே முன்வந்து இது சம்பந்தமான கட்டுரைகளை தந்து உதவுகிறார்கள்.

இந்துப் பெருமக்கள் மத்தியில் நந்திக்கொடியின் மகத்துவத்தை அறியச் செய்யும் வகையில் இலவசமாகவே நந்திக்கொடிகளை விநியோகித்து வரும் மாமன்ற துணைத் தலைவரான விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்கள், ஒவ்வொரு தடவையும் நூற்றுக்கும் மேற்பட்ட "இந்து ஒளி" சஞ்சிகையின் பிரதிகளை கொள்வனவு செய்து, தனது நண்பர்களுக்கும் அறிமுகமானவர்களுக்கும் இலவசமாகவே வழங்கிவரும் சிறப்பான கைங்கரியத்தை செய்து வருவதையும் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

"இந்து ஒளி" இந்துப் பெருமக்களின் மத்தியில் பேரபிமானமும், பெருமதிப்பும் பெற்றிருப்பதற்கும், பதினாறாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருப்பதன் ஊடாக அறுபது சுடர்களை பிரகாசிக்கச் செய்வதற்கும் காரணமாகவிருக்கும் மாமன்றப் பொதுச் செயலாளரும் முகாமைத்துவமும் வழங்கும் ஆதரவையும், ஒத்துழைப்பையும், ஊக்குவிப்பையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். அதேவேளையில், "இந்து ஒளி" உரிய காலங்களில் தவறாது வெளிவரவேண்டும் என்பதில் பெரும் ஆர்வமும் உறுதியும் கொண்டிருக்கும் காரணத்தினால், ஆரம்ப காலத்திலிருந்தே மாமன்ற வெளியீடுகள் குழுவின் செயலாளர் பொறுப்பையும் மாமன்றப் பொதுச் செயலாளரே ஏற்று பெரும் பங்காற்றி வருவதும் இதற்கு ஆதாரமாகும்.

1996 ஆம் ஆண்டில் திருக்கார்த்திகை திருநாளில் ஏற்றிவைக்கப்பட்ட "இந்து ஒளி" தீபத் தொடரில், பதினாறாவது தீபம் இந்த ஆண்டு திருக்கார்த்திகை நாளில் ஏற்றிவைக்கப்பட்டிருப்பது பொருத்தமான நிகழ்வாகவே அமைந்திருக்கிறது. "இந்து ஒளி" எதிர்காலத்திலும் சிறப்பாக சுடர்விட்டுப் பிரகாசிக்க இறையருள் துணைகொண்டு இனிதே வாழ்த்துகிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்தாபகக் குழுத் தலைவர்

# பிரதம நீதியரசர் செ. நாகலிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் இந்துக்கல்வி மறுமலர்ச்சியின் வைரவிழா

சட்டத்தரணி கந்தையா நீலகண்டன்
(செயலாளர், இந்து வித்தியா விருத்திச் சங்கம்)

இலங்கையின் தலைநகர் கொழும்பு மாநகரின் வரலாற்றில் இந்துக்களுக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. இன்று ஏடுகளில் கொழும்பு மாநகர் நாட்டின் அரசியல் தலைநகர் என்ற நிலையிலிருந்து வர்த்தக தலைநகர் மட்டும் என்ற நிலைக்குத் தள்ளப் பட்டுவிட்டபோதும் கொழும்பு மாநகரும் அதனைச்ச சுற்றி அமைந்துள்ள கொழும்பு மாவட்டத்தின் ஏனைய அங்கங்களாக இருக்கும் இடங்களும் அடங்கிய இடப்பரப்பு இலங்கையின் தலைநகரமாகவே இன்றும் இந் நாட்டவராலும் பிறநாட்டவராலும் கருதப்படுகின்றது.

கொழும்பில் தமிழ் மக்கள் - குறிப்பாக அவர்களில் பெரும்பாலும் இந்து மக்கள் - மிகவும் செல்வாக்கு மிக்க ஓர் இனமாக வாழ்ந்தமை வரலாறு. இன்று அந்த நிலைக்குப் பின் ஒரு வினாக்குறி போட வேண்டியது உண்மை நிலை. இருந்தும்கூட கொழும்பில் இந்துப் பாரமபரியம் வளர்ந்து விடவில்லை என அங்கலாய்க்கும் நிலை ஏற்படாதது ஒரு நிம்மதியான விடயம். **"அடக்கி ஒடுக்கப்படும் இனமாக நாங்கள்"** என்ற வேதனை நிலையிலும் நாங்கள் எங்கள் பாரம்பரியத்தை விட்டுக் கொடுக்கவில்லை. அதனை முன்னெடுத்துச் சென்றிருக்கின்றோம்.

அடுத்தடுத்து ஏற்பட்ட இனத்துரோகச் செயல்களினால் கொழும்பில் வாழ்ந்த பிரபல்யமான இந்துக் குடும்பத்தினர் இன்று சோர்ந்து போய் இருக்கின்றனர், ஆனால் வேதனைகளையும், சோதனைகளையும் கூடச் சவால்களாக எடுத்து புதிய தலைமுறையினர் எமது பாரம்பரியத்தை கொழும்பில் வளர்த்து வருகின்றனர்.

இந்த நாட்டில் ஜனநாயகம் என்ற போர்வையிலும், அரச படைகள் தங்கள் பாதுகாப்புக்கு என்ற மாயையிலும் பெரும்பான்மைப் பலம் மிக்கவர்கள் தந்த கொடுமைகள், எம் மக்களை இந்நாட்டில் இருந்து பிற நாடுகளுக்குவெளியேற வைத்தன. இன்று பாரின் பல பக்கங்களிலும் எமது மக்கள் தங்கள் பாரம்பரியத்தை எடுத்துச் சென்று வளர்த்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன் கோலாலம்பூரில் உலகச் சைவப் பேரவை மாநாடு நடந்தபோது இரு நாடுகளின், பிரதிநிதிகள் மட்டும் இந்தியாவைச் சேர்ந்த அல்லது அந்த மண்ணின் பரம்பரையாக இருக்க, ஏனைய நாட்டின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் அனைவருமே இலங்கைச் சைவர்களாக, இருந்தனர். உலகமெல்லாம் சென்று எம்மவர் எமது பாரம்பரியத்தைப் பேணுகின்ற காலகட்டத்தில் கொழும்பில் மனித சக்தி குறைந்த நிலையிலும் எங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை ஏணிப்படியாக எடுத்து, சவால்களுக்கு ஈடுகொடுத்து எமது பாரம்பரியத்தை முன்னெடுத்துச் சென்றிருக்கின்றோம். அந்த புதிய அலையில் இணைந்து விட்டவன் என்ற நிம்மதியைத் தன்னடக்கத்துடன் கூறிக்கொண்டு கொழும்பில் இந்துப் பாரம்பரியத்தில் இந்து சமய நிறுவனங்களும் இந்துக் கல்விக்கூடங்களும் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி முதலில் ஒரு கண்ணோட்டத்தைச் செலுத்த விரும்புகின்றேன்.

நூறு ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட கொழும்பு விவேகானந்த சபை முதல் பல இந்து நிறுவனங்கள் கொழும்பு மண்ணில் பிறந்தவை. சைவ மங்கையர் கழகம், இந்து வித்தியா விருத்திச் சங்கம், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், கதிர்காமத் தொண்டர்சபை, வடகொழும்பு இந்துப்பரிபாலன சபை, ஈழத்து திருநெறித்தமிழ்மன்றம், சிவயோகர் சுவாமி நிதியம் என்பன முக்கியமானவை. வடகொழும்பில் விவேகானந்த சபை நிறுவிய விவேகானந்தாக் கல்லூரி தென்கொழும்பில் சைவ மங்கையர் கழகம் ஆரம்பித்த சைவ மங்கையர் கல்லூரி, இந்து வித்தியா விருத்திச் சங்கம் நிறுவிய இந்துக் கல்லூரி, கொழும்பு (பம்பலப்பிட்டி) கொழும்பு இந்துக் கல்லூரி (இரத்மலானை) ஆகியவை கொழும்பு வாழ் இந்து மக்களிடையே புத்துணர்வைக் காலத்துக்கு காலம் தந்ததுடன் இந்துப் பாரம்பரிய மேம்பாட்டிற்கு வழிவகுத்தன.

வட கொழும்பில் விவேகானந்த சபை நிறுவிய – விவேகானந்த சபை மண்டபமும் பம்பலப்பிட்டியில் இந்து வித்தியா விருத்திச் சங்கம் (வெள்ளவத்தை மாணிக்க விநாயக ஆலய அறங்காவலர் சபையிடமிருந்து நீண்டகாலக் குத்தகையில் பெற்ற காணியில்) கட்டிய சரஸ்வதி மண்டபமும் கொழும்பில் தமிழ் கலாசார நிகழ்வுகளும் இந்துசமய வைபவங்களும் வசதியாக நடைபெற உதவின.

இதற்கும் மேலாக இராமகிருஷ்ணமிஷன் வெள்ளவத்தையில் நிறுவிய மண்டபங்களும், மருதானையில் அமைந்த கதிர்காமத் தொண்டர் சபை மண்டபமும் இந்துக்களுக்கு பல வழிகளில் பயன்பட்டன. கொழும்பில் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களும் ஆறுநாட்டு வேளாளர் குழாமும் கட்டிய கோயில்கள் அவற்றின் தாக்கங்களும் இந்து சமய நிறுவனங்களுடன் இந்துக் கல்விக் கூடங்களுடனும் கைகோர்த்து உதவின.

வெள்ளவத்தை மாணிக்க விநாயகரை வழிபட்டுக் கொண்டு பிள்ளையாரின் அருளுடன் 1955 ஆம் ஆண்டு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இருக்கும் இந்து நிறுவனங்களும் ஆலய தர்மகர்த்தா சபைகளும் ஒன்று கூடி தங்களின் ஓர் கூட்டமைப்பாக – உச்ச நிறுவனமாக – அகில இலங்கை இந்து மாமன்றத்தை ஆரம்பித்தமை கொழும்பில் நடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களின் நிகழ்வுகளுக்கு மகுடம் வைக்கும் வைபவமாகக் கருதப்படலாம். இந்து மக்களுக்கு என ஒரு தலைமையகம் கொழும்பில் இருக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இந்த உச்ச நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. காலம் தாழ்த்தியாயினும் அரசிடம் குத்தகை பெற்ற காணியில் 1996 ஆம் ஆண்டில் மாமன்றத் தலைமையகம் பூர்த்தி செய்யப்பட்டது, கொழும்பில் இந்து மக்களின் வரலாற்றில் பொன் அத்தியாயம் ஒன்றெனக் கூறலாம். வேதனைகளும், சோதனைகளும் மிக்க காலகட்டத்தில் இந்து மக்கள் கொழும்பில் சவால்களைச் சந்திப்பதில் உசாராக இருந்திருக்கின்றார்கள் - என்பதற்கு இது ஒரு சான்று.

கொழும்பில் எமது பாரமபரியம் வளர உழைத்த இந்து சமூகத்தின் சில சங்கங்களைக் குறிப்பிடுவது கடமை. இந்த முயற்சிகள் பலவற்றில் கொழும்பு வாழ் இந்து சட்டதரணிகளும் இளைப்பாறிய நீதியரசர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் தந்த தலைமைத்தும் சரித்திரம் பகரும் உண்மை. அவர்கள் சுதந்திரமாக இயங்குகின்ற துணிச்சலுடன் குரல் கொடுக்கின்ற வர்க்கம் என்பது அதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அந்த வர்த்தகத்துக்குப் பெரிதும் உறுதுணை நின்ற இன்னுமொரு வர்க்கம் கொழும்பில் வாழ்ந்த இந்து வர்த்தகப் பிரமுகர்கள். தாராள சிந்தனையுடன் அவர்கள் இந்து நிறுவனங்களுக்கும் இந்துக் கல்விக்கூடங்களுக்கும் தந்துதவிய பேருதவி மறக்க முடியாத பெரும் புண்ணியச் செயல். இவை இயங்க பல்வேறு வழிகளில் உதவி செய்த இன்னும் ஒரு வகையினரும் இருக்கின்றார்கள். அவர்கள் அரச பதவி வகித்தவர்களும் இளைப்பாறிய அரச உத்தியோகத்தவரும் ஆவர். பின் கூறப்பட்ட வகையினரின் தொகை இன்று தொகையில் குன்றியிருப்பதும் ஆசிரியர்கள் **'டியூஷனில்'** மூழ்கியிருப்பதும் இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்கள் தங்கள் பிள்ளைகளுடன் முதுமைக் காலத்தைக் கழிக்க வெளிநாடுகள் சென்றிருப்பதும் இன்று இந்து நிறுவனங்களுக்குப் போதிய ஆளணி இல்லாத சங்கட நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன.

கொழும்பு வாழ் இந்து மக்களிடையே 1951ஆம் ஆண்டு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இருபத்து நான்கு இந்துப்பிரமுகர்கள் ஒன்று கூடி எதிர்காலச் சந்ததியினருக்கு எழுத்துக்களால் வர்ணிக்கப்பட முடியாத அளப்பரிய சேவை ஒன்றினை ஆற்றுவதற்கு வித்திட்டனர். உச்ச நீதி மன்றத்தின் மிகவும் உயர் நிலையில் (ஒரு தமிழ் இந்து என்ற காரணத்தினால் பிரதம நீதியரசர் பதவியில் மட்டுமல்ல நாட்டின் மகாதேசாதிபதியாகவும் தற்காலிகமாகவே மட்டும் அமர்த்தப்பட்ட, நிரந்தரமான பிரதம நீதியரசர் பதவி மறுக்கப்பட்ட நிலையில்) இருந்த மாண்புமிகு நீதியரசர் செல்லப்பா நாகலிங்கம் தலைமையில் அரச சேவையில் உயர் பதவி வகித்த பெருமக்கள், சட்டத்துறையில் பிரபல்யம் பெற்று வழக்குரைப்பதில் வல்லுநர்களாக உயர்ந்தவர்கள், பிரபல வர்த்தக பிரமுகர்கள், பட்டயக் கணக்காய்வாளர்கள், ஆலய அறங்காவலர்கள் என்று வரிசைப்படுத்தப்படக் கூடிய பெரியோர்கள் இந்து என்ற நாமத்துடன் முதற்தடவையாயக் 05.02.1951இல் கொழும்பில் ஒன்று சேர்ந்து குமுறி எழுந்தனர். புகழ் பூத்த சிவில் சேவை அதிகாரிகள் அமைச்சுச் செயலாளர்கள் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை, சேர். கந்தையா வைத்தியநாதன். கலாநிதிகள் ஏ. கந்தையா, வி. நடராசா பட்டயக் கணக்காய்வாளர் திரு. கு. சச்சிதானந்தா கொழும்பு மாநகர முதல்வராகப் பெருமை சேர்த்த திரு. எஸ். செல்லமுத்து.

பிரபல வர்த்தகத்துறை விற்பன்னர்கள் மாகாராஜா நிறுவனத்தைச் சேர்ந்த திரு. எஸ். மகாதேவன், வீரகேசரி நிறுவனத் தலைவராக உயர்ந்த திரு. ஆர். ஏ. நடேசன், மஸ்கன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஏ. சுப்பிரமணியம், காகிதத் தொழிற்சாலை கூட்டுத்தாபனத் தலைவராக உயர்ந்த திரு. கே. சி. தங்கராஜா, பொறியியல் நிபுணர் திரு. ஏ. இரகுநாதர். ரோயல்கல்லூரி இளைப்பாரிய துணையதிபர் திரு. எம். எம். குலசேகரம்.

சட்டத்துறையின் பிரபல்ய சட்டறிஞர்கள் கே. ரி. சிற்றம்பலம், எஸ். சோமசுந்தரம் (பின்பு வழக்கறிஞர் கழகத் தலைவரானவர்), செனட்டர் பெரி. சுந்தரம், செனட்டர் எஸ் நடேசன், (இராணி வழக்குரைஞர்), திரு. வி. ஏ. கந்தையா (பின்பு நடாளுமன்ற உறுப்பினரானவர்) மற்றும் திருவாளர்கள் சி. கே. இரத்தினம், எம். எஸ். கந்தையா, சங்கர்ஐயர் மகாதேவன், எம். வைரமுத்து, எம். கனகசபை ஆகியோருடன் சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலய அறங்காவலரும் அவர்களில் அடங்குவர்.

அவர்களில் ஒருவர் கூறியிருந்தார் "எமது சந்ததியினருக்கு ஒருகல்வி ஆலயத்திலும் பார்க்கப் பெரியதான எந்தப்பரிசை நாங்கள் வழங்க முடியும். இது இலேசாக வந்திருக்கும் பரிசு அல்ல. கொழும்பில் தமிழ் மக்கள் குறிப்பாக இந்து சமூகம் எதிர்நோக்கும் சவாலில் இருந்து பிறந்த பரிசு. இது எங்களின் பிள்ளைகள் கல்லூரி அனுமதி கோரி வேறு மத நிறுவனப் பாடசாலையை அனுகிய போது, அவர்கள் நீங்களும் பாடசாலை ஆரம்பிக்கலாம் தானே உங்களுக்கு இங்கு இடமில்லை' என்ற வினாவை எதிர் நோக்க வேண்டியிருந்தது" இந்த உள்ளக் கிடக்கையில் பூத்த கல்விப் பூங்காக்கள் அந்தப் பெரியவர்களிடம் இருந்து இளம் தலைமுறைக்குக் கிடைத்த அளப்பரிய முதுசொம்.

12.02.1951 இல் மேற்குறிப்பிட்ட உணர்வுடன் பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் கோயில் மடத்தில் **'பிள்ளையார் பாடசாலை'** என்ற பெயரில் அந்த இருபத்து நான்கு இந்துப்பெருமக்களும் கூடி இந்து வித்தியா விருத்திச் சங்கம் அமைத்து நிறுவிய கல்வி ஆலயம் தான் இன்று கொழும்பு மாநகரின் தேசிய பாடசாலை என்ற பெருமையுடன் பம்பலப்பிட்டியில் மிளிர்கின்ற **'இந்துக் கல்லூரி'** கொழும்பு. இந்து வித்தியா விருத்திச் சங்கத்தினர் பெரும் மனத்துடன் பெரும் திட்டம் போட்டார்கள். இரத்மலனையில் பல ஏக்கர் விசாலமாக இருந்த சதுக்கத்தை தமது சொந்த அடமானத்துடன் கடனெடுத்து வாங்கினார்கள். அங்கு 1955 இல் பெரும் கல்விக்கூடமாக கொழும்பு இந்து கல்லூரி கட்டப்பட்டது. இரத்மலனையில் நிறுவப்பட்ட கல்லூரிதான் கொழும்பு இந்துக் கல்லூரியாக இன்றும் விளங்குகின்றது. பம்பலப்பிட்டியில் ஆரம்பமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் பாடசாலையில் படிக்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் இரத்மலானையில் எழுந்த இந்துக் கல்லூரிக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதுதான் முதலில் போடப்பட்ட திட்டம், இரண்டும் இணைந்து ஒரே அறிவு ஆலயமாகவே கனவு காணப்பட்டது, ஆனால் 1956 ஆம் ஆண்டில் நடந்த இனக்கொடூர நிகழ்வுகளும், அதன் பின் வளர்ந்த இனக்குரோத நிகழ்வுகளும் பம்பலப்பிட்டியில் படித்த இந்துக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இரத்மலானைக்கு அனுப்பத் தயங்க வைத்தது இதன் ஷிளைவாக பம்பலப்பிட்டியில் பிள்ளையார் பாடசாலை கனிஷ்ட இந்துக் கல்லூரியாக - இறுதியாக தேசியக் கல்லூரி அந்தஸ்துடனான உயர் கல்வி நிலையமாக - வளர்ந்தது. இரத்மலானையில் **'கொழும்பு இந்துக் கல்லூரி'** அமைந்திருப்பதால் பம்பலப்பிட்டியில் உள்ள கல்லூரி **'இந்துக் கல்லூரி கொழும்பு'** எனப் பெயரிடப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் தூண்டுதலாலும் ஆதரவுடனும் தான் அக்கல்லூரியை அடுத்து இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி அரசாங்கத்தால் நிறுவப்பட்டது.

இந்து வித்தியா விருத்திச் சங்கம் உருவாக்கி விட்ட இரு இந்துக் கல்லூரிகளும் கொழும்பு வாழ் இந்து சமூகத்தினர் தமது பாரம்பரியத்தைப் பேணி கல்வி கற்று வளர வழிவகுத்தன என்றால் மிகையாகாது. இரத்மலானையில் எழுந்த இந்துக் கல்லூரி ஐம்பதுகளில் இந்துக்களிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய தென்றால் அந்த முழுப்பொறுப்பையும் பம்பலப்பிட்டியில் வளர்ந்துவிட்ட இந்துக் கல்லூரி எழுபதுகளிலும் எண்பதுகளிலும் ஏற்றுக் கொண்டது என்றே கூற வேண்டும்.

இரு கல்லூரிகளும் 1961 ஆம் ஆண்டு பாடசாலைகள் சுவீகரிப்புச் சட்டத்தைத் தொடர்ந்து அரச பாடசாலைகள் ஆகின. எனினும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியை கொழும்பு வாழ் இந்து சமூகம் தத்தெடுத்து வளர்த்து வந்திருக்கின்றது என்றே கூறலாம். இலங்கைக் கல்விச் சரித்திரத்தில் ஒரு பலம் மிக்க பெற்றோர் ஆசிரியர் சங்கம் (பின்பு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் எனப் பெயர் மாற்றப்பட்டது – சில ஆண்டுகள் பாடசாலை அபிவிருத்திச் சபையாகவும் இருந்தது) ஆக அது பணியாற்றியது. பெயர் பெற்ற பெரும் கல்லூரிகளில் புகழ் பெற்ற பழைய மாணவர்கள் செய்த சேவையை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றது. இக்கல்லூரி கொழும்பு வாழ் இந்து மக்களின் மையமாகவே வளர்ந்து வர ஆரம்பித்தது. **'வாழ்ந்தாலும் இந்துக் கல்லூரி தாழ்ந்தாலும், இந்துக் கல்லூரி'** என்று மேடைகளில் வர்ணிக்கப்படும் அளவிற்கு இந்நிறுவனம் இந்து மக்களின் வாழ்வுடன் ஒன்றிணைந்து விட்டது. கொடூர இனவெறியினால் காடையர்களால் வீடுகளில் இருந்து துரத்தப்பட்டபோது கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு தஞ்சம் தந்த நிலையங்களில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியும், எமது சங்கத்தின் சரஸ்வதி மண்டபமும் முக்கியமானவை. அதுபோலவே இந்நாட்டில் உலக இந்து மாநாடுகள் நடந்த வேளைகளிலும் அவை பல வழிகளில் கைகொடுத்திருக்கின்றன. எமது பிள்ளைகள் பண்ணுடன் திருமுறைகளைப் பாடுகின்ற பண்பினையும் இக்கல்லூரியும் ஏனைய இந்து பாடசாலைகளும் ஏற்படுத்தின.

இரத்மலானை அமர் கொழும்பு இந்துக் கல்லூரி அதன் அமைவிடம் காரணமாக பல இன்னல்களுக்கு எதிர்நீச்சல் கொடுக்க வேண்டியிருந்தது. இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்ட இந்துமக்கள் தங்களுக்கு உரித்தாக இருந்த இந்துச் சதுக்கத்தில் இருந்த காணிகளை விற்றுவிட்டு வெளியேறியமையும் ஒரு காரணம். இந்துக் கல்லூரிக்குப் பின்புறத்தில் இருந்த வளவில் மொறட்டுவ பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிலையங்களில் படித்த மாணவர்களுக்கு இந்து வித்தியா விருத்திச் சங்கம் நிறுவி நடத்தி வந்த விடுதியும் அரசினால் சுவீகரிக்கப்பட்ட நிலைமை மோசமடையச் செய்தன. இருந்தும் கல்லூரியை நிறுவிய ஸ்தாபக சங்கமான இந்து வித்தியாவிருத்திச் சங்கமும், அகில இலங்கை இந்து மாமன்றமும் மற்றும் கொழும்பு விவேகானந்த சபை போன்ற இந்து நிறுவனங்களும் அடுத்தடுத்து விடுத்த வேண்டுகோளினால் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச விடுத்த உத்தரவைத் தொடர்ந்து 1983 முதல் மூடப்பட்டிருந்த இந்துக் கல்லூரி மீண்டும் திறக்கப்பட்டது. இக்கல்லூரியை மீண்டும் பலப்படுத்த அகில இலங்கை இந்து மாமன்றம் அங்கு நடத்தி வரும் இலவச மாணவர் விடுதி ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றது. அதிபர் திரு.ந.மன்மதராஜனின் முயற்சியால் இந்துக் கல்லூரிக்குப் பின்புறம் உள்ள காணி அரசிடமிருந்து இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தினால் மீட்டெடுக்கப்பட்டது. அதன் ஒரு பாகம் அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வாங்கப்பட்டு அங்கு **'சக்தி இல்லம்'** இப்போது நடத்தப்பட்டுவருகின்றது. தனி மனிதர்கள் பலரினால் எதிர் நோக்க முடியாதவையை – சாதிக்க முடியாதவையை – நிறுவனமாக இயங்கும் போது நிறைவேற்ற முடியும் என்ற உண்மையை இரத்மலானையில் இன்றும் தலைநிமிர்ந்து நிற்கும் கொழும்பு இந்துக் கல்லூரியும் அகில இலங்கை இந்து மாமன்ற விடுதிகளும் உணர்த்துகின்றன.

கொழும்பிலுள்ள இந்துப் பாடாசாலைகள் எங்கள் பிள்ளைகள் இந்துப் பாரமபரிய முறையிலே உடுக்கவும், பண் தவறாது தேவாரம் பாடவும் தங்கள் கலைத்திறமைகளை வெளிக்காட்டவும் உதவின. அதற்கும் மேலாக இக்கல்விக்கூடங்களில் படித்த இந்து மாணவர்கள் தலைமைத்துவப் பயிற்சி பெறுவதற்கும், பல துறைகளில் முன்னணியில் திகழ்வதற்கும் ஊக்கமும் ஆக்கமும் தந்த பெருமை இப் பாடசாலைகளைச் சாரும். கொழும்பில் உள்ள இந்துப் பாடசாலைகளில் படித்த மாணவர்கள் இந்த நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிரபல்யமான முறைகளின் பல பதவிகளை வகிக்கும் திறனுடன் பயிற்றப்பட்டிருக்கின்றனர். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் படித்த மாண்மிகு நீதியரசர் சு. ஸ்ரீஸ்கந்தராஜா இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராக உயர்ந்திருப்பது நல்லதோர் உதாரணமாகும்.

இந்து மாணவர்கள் படிக்கின்ற ஏனைய பாடசாலைகளில், இந்து மாணவர் சங்கங்களை அமைத்து இயங்கினாலும் கூடஇந்து மாணவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது மறைக்க முடியாத உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 ஆம் ஆண்டில் 'வடமராட்சி ஓப்பரேசனை'த் தொடர்ந்து பலரும் வடகிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்பு மாநகருக்கு அகதிகளாக வந்து சேர்ந்த போது அவர்களின் பிள்ளைகள் படிக்க, பாடசாலை அனுமதி பெறுவது பெரும் பிரச்சனையாக இருந்தது. அவர்கள் பாடசாலை விலகல் பத்திரம் பெறாது வடகிழக்கிலிருந்து தமது பிள்ளைகளைக் கொண்டுவர நேர்ந்தது. அப்போது மீண்டும் கொழும்பு வாழ் இந்துப் பெருமக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவாரக அன்றிருந்த நீதியரசர். வி.மாணிக்கவாசகர் தலைமையில் கொழும்பு இந்து பிரஜைகள் குழு ஆரம்பிக்கப்பட்டது. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் பம்பரமாகச் சுழன்று பணியாற்றி வந்த துணை அதிபர் திரு.சு.பற்குணம் அவர்களின் தூண்டுதல்தான் இந்துப்பிரஜைகள் ஆரம்பிக்கப்பட முதற் கராணமாக அமைந்தது. அன்றைய சூழ்நிலையில் தமிழ் பிரஜைகள் குழு என்ற நாமத்திலும் பார்க்க இந்துப் பிரஜைகள் குழு என்ற பெயரில் இயங்குவது உசிதம் என்று உணரப்பட்டது குறிப்பிடத்தக்கது. அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, அன்றைய கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அன்றைய இந்தியத் தூதுவர் டிக்சிற் ஆகியோரைச் சந்தித்து இந்து மக்களுக்கு நிவாரணம் தேடிக் கொடுத்தது இந்தப் பிரஜைகள் குழு. சரஸ்வதி மண்டபத்திலும், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிலும் இயங்கிய கொழும்பு இந்து பிரஜைகள் செய்த முக்கிய பணி மாநகரில் வந்து குவிந்த வடகிழக்கு மாகாண மக்களுக்கு அவர்கள் முறைப்படி பாடசாலையின் விலகல் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்பன இன்றி கொழும்பு கல்லூரிகளில் அனுமதி பெற்றுக் கொடுத்தமை. அது மட்டுமல்லாமல் இடம்பெயர்ந்து வந்த ஆசிரியர்களையும் கொழும்பு பாடசாலைகளில் கற்பிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. அமைச்சுக்களின் அதிகாரிகளை இந்துக் கல்லூரிக்கும், சரஸ்வதி மண்டபத்திற்கும் அழைத்து பாடசாலை அனுமதி, ஆசிரிய நியமனம் போன்ற பணிகளில் அவர்களுடன் இணைந்து கொழும்பு இந்து பிரஜைகள் குழு பெரும் பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது. நாட்டின் ஜனாதிபதியை அவரின் செல்லப் பெயரினால் அழைத்துக் கதைக்கக் கூடிய செல்வாக்கு மிக்க நீதியரசர் மாணிக்கவாசகர் தந்த தலைமை குழுவின் பணிகளை நிறைவேற்ற மிகவும் உதவியது.

பம்பலப்பிட்டி கொழும்பு இந்துக் கல்லூரியும் சரஸ்வதி மண்டபமும் இந்நாட்டு தமிழ் மக்களின் மையங்களாகப் பலவழிகளிலும் இருந்திருக்கின்றன. அக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சபையில் பணியாற்றிய என்னை இந்து வித்தியாவிருத்திச் சங்கத்துடன் அணைத்தவர் கலாநிதி க.வேலாயுதப்பிள்ளை. செனட்டர் எஸ்.நடேசன் கியூ.சி, பட்டயக் கணக்காய்வாளர் திரு.கு.சச்சிதானந்தா ஆகியோர் ஏனைய இருவர் என்னை இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தில் ஈடுபடுத்த ஆர்வமாக அழைத்தவர்களில் குறிப்பிடத்தக்க பெருமக்கள். இந்துக் கல்லூரி இந்து வித்தியாவிருத்திச் சங்கத் தொடர்புகள்தான் மீண்டும் என்னை அகில இலங்கை இந்து மாமன்றச் சேவையிலும் தள்ளிவிட்டமையையும் மறவாது குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகள் எல்லாம் பொறுப்புகள் என்றாலும் என்னாலானமட்டில் என் இனத்திற்கும் சமயத்திற்கும் சேவையாற்ற சந்தர்பம் கிடைத்தமை இறையருள் என்றே அடக்கமாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

கடந்த மூன்று தசாப்தங்களில் கொழும்பு வாழ் மக்களும் ஏனைய தமிழ் பேசும் மக்களும் சொல்லொணாத் துயரங்களுக்கு உட்பட்டமை வரலாறு. அவர்களுக்குக் குரல் கொடுக்க அரசியல் தலைமைத்துவம் கூட இல்லாத கட்டம் நிலவியது. தமிழ் மக்களின் பிரச்சனைகளை எடுத்து உரைக்க குழுக்கள் இருந்தாலும் அவற்றிலும் மேலாக பொதுமக்களின் குரலாக அகில இலங்கை இந்து மாமன்றம் ஒலிக்கத் தயங்கவில்லை. ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், அரசாங்கத்துக்கும், வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கும் பொது மக்களின் பிரச்சனைளை அகில இலங்கை இந்து மாமன்றம் எடுத்துக் கூறியது. சிவாச்சாரியார்கள் கூட துன்புறுத்தப்பட்டனர். ஒரு கட்டத்தில் உச்ச நீதிமன்றத்துக்குச் சென்று மகா சிவராத்திரி முன் ஒரு சிவாச்சாரியாரை மறியலிலிருந்து விடுதலை செய்யவும் மாமன்றம் நடவடிக்கை எடுத்தது. களுத்துறையில் வாடி வந்த தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் குரல் கொடுத்ததுடன் அவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியும் அங்கு ஓர் இந்து வழிபாட்டு நிலையத்தினையும் மாமன்றம் நிறுவிக் கொடுத்தது. வடகிழக்கில் யுத்தத்தினால் வாடிய எமது மக்களுக்கு நிவாரண உதவிகளை கொழும்பு மாநகரில் சேர்த்து அனுப்பும் பணிகளிலும் அகில இலங்கை இந்து மாமன்றம் முன்னின்று உழைத்தது. கொழும்பு மக்கள் அனைவரும் இந்து மக்களின் உணர்வுகளுக்கு உருக்கொடுக்க இப்பணிகள் உதவின. அதேபோல மலையகத்தில் வெள்ளத்தினால் இந்து மக்கள் துயர் அடைந்த போதும் நிவாரணப் பொருட்களை கொழும்பு மாநகரில் சேர்த்து பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அடைய இந்து மாமன்றத்தினர் உதவினர். சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு மாமன்றத்தின் தலைமையில் பல நிவாரணப்பணிகள் செய்யப்பட்டன. மாமன்றம் இந்தப் பணிகளைச் செய்ய மையமாக சரஸ்வதி மண்டபமே உதவியது. கடந்த இரு தசாப்தங்களாக பல சமூகப் பணிகளில் மாமன்றம் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவற்றில் எல்லாம் இந்து வித்தியாவிருத்திச் சங்கமும் சரஸ்வதி மண்டபமும் பின்னிப்பிணைந்திருக்கின்றன. இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் வசதி குறைந்த மாணவ, மாணவியருக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் இலவச விடுதிகள் இந்து மாமன்றம் இந்து நிறுவனங்களின் சேவைகளின் மகுடமாக இன்று போற்றப்படுகின்றது. அதற்காக இந்து வித்தியாவிருத்திச் சங்கம் சுமார் 110 பேர்ச் காணியை மாமன்றத்திற்கு சகாயவிலையில் விற்றதுடன் மிகுதி 110 பேர்ச் காணியைப் பாவிக்கவும் அனுமதிதந்திருக்கிறது. யோகர் சுவாமிகளின் அடியார்கள் சிவயோக சமாஜநிதியம் அமைத்து மாதாந்தம் யோகர் சுவாமி வழிபாடு செய்யவும், ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம் நால்வர் குருபூசைகளையும் மற்ற சமய நாயன்மார்களை நினைவு கூரும் நிகழ்வுகளை நடத்தவும், யாழ் இந்து பழைய மாணவர் சங்கம், யாழ்இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், வடகீழ் மாகாண கல்லூரிகளின் பழைய மாணவர் சங்க ஒன்றியம் ஆகியவற்றின் செயற்பாடுகளுக்கும் சரஸ்வதி மண்டபம் மையமாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாமை அழிந்து அறிவொளி பரப்பும் தீபத்திருநாள்

**மயில்வாகனம் சர்வானந்தா**

அஞ்ஞானம் அழிந்து மெஞ்ஞானம் தழைத்த மகத்தான நாளை நினைவுபடுத்தும் திருநாளாக தீபாவளி விளங்குகிறது. நரகாசுரன் என்ற அசுரனால் தொல்லைகளையும் துன்பங்களையும் அனுபவித்த தேவர்கள், கிருஷ்ண பரமாத்மாவிடம் தங்கள் அவலநிலை பற்றி முறையிட்டனர். அடியார்களின் துன்பங்களை தீர்ப்பதற்கென அவதாரங்கள் பல எடுத்த கருணைக் கடலான பரந்தாமன், தேவர்களின் துன்பங்களைத் துடைக்க சத்திய பாமாவின் துணைகொண்டு நரகாசுரனை சம்ஹாரம் செய்கிறார். இவ்வாறு நரகாசுரன் சம்ஹாரம் செய்யப்பட்ட நாளை, ஏனைய மக்கள் மங்கள நாளாகக் கொண்டாடவேண்டும் என்று பூமாதேவி, கிருஷ்ணபரமாத்மாவை வேண்டுகிறாள். நரகாசுரனும் மனந்திருந்தி மெய்யுருகி பரந்தாமனின் செங்கமலச் சேவடிகளை வணங்கி, தான் மறையும் தினத்தை திருநாளாக அனைவரும் கொண்டாடவேண்டும் என்று வேண்டுகிறான். அன்றைய தினமான ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியன்று தீபாவளி கொண்டாடப்படுகின்றது. நரகாசுரனின் மைந்தனான பகதத்தன் என்பவனே, தனது தந்தை இறந்த தினத்தில் கிருஷ்ண பகவானைப் போற்றும் விதத்தில் முதன் முதலில் தீபாவளியைக் கொண்டாடினான் என்று வரலாறு கூறுகின்றது.

அஞ்ஞானத்தின் மூலவடிவம்தான் நரகாசுரன். அந்த அஞ்ஞான இருளைப்போக்கும் முகமாக எம்மைப் பீடித்திருக்கின்ற அழுக்காறு, ஆசை, வெகுளி, இன்னாச்சொல் ஆகியவற்றைப் போக்கும் வகையிவ் ஞானமாகிய தீபங்களை வரிசையாக ஏற்றி தீபாவளியைக் கொண்டாடுகின்றோம். இத்திருநாளிலே அதிகாலையில் எழுந்து இலக்குமி அருள் பெறுவதற்காக தாயாரின் கையால் அல்லது தாம்பூலம் தரித்த மனையாளின் கையால் தலையில் எண்ணெய் வைத்து நீராடுவது வழக்கம். அந்த எண்ணெயில் இலக்குமி வசிப்பதாகவும், அன்று நீராடும் நீரில் கங்கை வசிப்பதாகவும் புராணங்கள் கூறுகின்றன. அன்று அதிகாலையில் நீராடுவோர் கங்கையில் நீராடிய பலனைப் பெறுவர். இதனைத் தொடர்ந்து தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து எண்ணெய், பழம், வெற்றிலை, பாக்கு பழவகைகள், பொங்கல் மற்றும் இன்சுவை பலகாரங்களை இலக்குமி நாராயணனுக்கு படைப்பார்கள். பின்னர் இன்சுவைப் பண்டங்களை உறவினர், நண்பர்களுடன் சேர்ந்து உண்டு மகிழ்வர்.

தீபத்திருநாளின்போது தான்பெற்ற செல்வத்தை உடு புடவையாக புதிய ஆடைகளை அணிந்து, உற்றார், உறவினர்கள், ஏழை எளியவர்க்கும் பகிர்ந்து அளித்தும் மகிழ்வார்கள்.

வட இந்தியாவில் இன்னும் நரகாசுரனின் உருவ பொம்மைகளை கொளுத்தி கிருஷ்ண பகவானின் வெற்றியைக் கொண்டாடும் வழக்கம் இருந்து வருகிறது. நரகாசுரன் கிருஷ்ணபிரானால் ஆட்கொள்ளப்பட்டபோது தன்னைப்போல் எல்லோரும் பரந்தாமனின் திருவடிகளை அடைய வேண்டுமென்றும் அநியாயம், அக்கிரமம் செய்வோருக்கு தனது வரலாறு ஒரு பாடமாக இருக்கவேண்டும் என்றும் விரும்பியே இத்தீபாவளிதினத்தை அனைவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடும்படி வேண்டினான். நரகாசுரன் என்னும் அரக்கன் அழிந்த தினத்தில் தீமைகள், துன்பங்கள் களையப்பட வேண்டும் என்றுதான் தீபாவளி கொண்டாடுகின்றோம். ஆனால் அன்று அநேக இடங்களில் மது அரக்கர்களை அட்டகாசம் புரியவிட்டு வேடிக்கை பார்ப்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.

இந்தப் புனித நாளிலே அசைவத்தை தவிர்த்து சைவ உணவு உண்டு, எமது மனதில் உள்ள தீய எண்ணமாகிய இருள்போக மெஞ்ஞானமாகிய தீபங்களால் ஒளியேற்றி, தூய்மை பெற்றுத் திகழும்போது தீபாவளியானது அர்த்தமுள்ள பண்டிகையாகின்றது. 2011 கர ஆண்டு ஐப்பசிமாதம் 26ம் திகதி புதன்கிழமை தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட்டபோது அனைவருக்கும் இன்னல் நீங்கி இன்பம் பொங்கும் திருநாளாக அமைந்திருந்தது.

*சொல், செயல், சிந்தனையால் பிறரையும், பிற உயிர்களையும் துன்புறுத்தாமல் இருப்பது அகிம்சை. இந்நெறியே மனித வாழ்க்கைக்கு அடிப்படையாகும்.*

**– (சுவாமி கமலாத்மானந்தர்)**

*உடல் சிறந்த கருவி. உடல் உதவினால்தான் நாம் வாழ்க்கை எனும் கடலைத் தாண்டமுடியும். ஆகவே உங்கள் உடலை நினைத்து அது வலிமை பெற்றதாகக் கூறுங்கள், வல்லமை பெற்றதாகக் கூறுங்கள். உங்கள்மேல் அளவில்லாத தன்னம்பிக்கை வைத்திருங்கள்.*

**– (சுவாமி விவேகானந்தர்)**

*தெரியாத ஒருவனுக்கு ஒன்றைத் தெரியவைக்கலாம். தெரிந்தவனுக்கு இன்னும் சிறப்பாக அறிய வைக்கலாம். ஆனால் நல்லது கெட்டது எனத்தெரிந்தும், தெரியாதவனைப்போல் நடிப்பவனை சீர்திருத்த பிரம்மதேவனாலும் முடியாது.*

**– (திருமுருக கிருபானந்தவாரியார்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணியும் புலவர்மணியும்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்**

(துணைத்தலைவர் அகில இலங்கை இந்துமாமன்றம்)

திருக்கைலாய பரம்பரை, சைவத்தைச் செழித்து ஓங்க வைக்க எழுந்தது. அது மிகத் தொன்மையானது. பாரதத்தில் மட்டுமின்றி, எமது இலங்கைத் திருநாட்டிலும் அதன் செல்வாக்கு விளங்கியது. அந்நியர் ஆட்சிக் காலத்தில் அதற்கு நலிவு நேர்ந்தபோது, நிவிர்த்தி செய்து, மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்குத் தோன்றியது, நாவலர் ஞானபரம்பரை ஆகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பத்தொன்பதாம் நூற்றாண்டில், யாழ்ப்பாணத்தில் தோன்றி, தமது நாட்டிலும், தென்னிந்தியத் தமிழ் நாட்டிலும் சைவசமயமும், தமிழ் மொழியும், சைவத்தமிழ் மரபுக் கல்வியும் மீண்டும் மலர்ச்சிபெற்றுச் சீர்பெற அரும்பணி புரிந்தவர்.

நாவலர் ஞானபரம்பரையைத் தொடர வைத்து, விளங்கச் செய்த பெருமகன் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆவார். நாவலர் அணியின் விசுவாசம் மிக்க தளபதியாகவும், நாவலர் பெருமானின் நோக்கினையும் போக்கினையும், சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் உள்ளபடி அறிந்து, உலகோர்க் குணர்த்திய, தலைமகன் ஆகவும் பண்டிதமணி விளங்கினார். நாவலர், மற்றும் அவர்வழிவந்த ஞானபரம்பரையினர் ஆகியோரின் உண்மைச் சரித்திரங்களைத் தேடிக் கண்டு பிடித்து, நிலை நாட்டிய பெருமை பண்டிதமணியையே சாரும்.

வட இலங்கையின் தென்மராட்சி பிரிவில், மட்டுவில் கிராமத்தில், 1899 ஆம் ஆண்டு யூன் இருபத்தேழாந் தேதி, சின்னத்தம்பி, வள்ளியம்மை தம்பதிகளுக்குப் புதல்வனாகப் பிறந்தார் பண்டிதமணி அவர்கள். தமது மூன்றாம் வயதில் தாயை இழந்தார். தனங்கிளப்பு அவரின் தாயாரின் ஊர்.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கிழக்கு இலங்கையின் தவப் புதல்வர். மட்டக்களப்புத் தமிழகம் நமக்கு உவந்தளித்த தமிழ் மேதை. 1899ஆம் ஆண்டு, மண்டூர்ப் பதியில், பிறந்தார். அவரது தந்தையார் சோமநாதர் வண்ணக்கர் ஏகாம்பரம்பிள்ளை; தாயார் வண்ணக்கர் சிதம்பரப்பிள்ளை அவர்களின் மகள் சின்னத்தங்கம் அம்மையார். மட்டக்களப்பு வழக்கில், ஆலய நிதி நிர்வாகத்தலைவர், தர்மகர்த்தா என்பவர் வண்ணக்கர் என அழைக்கப்படுகிறார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மற்றும் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அகிய இருவரும் மரபுத்தமிழ், புராண இதிகாசங்களில் புலமை; தமிழ் இலக்கிய இலக்கண நூல் வித்தகம், ஆன்மிகம், மனிதத்துவம் என்பவற்றில் சிறந்து விளங்கியதுடன் அவர்களுக்கென மாணவர் பரம்பரையையும் உருவாக்கியவர்கள். அந்த வகையில், இலங்கையின் தமிழ் கூறும் இருமாகாணங்களையும் ஆன்மார்த்தமாக இணைத்த தமிழ்ச் சுடர் மணிகள் ஆக அவ்விருவரும் விளங்குகின்றனர்.

தெய்வ நம்பிக்கை, சைவப் பண்பாடு, புராணபடனத்தில் ஈடுபாடு, தமிழ் இலக்கிய இலக்கண அறிவு, எளிய வாழ்க்கை முறை, வெள்ளை உள்ளங்கள் நிரம்பப்பெற்ற குடும்பம், சுற்றம், உறவினர்கள், சமூகச் சூழல் என்பன கணபதிப்பிள்ளையின் இளம் பராய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் உரமும் வளமும் வலுவும் அளித்தன. அவரின் ஆளுமை உருவாவதற்கு அடித்தளமாகவும் அமைந்தன.

மட்டுவில் ஒரு சிறிய கிராமம். அங்குள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கற்ற ஆரம்பக் கல்வியுடன் கணபதிப்பிள்ளையின் முறைசார் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆயினும், முறைசாரா மரபுத் தமிழ்க் கல்வி தொடர்ந்தது. உரையாசிரியர் மட்டுவில் க. வேற்பிள்ளை அவர்கள் கணபதிப்பிள்ளையின் உறவினர். அவர் சிறந்த மரபுத் தமிழ்க் கல்விப் புலமையாளர்; நாவலர் பெருமானின் நேரடி மாணாக்கர்; நாவலரால் தாபிக்கப்பெற்ற சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமை ஆசான். அவரின் செல்வாக்குக்கு உட்பட்ட சிறுவன் கணபதிப்பிள்ளைக்கு முறைசாரா மரபுத் தமிழ்க் கல்வியில் விருத்தி பெற வாய்ப்புக்கள் கிடைத்தன. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பர்.

உரையாசிரியர் வேற்பிள்ளையின் மகன் பண்டிதர் மகாலிங்கசிவம், சிறுவன் கணபதிப்பிள்ளைக்குச் சின்னஞ் சிறு இலக்கியக் கதைகளையும், கவிதைகளையும் சொல்லிக் கொடுத்து சிறுவயதிலேயே இலக்கியச் சுவையை அவரிடம் ஏற்படுத்தினார். அக் காலத்தில் புராணபடனம் ஒரு கலையாகவே யாழ்ப்பாணத்து ஊர்கள் தோறும் நடைபெற்றது. கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பன, மட்டுவில் அம்மன் கோயில் மடத்தில் வருடா வருடம் படிக்கப்பெற்றுப் பதவுரை, விசேடவுரை, வியாக்கியானங்கள் நடைபெறும். உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, அவரின் மகன் பண்டிதர் மகாலிங்கசிவம் ஆகியோர் புராணபடனம், பயன் சொல்கிறார்கள் என்றால் அயற்கிராமங்களிலிருந்தும் மக்கள் வந்து கூடி விடுவார்கள்.

பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்களின் நயம்மிக்க உரை பண்டிதமணிக்குப் பெரும் இலக்கிய விருந்தாக அமைந்தது. இரவில் ம. க. வேற்பிள்ளை, பண்டிதர் மகாலிங்க சிவம் ஆகியோரிடம் புராணங்கள், இதிகாசங்கள், நிகண்டு, சிற்றிலக்கியங்கள் போன்றவற்றில் பாடங்கேட்பதுமுண்டு. இந்த இனிய ஆச்சிரிம வாழ்க்கையும் கணபதிப்பிள்ளைக்கு நிலைத்திருக்கவில்லை.

1912 ஆம் ஆண்டளவில் கணபதிப்பிள்ளையின் மட்டுவில் வாசம் முடிவுற்று, தனங்கிளப்பு வாழ்வு ஆரம்பித்தது.

தனங்கிளப்பு மருதநிலப்பாங்கான ஊர். மட்டுவிலிலிருந்து மூன்று மைல் தூரத்தில் அவ்வூர் அமைந்துள்ளது. நெல் வயல்கள் நிரம்பிய பிரதேசம். அங்கு, கணபதிப்பிள்ளைக்கு படிப்பினைத் தொடர்வதற்கான வாய்ப்பு வசதிகள் இல்லை.

சாவகச்சேரியில் வித்துவ சிரோமணி பொன்னம்பலம்பிள்ளை, அக்காலத்தில் புகழ் பெற்ற புலவர் ஆவார். அவரின் மாணாக்கர்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா உபாத்தியாயர், பொன்னம்பலப்புலவர், பொன்னப்பாபிள்ளை ஆகிய மூவரிடமும் சென்று பாரதம், நிகண்டு நூல்களைக் கணபதிப்பிள்ளை பாடங் கேட்டு வந்தார். தினமும் மூன்றுமைல் வரை நடந்து சென்று சங்கத்தானையில் கல்வி கற்கவேண்டியவரானார்.

கணபதிப்பிள்ளையின் துரதிர்ஷ்டம், பொன்னம்பலப்புலவர் வேற்றூர் செல்ல வேண்டி வந்தமையாகும். புலவரின் பிரிவு, கணபதிப்பிள்ளையை வாட்டியது. படிப்பிலும் மனந்தளர்ந்தார். இப்பொழுது தனங்கிளப்பு வயல் வேலைதான் தஞ்சம். தந்தையாருக்கு உதவியாகக் கம வேலைகளில் ஈடுபடுவதும், ஓய்வு நேரங்களில் தாயம் உருட்டுதல், சீட்டாடுதல் போன்ற கிராமியப் பொழுது போக்குகளில் காலத்தைக் கழிப்பதும் கணபதிப்பிள்ளையின் விதியாகிவிட்டது. இந்த வகையில், இளமைக் காலத்து ஐந்து ஆண்டுகள் கழிந்தன.

கணபதிப்பிள்ளைக்கு பதினெட்டு வயது ஆகிவிட்டது. 1917 ஆம் ஆண்டு அவரின் வாழ்வில் ஒரு புதிய திருப்பம் உதயமானது. எதிர்பாராத வகையில் ஏற்படுகின்ற நிகழ்வினைத்தான் அதிர்ஷ்டம் என்பர். கணபதிப்பிள்ளைக்குக் கிடைத்த இந்த அதிர்ஷ்டம், தமிழ் கூறும் நல்லுலகிற்குக் கிடைக்கப் பெற்ற பேரதிர்ஷ்டம் என்பது பின்னர்தான் தெரியவந்தது.

1917 இல் நடைபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயில் சப்பரம், தேர், தீர்த்தத் திருவிழாக்களைக் கண்டுகளிக்கக் கணபதிப்பிள்ளை விரும்பினார். தமக்குத் துணையாக, மட்டுவிலைச் சேர்ந்த தம்பிமுத்துப்பிள்ளையின் உதவியை நாடினார். தம்பிமுத்துப்பிள்ளை, திருவிழாக்கள் நடைபெறுகின்ற கோயில்களுக்கெல்லாம் சென்று, புத்தக வியாபாரம் செய்து வருபவர். அப்பொழுது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் புத்தக வியாபாரம் செய்து கொண்டிருந்தார்.

கணபதிப்பிள்ளை நல்லூருக்குச் சென்றார். தம்பிமுத்துப் பிள்ளையுடன் தங்கியிருந்து சப்பரம், தேர், தீர்த்தம் என்பவற்றைக் கண்டு மகிழ்ந்தார். அடுத்தநாள், தம்பிமுத்துப்பிள்ளை, கணபதிப்பிள்ளையையும் அழைத்துக் கொண்டு, நாவலர் சந்திக்கு அருகில் அமைந்துள்ள நாடகக் கொட்டகைக்குப் போனார். அன்று, பாஞ்சாலி சபதம் நாடகம் நடைபெற்றது. கிட்டப்பா, கோவிந்தசாமி உள்ளிட்ட தென்னிந்திய நடிகர்கள் நடித்தார்கள். கணபதிப்பிள்ளைக்குப் புது அனுபவம். அன்றைய நாடகம் பின்னிரவு மூன்று மணிக்கே முடிவடைந்தது. அதன்பின், நாடகக் கொட்டகைக்கு முன்னால் உள்ள கட்டிடத்தின் விறாந்தையில், சிறிது நேரம் படுத்து உறங்கலாம் என்று எண்ணிய இருவரும் அங்கு போய்த் தங்கினார்கள்.

அப்போது, "இதென்ன கட்டிடம்?" என்று கணபதிப்பிள்ளை வினவ, "இதுதான் நாவலர் பாடசாலை", எனத் தம்பிமுத்துப்பிள்ளை பதிலளித்தார். அடுத்த கேள்வி, "நாவலர் இப்பவும் இருக்கிறாரா?" என்பதாகும். கணபதிப்பிள்ளையின் இந்தக் கேள்வி, தம்பிமுத்துப்பிள்ளையைத் திகைக்க வைத்தது. நம்மையும் ஒரு கணம் திகைக்க வைக்கிறதல்லவா! இந்தக் கணபதிப்பிள்ளைதான் பின்னர் நாவலர் ஞானபரம்பரையை துலங்கவைத்த ஞானபானுவாகத் திகழ்ந்தவர் என்றால் யாருக்குத்தான் வியப்பு ஏற்படாது.

கணபதிப்பிள்ளை நாவலரால் ஆட்கொள்ளப்பட்ட விதம் இவ்வாறுதான் அமைந்தது. அன்றுதான் கணபதிப்பிள்ளைக்கு நாவலர் பாடசாலையில் சேர்ந்து படிக்கவேண்டும் என்ற உத்வேகம் கருக்கொண்டது.

மட்டுவில் கணபதிப்பிள்ளைக்கு நாவலர் காவிய பாடசாலையில் கல்வி கற்கவேண்டுமென்ற வேணவா எழுவதற்குக் காரணர் ஆக விளங்கிய தம்பிமுத்துப் பிள்ளைதான், மட்டக்களப்பு ஏ. பெரியதம்பிப்பிள்ளை, நாவலர் காவிய பாடசாலையில் சேர்ந்து கல்வி பயில்வதற்கும் காரணகர்த்தாவாக விளங்கினார் என்பதை அறியும் போது எத்துணை மகிழ்ச்சி எய்துகிறோம். தமிழர் தவம் தம்பிமுத்தர் வடிவில் வந்தது; பண்டிதமணியும் புலவர்மணியும் மலர்ச்சிபெற வழிசெய்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மண்டூர், பசுமை நிறைந்த விசவாயக் கிராமம். மட்டுவிலைப் போன்று மண்டூரும், மரபு வழித் தமிழ்க் கல்வியையும், புராண இதிகாசங்களையும் போற்றி வளர்த்து வந்த ஊர் ஆகும். முருகப் பெருமான் உறையும் திருவூர். பெரிய தம்பிப்பிள்ளை அவர்களின் தந்தையார், மண்டூர் முருகன் ஆலயத்தின் வண்ணக்கர். அவர் பெரிய புராணம், கந்தபுராணம், திருச்செந்தூர்ப் புராணம் ஆகியவற்றில் புலமையுடையவர். அவரின் துணைவியார் சின்னத்தங்கம். அவர்களின் மூத்த புதல்வன் பெரியதம்பிப்பிள்ளை.

வித்துவான் சந்திரசேகர உபாத்தியாயர், புலோலியைச் சேர்ந்தவர். அவர் மண்டூர்க் கிராமத்திலேயே தங்கி, பெரியதம்பிப்பிள்ளைக்கும் வேறு சிலருக்கும் தமிழ் சொல்லிக்கொடுத்தார். ஆனாலும் தொடர முடியவில்லை. பெரியதம்பிப்பிள்ளை ஆங்கிலம் கற்க விரும்பினார். கல்முனை மெதெடிஸ்த பாடசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அங்கும் ஆங்கிலக்கல்வியை அவரால் தொடரமுடியவில்லை.

பெரியதம்பிப்பிள்ளையின் முறைசாரா மரபுத்தமிழ்க் கல்வி தொடர்ந்தது. அவரது வீட்டுடன் சேர்ந்து ஒரு தனிக்கட்டிடம் இருந்தது. அங்கு மண்டபமும் உள்ளது. அதில் தமிழ்க் காவிய பாடசாலை நடத்தப்பட்டது. பெரியதம்பிப்பிள்ளை, ஆசிரியரோடு உடனுறைந்து, உண்டு கல்விகற்கும் வாய்ப்பினைப் பெற்றார். இக்காலப் பகுதியில் மட்டுவில் தம்பிமுத்துப்பிள்ளை என்பவர், புத்தக விற்பனைக்காக மண்டூர் முருகன் ஆலயத்திற்குத் திருவிழாக் காலங்களில் வந்து போவதை வழக்கமாகக் கொண்டவர். மண்டூரில் அங்குள்ள தமிழ் அறிஞர்களோடு கலந்து பழகுவது வழக்கம். அவர்களுள் பெரியதம்பிப்பிள்ளையின் தந்தையார் ஏகாம்பரம்பிள்ளையும் ஒருவராவார். அப்பொழுது அவரது மகன் பெரியதம்பிப்பிள்ளையின் தமிழ் ஆர்வத்தைக் கண்டு அவரை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து, அங்கு மரபுத் தமிழ்க்கல்வியை அவர் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளலானார்.

மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளை உபாத்தியாயரின் கடைசி மகன் நடராசா என்பவர். அவர் ஆங்கிலக்கல்வி கற்று விஞ்ஞானப் பட்டதாரி ஆனவர். கணபதிப்பிள்ளை தனங்கிளப்பு வாசியான பின்பும், அங்கு சென்று உறவுகொண்டாடி வருவாராம். கணபதிப்பிள்ளையை எவ்வாறு படிப்பில் தொடரவைக்கலாம் என்பதுதான் நடராசாவின் சிந்தனையாக இருக்குமாம். தம்பிமுத்துப்பிள்ளை, கணபதிப்பிள்ளையின் விருப்பத்தையும் நடராசாவிடம் தெரியப்படுத்தியிருந்தார்.

ஒருநாள் நடராசா இந்து சாதனப் பத்திரிகையுடன் கணபதிப்பிள்ளையிடம் வந்தார். அதில் விளம்பரம் ஒன்று காணப்பட்டது. வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலையில் காவிய வகுப்பு ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும், அதில் கற்பதற்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளார்கள் என்றும், தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்குக் கல்வி, உணவு, நூல்கள், இருப்பிட வசதி என்பன இலவசமாக வழங்கப்படும் என்றும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கணபதிப்பிள்ளையின் மகிழ்ச்சி கரைபுரண்டது. தந்தையாரும் தனது உடன்பாட்டைத் தெரிவித்தார். நடராசா காரியத்தை முடித்து வைத்தார். 1917 ஆம் ஆண்டு கார்த்திகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்தில் நடைபெற்ற தெரிவுப் பரீட்சையில் சித்திபெற்று, காவிய பாடசாலையின் மாணவர் ஆனார். கணபதிப்பிள்ளை நாவலர் ஞானபரம்பரையின் உறுப்பினர் ஆவதற்குக் கால்கோள் இடப்பட்டது.

அடுத்து, தம்பிமுத்துப்பிள்ளை மண்டூரிலிருந்து மட்டுவில் திரும்பியதும், நடராசா அவர்களைச் சந்தித்து, பெரியதம்பிப்பிள்ளையிடம் நாவலர் காவியபாடசாலையில் கல்வி கற்கும் நாட்டத்தைதான் ஏற்படுத்திவிட்டதாகவும் அதனை நிறைவேற்ற உதவுமாறும், அவரைக் கேட்டிருந்தார். நடராசா அவ் வேண்டுகோளையும் நிறைவேற்றி வைத்தார்.

கணபதிப்பிள்ளை, பெரியதம்பிப்பிள்ளை ஆகிய இருவரினதும் நாவலர் காவிய பாடசாலைப் பிரவேசத்திற்கு தம்பிமுத்துப்பிள்ளை, நடராசா ஆகிய இருவரினதும் பங்களிப்பு மகத்தானது. இந்நிகழ்வு 1917 இல் இடம்பெற்றது.

காவிய வகுப்பில் கணபதிப்பிள்ளை, பெரியதம்பிப்பிள்ளை ஆகியோருடன் பன்னிருவர் கற்றனர். காவிய பாடசாலையில் தமிழ் இலக்கியம், இலக்கணம்; சைவசமய நூல்கள்; தருக்கம் என்பன போதிக்கப்பட்டன. சுன்னாகம் குமாரசாமிப் புலவர் தலைமை ஆசான்ஆக விளங்கினார். பாடசாலையின் மனேஜர் த. கைலாயபிள்ளை, மற்றைய ஆசிரியர். இவர்கள் இருவரும் நாவலரிடம் நேரடியாகக் கற்றுத் தேர்ந்தவர்கள். மற்றொரு ஆசிரியர், வித்துவான் ந. சுப்பையாபிள்ளை ஆவார்.

மாணாக்கர்கள் வெறுமனே நூல்களை மாத்திரம் பாடம் பண்ணவில்லை. அவர்கள் ஆசிரியர்களையும் கற்றனர். இதுவே மரபு வழிக் கல்வியின் உயிர்நாடி. ஆசான்களைக் கற்றல் என்பது மாணாக்கர்கள், ஆசிரியர்களை விட்டு நீங்காது, அவர்களுக்குக் கீழ்ப்பணிந்து, அவர்களின் நடை, உடை, பாவனை மற்றும் ஒழுக்க ஆசார சீலங்கள், மனித விழுமியப் பண்புகள், குண நலன்கள், தூய ஒழுக்கம், பண்பாடு என்பவற்றைக் கற்று அறிதலும், ஒழுகுதலும் ஆகும். "கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம், என்பது நாவலர் வாக்கு. கணபதிப்பிள்ளை, பெரியதம்பிப்பிள்ளை இருவரும் அந்த வகையில் வாழ்நாட்சாதனையாளர்கள் ஆக விளங்கினர்.

இவ்விருவரும் காவிய பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் இவர்களுக்கிடையே காணப்பட்ட ஒத்துணர்வினைப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது நோக்கற்பாலது.

"ஆங்கில மோகம் தலைக்கு மீறித் தாண்டவமாடிய அக்காலத்திலே – தகுதியுள்ளவர்கள் தமிழைப் புறஞ் செய்த அந்தக் காலத்திலே படிப்பு வாசனையின்றியிருந்த என்னையும் அவர்கள் அந்தக் காவிய வகுப்பில் சேர்க்க நேர்ந்தது. மட்டக்களப்பிலிருந்தும் ஒருவர் வந்து சேர்ந்தார். அவருக்கு ஆங்கில அறிவும் உண்டு. கவிதை புனையும் ஆற்றல் இயற்கையில் அவர்பால் இருந்தது. அங்கே தகுதிவாய்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். ஆங்கிலத்தை மேலும் விருத்தி செய்து புருஷ இலட்சணமான உத்தியோகமொன்றைப் பெற்றுக் கொள்ள விரும்பாமல், தமிழ் படிப்பதற்கென்று அவர் அங்கிருந்து இங்கு வந்தது எங்களுக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது. அவர்தான் ஏ. பெரியதம்பிப்பிள்ளை, புலவர்மணி". இவ்வாறு பண்டிதமணி குறிப்பிட்டுள்ளமை அவர்களின் ஆத்மீக இணைப்பை எடுத்துக்காட்டுகிறது.

பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கு 1978 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அதனை அறிந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள், பண்டிதமணிக்குப் பாராட்டும் நல்வாழ்த்தும் தெரிவித்திருந்தார்கள். அவர்கள் இருவரிடையேயும் நிலவிய நட்பின் சிகரம் ஆக அப்பாராட்டு விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

"இலக்கிய கலாநிதி பண்டிதமணியும் நானும் ஒரே மரத்தின் இரண்டு கிளையில் ஒருமிக்கப் பழுத்த இரண்டு பழங்கள். அவர் சற்றே இளையவர். அக்கிர பூசை பெறுவதற்கு உரியவர். என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ. பண்டிதமணிக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமையால் இலங்கைப் பல்கலைக்கழகம் தன்னையே கௌரவித்துக் கொண்டது. கலாநிதிப்பட்டம் பண்டிதமணியை அடைந்ததால் அது தனக்கே ஒரு மதிப்பைப் பெற்றுள்ளது. " இவ்வாறு புலவர்மணி, பண்டிதமணியைப் பாராட்டி மகிழ்ந்தமை, அவர்கள் நாவலர் காவிய பாடசாலையில் பெற்ற மரபுத் தமிழ்க் கல்வியின் பயன் ஆகும்.

நாவலர் காவிய பாடசாலையில், பண்டிதமணி பெற்ற, மரபுத் தமிழ்க் கல்வி மற்றும் வாழ்க்கை அனுபவங்களின் பேறாகவே நாவலரின் சைவப் பேரியக்கத்தின் இருபதாம் நூற்றாண்டுக் காவலராகவும், அவரின் ஞானபரம்பரையின் முக்கிய இயக்குநராகவும், செயலராகவும் விளங்குவதற்குத் தேவையான முழுமையான தகைமைகளையும் பண்டிதமணி பெற்றார்.

நாவலர் காலச் சூழ்நிலை வேறு, பண்டிதமணி பணியாற்ற எதிர் நோக்கிய காலச்சூழ்நிலை வேறு என்பதையும் பண்டிதமணி கருத்திற் கொள்ளத் தவறவில்லை. பழமையில் பற்றுவைக்கும் பண்பையும் புதுமையிலே கருத்தைச் செலுத்தும் நிலையையும் அவர் கொண்டிருந்தார். பழமை என்பது பின் நோக்கேயன்றிப் பிற்போக்கு அன்று. பின் நோக்கும் முற்போக்கும் இணைந்து வளர முடியும், அவ்வாறு இணைந்து வளரவும் வேண்டும் என்பது காலத்தின் தேவை. இப் பின்னோக்குதல், அதாவது மரபு, பழமையில் பற்றுவைத்தல், புதுமைக்கு அடித்தளமாகவும் வளமாக்கியாகவும் பயன்அளிக்கும் என்பதைப் பண்டிதமணியும், புலவர்மணியும் அறிந்திருந்தனர். அதற்கேற்பத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டனர்.

"எனது முன்னோரைக் காட்டிலும் என்னால் அதிக தொலைவு காண முடிந்தமைக்குக் காரணம், அவர்களின் தோள்களின் மீது நின்று பார்த்ததே," என்கிறார் விஞ்ஞான மேதை நியூட்டன். முன்னோர்களின் தோள் என்பது நமது சமுக மரபைக் குறிப்பதாகும்.

1926 ஆம் ஆண்டு, மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்றுப் பண்டிதர் பட்டத்தையும், பெற்றார் கணபதிப்பிள்ளை.

நாவலர் காவிய பாடசாலையில் பண்டிதமணி கற்றுக் கொண்டிருந்த காலத்திலும், அதற்குப் பின்னைய காலங்களிலும் ஆங்கிலக் கல்வி முறைமையில் விஞ்ஞானம், சமூகவியல், ஆங்கில இலக்கியம் கற்றவர்கள், அதேவேளை தமிழ் இலக்கிய ஆர்வலர்களாகவும் விளங்கியவர்கள் சிலரும் பண்டிதமணி கணபதிப்பிள்ளையும் திருநெல்வேலியில் உள்ள ஒரு வளவில் உள்ள ஈரப்பலா மரம் ஒன்றின் கீழ் அவ்வப்போது கூடி, சைவமும் தமிழும் பற்றியும்; அறிவியல், சமூகவியல், மேலைத்தேயக் கீழைத் தேயத் தத்துவம், ஆங்கில இலக்கியம், ஆங்கிலக்கல்லூரி அனுபவங்கள் போன்ற பல்வேறு முற்போக்கு விடயங்கள் பற்றியும் ஆழமான கருத்துப் பரிவர்த்தனைகள், விமர்சனங்கள், உரையாடல்கள் நடத்தி வந்தார்கள். இதனை "ஈரப்பலாச்சங்கம்" என்றழைத்தனர். பண்டிதமணி புதியனவற்றில் நாட்டம் செலுத்தும் பண்பினைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...றுவதற்கும், புதிய கோட்பாடுகள் மற்றும் ஆராய்ச்சிகள் பற்றி ...நுக்கமாக அறிந்து கொள்வதற்கும் தமது அறிவு எல்லையைத் ...மிழ் வட்டத்திற்கு அப்பாலும் விரிவுபடுத்திக் கொள்வதற்கும் ...ரப்பலாச்சங்கம்'', மற்றும் கலைப் புலவர் நவரத்தினம் நிறுவிய கலாநிலையம் போன்ற அமைப்புக்கள் களம் அமைத்துக் கொடுத்தன.

பண்டிதமணி ஆசிரியராகப் பணியாற்றுவதற்கு ஆசிரியர் பயிற்சித் தராதரப் பத்திரம் தேவைப்பட்டது. 1927 ஆம் ஆண்டில், கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் சேர்ந்து, இரண்டு ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெற்று அதற்குரிய தராதரப் பத்திரத்தையும் பெற்றுக் கொண்டார்.

1929 ஆம் ஆண்டு, பண்டிதமணி அவர்கள் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளர் ஆக நியமனம் பெற்றார். தொடர்ந்து முப்பது ஆண்டுகாலம் அப்பதவியை அலங்கரித்தார். இக்கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கானோர்க்கு அவர் ''குருமணி'' யாக விளங்கினார். பண்டிமணி, நாவலரின் சைவத்தமிழ்ப் பேரியக்கத்தின் காவலராகத் திருநெல்வேலியில் வீற்றிருந்து உருவாக்கிய சைவத் தமிழ் ஆசிரியச் செம்மல்கள் இலங்கையின் பலபாகங்களிலும் உள்ள பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் நல்லாசிரியர்களாக அமர்ந்து அறிவோடு சைவத்தமிழ்ப் பண்பாட்டையும் பரப்பினார்கள். நாவலர் ஞானப்பரம்பரை பண்டிதமணியின் தலைமையில் பெருவளர்ச்சி கண்டது.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை கவிதை இயற்றும் புலமையும், இலக்கிய இரசனையும் உடையவர். அவருடைய இயல்பான தமிழ்ப் புலமையையும் கவித்திறனையும் மதிப்பிட்டு அவருக்குப் ''புலவர்மணி'' என்ற புகழ்சான்றுபட்டத்தை மட்டக்களப்புத் தமிழ்க் கலைமன்றம் வழங்கிக் கௌரவித்தது.

புலவர்மணி அவர்கள் பல துறைகளில் புகழ்பெற்று விளங்கிய ஒருவராவார். ''அவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர்–சிறந்த கவிஞர்– சிறந்த வசனகர்த்தா–சிறந்த மொழி பெயர்ப்பாளர்–சிறந்த நல்லாசிரியர்–சிறந்த அரசியல் ஆய்வாளர்–சிறந்த பண்பாளர்–சிறந்த பக்தர்–சிறந்த நண்பர்–சிறந்த சீர்திருத்தவாதி–சிறந்த புரட்சியாளர்–சிறந்த பத்திரிகையாளர்.....''

''கண்ணபரமாத்மாவுக்கு அர்ச்சுனன் எப்படியோ அப்படித்தான் சுவாமி விபுலானந்தருக்குப் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் என்று சொல்லலாம். கண்ணன் அர்ச்சுனனுக்கு நண்பன், மைத்துனன், அதேவேளையில் குருவும் ஆவார்.''

''அதேபோல், சுவாமி விபுலானந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் ஒரு நெருங்கிய நண்பராகவும் உறவினராகவும் விளங்கினார். அதேவேளை, ''சுவாமிகளைக் குருவாகவும் ஏற்றுக்கொண்டு அவரிடம் தமிழ் இலக்கியமும் ஆங்கில இலக்கியமும் கற்றார், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்''. –இவ்வாறு, தினபதி – சிந்தாமணி பிரதம ஆசிரியராக விளங்கிய எஸ். டி. சிவநாயகம், புலவர்மணியின் ''உள்ளதும் நல்லதும்'' என்னும் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1980 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்கு இலக்கிய வித்தகர் எனும் விருதை வழங்கிக் கௌரவித்தது.

பகவத்கீதை, புலவர்மணியின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த நூல். கீதையின் சுலோகங்களை வெண்பாக்களாகப் பாடவேண்டும் என்னும் எண்ணம் அவர் மனதில் எழுந்தது; பாடினார்; நூலாக வெளிவந்தது. 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டு விழாவில், புலவர்மணியின் பகவத் கீதை வெண்பாக்கள் அரங்கேற்றப்பட்டன. அப்போது பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள்,

''கீதை கவிசெய்து கீர்த்தி மிகப் பெற்றான்
ஏபெரியதம்பி எனதன்பன் – ஓதக்கேள்
பாட்டுக்கொருபுலவன் பாரதியென்றார் ஒருவர்
பாட்டுக் கிவன் என்பன் யான்''

எனச் சாற்றுகவி வழங்கித் தன் அன்பின் திறத்தை வெளிப்படுத்தினார்.

1951 இல், யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்ச்சிக்கழகம் எடுத்த தமிழ் விழாவில், இந்திய, இலங்கைத் தமிழறிஞர்களின் ஆய்வுப் பேருரைகள் இடம் பெற்றன. பண்டிதமணியின் ஆய்வுப் பேருரை பெரிதும் விதந்து பேசப்பட்டது. அவரின் பேருரை தினகரன் பத்திரிகையில் வெளிவந்தது. தினகரன் ஆசிரியர் திரு. வி. கே. பி. நாதன், ஆய்வுப் பேருரையைப் ''பண்டிதமணி'' என்ற மகுட நாமத்துடன் வெளியிட்டார். அது நிலைத்து நின்று விட்டது. இதற்கு அநுசரணையாக, கல்கி திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி தமது கட்டுரைகளிலும் ''பண்டிதமணி'' எனும் பதத்தைப் பயன்படுத்தினார். ''பண்டிதமணி'' எனப் பண்டிதர் கணபதிப்பிள்ளைக்கு வழங்கப்பட்ட பட்டம் தமிழ் கூறும் நல்லுலகினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது.

பண்டிதமணி அவர்கள் நாவலர் பெருமான் வழிநின்று சைவத் தமிழ்க் கல்விப்பணி ஆற்றியவர்; உரைநடை வித்தகர். புலவர்மணி அவர்கள் நாவலர் வழிவந்த குமாரசாமிப் புலவரால் ஆட்கொள்ளப்பட்டு, விபுலாநந்த அடிகளாரின் அடிச்சுவட்டில் இராமகிருஷ்ண சங்கத் தத்துவத்தை ஏற்று சமயசமரச வழிநின்றவர்; கவிதையாக்கத்தில் சிறந்து விளங்கியவர்; இலக்கிய வித்தகர். இருவரும் புதுமையையும் பழமையையும் மதித்துப் போற்றிய தமிழ்ச் சுடர்மணிகள்; செந்தமிழைப் பேணி வளர்த்த பெருமைக்குரியவர்கள்.

## மாமன்ற நடுத்தீர்ப்பு நிலையம்

ஓர் இந்து ஆலயம் அல்லது இந்து சமய நிறுவனம் அவற்றின் நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பாக ஏதேனும் பிணக்குகள் இருப்பின் அப்பிணக்கினை ஆற்றுப்படுத்தும் நோக்கத்திற்காக அகில இலங்கை இந்து மாமன்றம் ''நடுத்தீர்ப்பு நிலையம்'' ஒன்றினை நிறுவியுள்ளது என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்பு விதிகளுக்கமைவாக விசாரணை நடத்தப்பட்டு நடுத்தீர்ப்பு வழங்கப்படும். இது சம்பந்தமான விதிமுறைகளோ அல்லது வேறு விளக்கங்களோ தேவைப்படுவோர் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளலாம். மாமன்ற தொலைபேசி 011-2434990, தொலைநகல் 0112344720 எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

இதன் பயனாக இந்து ஆலயம், இந்து சமய நிறுவனங்கள் தமது பிணக்குகளை நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டிய அவசியமில்லை. இந்து சமய அறிவுசார்ந்த நடுவர்கள் மூலம் இப்பிணக்குகள் விரைவாகவும் இலகுவாகவும் தீர்த்துவைக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல கதி கேள் மனமே

A. இராஜரட்ணம்.
ஒய்வு பெற்ற பிரதிக் கணக்காய்வாளர் நாயகம்

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி, முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது நாவலர் வாக்கு, முத்தியின்பம் என்பது பிறப்பின்றி விடுதலை பெறுதல் என்று பொருள்படும். ஆன்மாவானது மீண்டும் உலகில் வந்து பிறவாமையாகும். நாங்கள் இன்று உடலால் வினையையும், வினையால் உடலையும் மாறிமாறி எடுத்து உழலுகிறோம். இதற்குக் காரணம் எமது அறியாமையே. அறியாமையால் நாம் மனம் போன போக்கில் போய்விடுகிறோம். இதனை "மாறி நின்றென் மயக்கிடும் வஞ்சப்புலன்" என்றார் மணிவாசகர். வஞ்சப்புலன் மூலம் மனம் எமக்குக் கேடு செய்கின்றது. அதனாலன்றோ அருணகிரியார் மனத்தை முன்னிலைப்படுத்தி நல்லுபதேசம் செய்கிறார்.

"கெடுவாய் மனனே" என்றும்," உய்வாய் மனனே" என்றும்,
" புரிவாய் மனனே" என்றும்

அனுபூதியில் சுட்டிக் காட்டுகிறார். தவநெறிவிட்டு, அவநெறிப்பட்டு, அழிகின்ற உலகினருக்கு அறிவுறுத்தும் பொருட்டு அடிகளார் மனதை முன்னிலையாக்கிக் கூறியுள்ளார்.

மனம் என்பது பல பிறவிகளிலும் செய்து கொண்ட தீவினையால் கல்போல் ஆகிவிட்டது. அதனை "நெஞ்சச் கனகல்", என்றும்,

"திணியான மனோசிலை" என்றும்,

அநுபூதியில் குறிப்பிடுகின்றார்.

"கள்வனுக்கு விதானை வேலை கொடுப்பது" என்றொரு பேச்சு வழக்கு ஊரில் உண்டு. இதன் கருத்து யாதெனில், அட்டூழியங்களுக்கு கர்த்தாவாக உள்ளவனை இனங்கண்டு, புத்தி மதிமூலம் திருத்தினால் நன்மையுண்டு. ஆகவே, அருண கிரியாரும் "கதிகேள்" என்று மனதிற்கு உபதேசம் செய்கிறார்.

மனதில் பல தீய குணங்கள் படிந்துள்ளன. காமம் முதலிய ஆறுபகைவர்களே அவையாகும். அவற்றிலே மிகவும் கொடியது ஆசை ஆகும். இது மனதைப் பற்றிக்கொண்டு கேடு விளை விக்கும். இதனால் துன்பம் உண்டாகிறது.

"ஆசை படப்பட ஆய்வரும் துன்பம் ஆசையைவிடவிட ஆனந்தம் மேல் எழும் " என்றார் திருமூலர். ஆசை அற்றால், அதன் இனமாகிய ஏனைய ஐந்தும் அறும். பிறவித்துன்பத்திற்கு வித்தாக இருப்பதும் இந்த ஆசை தான். ஆகவே ஆசையை விட்டால் இறைவன் திருவருளைப் பெறலாம்.

ஆசை மூன்று வகையாக மனதை மயங்குறச் செய்யும். அவை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை. மண் ஆசை நிலத்திலும் நாட்டிலும் உண்டாகும் ஆசை. பெண் ஆசை பருவம் பற்றி வருவது. மற்றையது பொன் ஆசை பொருள் பற்றி வருவது. இது அநேகமாக எல்லோரிடமும் உள்ளது. தான் ஈட்டிய பொருளையும் வேறுவழியில் வந்த பொருளையும் பாதுகாப்பதும் மேலும் மேலும் பிறர் பொருளைக் கைப்பற்ற முயல்வதும் போன்ற செயலுக்குக் காரணமாக இருப்பது இந்தப் பொருளாசைதான்.

முன்பு கூறியபடி ஆறுபகைவர்களுள் தலைமையானது பொருள் ஆசை. இந்த ஆசையில் உள்ள மூன்று பிரிவில் தலைமையானது பொருள் ஆசை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதனை அறுப்பது மிகவும் அரியசெயல். அதற்கு வழி என்ன? இறைவனுடைய பற்றை இறுகப் பற்றிக் கொண்டால் ஏனைய பற்றுகள் வலுவிழந்து அகன்று விடும். இதனாலேயே தான்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்றார் வள்ளுவர்.

ஒரு குழந்தை தன் கையில் ஒரு அபாயகரமான ஆயுதத்தை வைத்து விளையாடுகிறது. அதனைக் காண்பவர் மனம் ஏங்குகிறது. குழந்தையிடம் அதைப் பறித்தால் அழும். அதற்கு ஒரு நல்ல விளையாட்டுப் பொருளைக் காட்டினால் பிள்ளை தானாகவே அந்த அபாயகரமான பொருளை எறிந்துவிட்டு இந்த விளையாட்டுப் பொருளை வாங்கி விளையாடி மகிழும். வலிந்து பறித்தால் ஆபத்து. ஆகவே இந்த பொன்னாசையைத் திசை திருப்பி விட வேண்டும். பொருளாசையையும் திசைதிருப்பி விடவேண்டும். அதாவது தான் ஈட்டிய பொருளை மனமுவந்து ஈவதில் செயற்பட்டு, அதில் ஒரு இன்பம் அடையவேண்டும். தன் பொருளை ஒழித்து வைக்காமல் வழங்கத் தலைப்பட்டால் அந்தப் பொருளின் பால் உள்ள பற்றுக் குறைந்து விடும். பொருள் இல்லாத வறியவர்களும் பயன் அடைவார்கள். "பொருள் ஆசையை ஒழி" என்று எதிர்மறையாகக் கூறாது, "அறஞ் செய்" என்று உடன்பாடாகக் கூறின், செய்கை முறையில் நிகழ்வதற்கு அறஞ் செய்ய முற்படலாம். அதனாலேயே " அறஞ்செய விரும்பு" என்று வற்புறுத்தினார் ஔவையார்.

அநாதியாய் வரும் உடல், உடமை பற்றினை விடுவதற்கு இறைபற்று ஒன்றே போதுமானது.

"கெடுவாய் மனனே கதிகேள் கரவாதிடுவாய்"

" கரவாதிடுவாய்" என்பது உன்பால் வந்து இரப்பவற்கு இல்லையென்று கூறி உள்ளதை ஒளிக்காமல், இயன்றவரை அன்பாகக் கொடுப்பாயாக"

வறியவர்கட்கு வழங்காது செல்வத்தை ஒழித்து வைப்பவர்க் காக இறைவன் கொடிய நரகத்தை படைத்துள்ளான்.

"கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்" என்றார் அப்பர் சுவாமிகள். மேலும் கரப்பவர்களுக்கு இறைவனும் தன்னைக் கரந்து கொள்வான் என்பது இன்னொரு பொருளாகும்.

" கரவாடும் வன்நெஞ்சார்க்கு அரியான்" என அப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறார். ஒழித்து வைப்பவர் செல்வத்தை தீயோர் கவர்ந்து விடுவர். இதனை

"வைத்தீட்டினார் இழப்பவர் வான்தோய்
உய்த்தீட்டுத் தேனீக்கரிமலைநாட

என்று கூறுவது நாலடியார்.

இப்படியாக வறியோர்க்கு வழங்கும் பொழுது இது என்னுடைய செல்வம் நான் வழங்குகிறேன் என்று நினையாது இச்செல்வம் இறைவன் தந்தது, இறைவனுக்கே தருகிறேன் என்று எண்ணவேண்டும். தான தருமங்கள் செய்யும் போது நான் எனது என்ற செருக்கற்று யாவும் சிவன் தந்தது என்ற நினைப்போடு பற்றற்றுச் செய்தல் வேண்டும். இதனால் வரும் நல்வினையோ, தீ வினையோ எம்மைச் சாராது. நல்வினையும், தீவினையும்; பொன்விலங்கும் இரும்புவிலங்கும் போன்றது. எனினும் பிறவியை அறுக்க நாம் பற்றற்ற நிலையில் வினைகளை ஆற்ற வேண்டும். இதைத்தான் பகவத்கீதையும் எமக்கு "கடமைகளைச் செய், பலனை எதிர்பாராதே" என உபதேசிக்கிறது.

இதையே அருணகிரியாரும் "கரவாது இடுவாய்" என்றும் வடிவேல் இறைந்தான் நினைவாய் என்றும் உணர்த்தினார்.

ஆகவே அதுவே இன்ப துன்பத்திற்குக் காரணமான வினை யாவையும் விடுவதற்கு வழி என்றார். அதனால் வினையின்றேல் பிறவி இல்லை. இறைவனுக்கு எமது செயல்களை சமர்ப்பணம் செய்தால் பிறவி வேரறும். பேரின்ப வாழ்வு பெறலாம்.

" தானதருமங்கள் தவமும் புரியுங்கள். ஞான வீடு நமக்கெளிதாமே" என்று சிவயோக சுவாமிகள் நற்சிந்தனை எமக்கு போதிக்கின்றது. இறை நினைவுடன் தான தர்மம் செய்வது சாலச் சிறந்தது.

இதுவே பெரிய புராண வரலாறு. இலக்கியங்கள் நமக்கு காட்டிய உண்மை. அதன் வழி வாழ்வோமாக. பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக.

---

# இந்து ஒளி (காலாண்டிதழ்)

இந்து சமய அறிவைமேம்படுத்தும் வகையில் அமைந்த கட்டுரைகள் கவிதைகள், ஆன்மீக புராணக்கதைகள் உட்பட பல பயனுள்ள அம்சங்களுடன் மாமன்றத்தின் காலாண்டிதழாக கடந்த பதினைந்து வருடங்களாக தொடர்ந்து வெளிவருகிறது.

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றின் விலை | – | ரூபா 50.00 |
| வருடாந்த சந்தா | – | ரூபா 200.00 |
| தபாற் செலவு | – | ரூபா 100.00 |
| (நான்கு இதழ்களுக்கு) | | |

வருடச் சந்தா செலுத்தி இந்து ஒளி சஞ்சிகையை தபால் மூலமாக பெற்றுக்கொள்ளலாம். ஒரு வருடத்திற்குரிய நான்கு வெளியீடுகளுக்கான (50/=X4) 200 ரூபா பணத்துடன் தபாற்செலவுக்கான மேலதிக கட்டணமாக 100ரூபாவையும் சேர்த்து 300/= ரூபாவுக்கான காசோலையை அனுப்பி வைக்கலாம். காசோலையில் பணம் பெறுபவர் பெயர் என்பதில் ALL CEYLON HINDU CONGRESS என எழுத வேண்டும். அதே வேளை ஏதாவது ஒரு இலங்கை வங்கிக் கிளையில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இலங்கை வங்கிக் கணக்கு இலக்கமான 003268512க்கு வைப்புச் செய்தும் இந்து ஒளியைப் பெற்றுக் கொள்ளலாம். பணம் பெறுபவர் என்ற இடத்தில் ALL CEYLON HINDU CONGRESS என எழுத மறவாதீர்கள். வங்கி மூலமாக பணம் அனுப்புவோர், வங்கியில் பணம் வைப்புச் செய்த பற்றுச் சீட்டின் பிரதியொன்றினை உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.

பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை
கொழும்பு 02
எமது தொலைபேசி இலக்கம் 0112434990

# பாவமன்னிப்பு

'நான் பாவம் செய்துவிட்டேன்' என்று அழுதபடி வந்த ஒருவனுடைய தலையைத் தன் கையால் பற்றியபடி ஆறுதல் சொல்லி, பிறகு அவனை அனுப்பினார் குரு. 'அதெப்படி, பாவம் செய்தவனுக்கு மன்னிப்புத் தருவதுபோல நீங்கள் நடந்து கொள்ளலாம்?' என்று ஒரு சிஷ்யன் கேட்டான்.

"அது மன்னிப்பு இல்லை, விடுதலை" என குரு பதில் சொன்னார். "அவன் தான் செய்த பாவத்திற்காக வருந்துகிறான். அவனுடைய மன உளைச்சலுக்கு இப்போது ஆறுதல் தேவை. அதைத்தான் நான் செய்தேன். மனசு தெளிவாகி, மீண்டும் ஒரு முறை பாவம் செய்யக்கூடாது என்ற நிலைக்கு அவன் வந்துவிடுவான். அதுமட்டுமல்ல, அவன் செய்த பாவத்திற்கு தண்டனையை அடையும்போது, தனக்கு அது சரியானதுதான் என்ற மனப்பக்குவமும் அவனால் கொள்ளமுடியும்" என்று குரு மேலும் விளக்கினார்.

**(சுவாமி விவேகானந்தர்)**

**தூங்கா நகரம் என்ற சிறப்புப் பெயர் பூண்ட அருள்மிகு மீனாட்சி அம்பாள் எழுந்தருளியுள்ள மதுரையம்பதி பல்வேறு சிறப்புப் பெயர்களையும் கொண்டியங்கும் புண்ணிய நகரமாகும்.**

அதன் மறு பெயர்களாவன :- 1.சிவநகரம், 2.கடம்பவனம் 3. சிவன், 4. முத்திபுரம், 5. கன்னிபுரம், 6. திருவாலவாய், 7. பூலோக சிவலோகம், 8. சமட்டி, 9. விச்சாபுரம், 10. துவாத சாந்தத்தலம் என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிந்தனைக் கதைகள்

## என்ன காரணம்

அடர்ந்த காட்டின் வழியே தன் சீடர்களுடன் சென்று கொண்டிருந்தார் ஒரு துறவி. வழியில், வேட்டைக்கு வந்திருந்த ஒரு மன்னனையும் அவனது வீரர்களையும் சந்தித்தார். துறவியும் அரசனும் பேசிக்கொண்டிருந்த போது ஒரு பெரும் சத்தம் கேட்டது. அது அச்சத்தை ஏற்படுத்தியதால், அரசன் உட்பட எல்லோரும் ஓட ஆரம்பித்தார்கள். கடைசியாக துறவியும் ஓடத் தொடங்கினார். சற்று தூரம் சென்றதும் பயம் நீங்கி எல்லோரும் நின்றார்கள். மன்னன், துறவியிடம் "அது என்ன சத்தம்?" என்று கேட்டான்.

"சாதாரண இடி ஓசைதான் அது. நாம் காட்டுக்குள் இருந்ததால் பயங்கரமாக எதிரொலித்தது..!" என்று சொன்னார் துறவி.

"எங்களுக்கு அது என்ன சத்தம் எனத் தெரியாததால் நாங்கள் பயந்தோடி வந்தோம். வெறும் இடியோசை எனத் தெரிந்திருந்தும் நீங்கள் அஞ்சி ஓடியது ஏன்?" என்று ஆச்சரியமாகக் கேட்டான் மன்னன். புன்முறுவல் செய்த துறவி "நான் அந்த சத்தத்திற்கு பயந்து ஓடி வரவில்லை. நீங்கள் எல்லாம் அஞ்சி ஓடியபோது நான் மட்டும் அஞ்சாமல் நின்றிருந்ததாக தலைகனம் எனக்கு வந்து விடக்கூடாது என்பதால்தான் ஓடிவந்தேன்!" என்று பதிலளித்தார்.

## முள்ளும் மலரும்!

ஒரு கிராமத்துக்கு துறவி ஒருவர் வந்தார். எல்லோரும் அவரிடம் ஆசி வேண்ட," அவரவர் செயல்தான் அவரவர் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. எனவே, நல்லதையே செய்யுங்கள்... நினையுங்கள்.. அப்போது எவருடைய ஆசியும் உங்களுக்குத் தேவைப்படாது" என்றார், துறவி. "ஆனால், நல்லதையே செய்பவர்கள் துன்பப்படுவதையும், தீமையே புரிபவர்கள் மகிழ்வாக இருப்பதையும் நடைமுறையில் பார்க்க முடிகிறதே?" என்று கூட்டத்தில் சிலர் குரல் எழுப்பினார்கள். "அவரவர் செய்கைதான் அவரவர் பாதையில் பூவையோ முள்ளையோ விரித்து வைக்கிறது என்பது நிஜம். ஆனால் நல்லவர்கள் முதலில் முள்ளில் நடந்தாலும் பின்னர் மலரில் சந்தோஷமாக நடக்கிறார்கள். தீயவர்கள் மலரில் நடந்தபின் முள்ளில் நடந்து கஷ்டப்படுகிறார்கள்..!" என அமைதியாக சொன்னார் துறவி.

## உழைப்பின் மதிப்பு

ஞானி ஒருவரிடம் அவரது சீடர்கள், "குருவே, உழைப்பின் மதிப்பை உணர்வது எப்படி?" என்று கேட்டனர். சமயம் வரும்போது சொல்வதாகச் சொன்னார் ஞானி. ஒரு நாள், மழை பெய்து தெருவெல்லாம் சேறாக இருந்த போது அந்த வழியாகப் போனான் ஒருவன். அவனது செருப்புகளில் சேறு படிந்தது. உடனே அவன் தனது தோளில் கிடந்த பட்டுத் துண்டினை எடுத்து அதனால் செருப்பைத் துடைத்துவிட்டுப் போட்டுக் கொண்டான். சீடர்களோடு இருந்த ஞானி, அவனை அழைத்து, அவனது செயலுக்குக் காரணம் கேட்டார்.

"இந்தப் பட்டுத் துண்டு எங்கள் குடும்பத்தின் பரம்பரை சொத்து.. செருப்பு என் சொந்த உழைப்பில் வாங்கியது.!" என்றான் அவன்.

"உழைப்பின் மதிப்பு என்றுதான்...." சீடர்களிடம் சொன்னார் ஞானி.

## இதுவும் பாடம் தான்!

கடுமையான கோடைகாலத்தில் ஒருநாள் மதியவேளை. உறங்கிக் கொண்டிருந்த தன் குருவுக்கு விசிறிக் கொண்டிருந்த சீடன் ஒருவன் களைத்துப்போய் அப்படியே சாய்ந்து நித்திரையாகி விட்டான்.

கொஞ்சநேரம் கழித்து விழித்தெழுந்த குரு, சீடனுக்கு வியர்த்திருப்பதைப் பார்த்து தாமே அவனுக்கு விசிறத் தொடங்கினார்.

குளிர்ந்த காற்று பட்டதும் சட்டென்று உறக்கம் கலைந்து எழுந்த சீடன், குருநாதர் தனக்கு விசிறுவதை பார்த்து பதறிப்போனான்.

அதைக் கண்ட குரு அவன் தோளில் தட்டி "ஏன் பதறுகிறாய்? நீயும் என்னைப் போல் ஓர் உயிர். எனக்கு வியர்த்தபோது நீ விசிறினாய்; உனக்கு வியர்த்ததும் நான் விசிறினேன். இதில் மரியாதை குறைய என்ன இருக்கிறது என்றார்? தன்னைப்போல் பிறரையும் எண்ணுவதில் எவ்வித இழுக்கும் இல்லை என்ற

## மக்கள் தொண்டு

ஒரு சமயம் இரண்டு துறவிகள் சிவனுக்கு அபிஷேகம் செய்ய கங்கை நீரை கமண்டலத்தில் எடுத்துக் கொண்டு சென்றனர். அப்போது வழியில் ஒருவன் மயங்கிக்கிடந்தான். அதனைக் கண்ட மூத்த துறவி, உடனே அவனைத் தூக்கி மடியில் போட்டு அபிஷேகத்திற்காக எடுத்து வந்த நீரை அவன் முகத்தில் தெளித்தும், அருந்தக் கொடுத்தும் அவன் மயக்கத்தைத் தெளிவித்தார். அதற்கு இளந்துறவி, "சிவன் அபிஷேகத்திற்காக எடுத்து வந்த நீரை அசுத்தப்படுத்திவிட்டீர்களே. சிவன் புண்ணியம் இனி உங்களுக்குக் கிடைக்காதே !" என்று கூறினார்.

அதற்கு மூத்த துறவி, சிவன் அபிஷேகத்திற்காக எடுத்து வந்த நீர், வழியில் ஒருவனின் உயிரைக் காப்பாற்ற உதவியது பெரிய புண்ணியம் என்று நான் கருதுகிறேன். ஒருவேளை அது பாவம் என்றால் அதன் பலனைப் பெறுவதில் எனக்கு எந்த வருத்தமுமில்லை. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு. அதன்படியே நடந்து கொண்டேன்" என்றார். மூத்த துறவியின் பதிலைக் கேட்ட இளம் துறவிமெய்சிலித்தார்.

**(நன்றி : குமுதம் பக்தி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மாணவர்களுக்கான பக்கம். வழமைபோல பெரிய புராணக் கதைகள் இடம்பெறுகின்றன. இது போன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.




# பெரியபுராணக் கதைகள்

## திருநீலகண்ட நாயனார்

தில்லை என்னும் பழம்பெரும் பதியிலே குயவர் குலத்திலே தோன்றியவர் ஒருவர் இருந்தார். அவர் அறவழியிலே நின்றவர். சிவபக்தி, சிவனடியார் பக்திகளிற் சிறந்தவர். அப் பெரியார் மட்கலம் வனையுந் தொழில் செய்து வாழ்வு நடாத்தி வந்தார். அடியவர்களுக்குத் திருவோடு கொடுப்பது அவர்தம் திருத்தொண்டு.

சிவபெருமானாகிய தன் திருநீலகண்டத்தினிடத்துப் பேரன்புகொண்டு ''திருநீலகண்டம், திருநீலகண்டம்'' என்று அவர் சொல்லி வந்தமையால், அவருக்குத் திருநீலகண்ட நாயனார் என்னுந் திருப்பெயர் வழங்கலாயிற்று.

அந் நாயனார் அருந்ததி அனைய ஒரு மங்கை நல்லாரைத் திருமணஞ் செய்து இல்லறத்தில் வாழ்ந்து வந்தார். வருநாளில் ஒருநாள் அவர் இன்பத்துறையில் எளியராய் ஒரு பரத்தைபாலணைந்து வீடு சேர்ந்தார்.

அதையுணர்ந்த இல்லக் கிழத்தியார், ஊடல் கொண்டு வீட்டுப் பணிகளெல்லாவற்றையுங் குறைவறச் செய்து, கூடலுக்குமட்டும் இசையாதிருந்தார்.

அவ்வூடலைத் தீர்க்கவேண்டி, நாயனார் ஒருபோது, இரப்புரைகள் பல கூறி, மனைவியாரைத் தழுவ முயன்றார். அவ் வேளையில் அம்மையார் வெகுண்டு, ''நீர் எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்'' என்றார்.

அடியவரோ திருநீலகண்டத்தினிடத்தில் பெரும் பற்றுடையவர். அப்பற்று மாறுபடாவண்ணம் நாயனார், தம் மனைவியாரைத் தீண்டாதகன்று, அவரை அயலாரைப்போல் பார்த்து, ''இவள் எம்மை எனப் பன்மையாகக் கூறினமையால் இவளையும், இவளினமாகிய மற்ற மாதர்களையும் யான் மனத்திலுந் தீண்டேன்'' என்று சூளுரை பகர்ந்தார்.

இக் கொள்கையுடன் இருவரும் வீட்டைவிட்டுத் துறவாது, புணர்ச்சியின்மையை அயலறியாதவாறு மற்ற இல்லப் பணிகளை இயற்றிக்கொண்டு வாழ்ந்து வந்தனர். இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன. எய்தியும் சிவபக்தி, சிவனடியார்பக்தி மட்டும் அவரிடந் தளர்ச்சியுறவில்லை.

திருநீலகண்ட நாயனாரது திருத்தொண்டின் பெருமையை உலகுக்குணர்த்த வேண்டி, நடராஜப் பெருமான், ஒரு சிவயோகியாகிக் குயவர் பெருமான் வீட்டிற்கு எழுந்தருளினார்.

நாயனார் அவரை முறைப்படி வழிபட்டு, ''அடியேன் செய்ய வேண்டிய பணி யாது?'' என்று கேட்டார்.

சிவயோகியார், ''அன்பனே! இத் திருவோட்டைச் சேமித்து வைத்திருந்து யான் கேட்கும்போது கொடுப்பாயாக. இத் திருவோடு, தனக்குத் தானே ஒப்பானது. தன்னிடஞ் சேரும் எல்லாப் பொருளையும் தூய்மை செய்யும் ஆற்றலுடையது. பொன்னினும் மணியினும் போற்றுந் தகையது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த இத் திருவோட்டினை வாங்கி வை'' என்று அதை நீட்டினார்.

நாயனார் அதை அன்புடன் வாங்கி இல்லத்தின் ஒரு பக்கத்தில் காப்புடைய ஓரிடத்தில் வைத்துத் திரும்பினார். சிவயோகியார் அவ்விடத்தினின்றும் புறப்பட்டார். நாயனார் அவருடன் சிறிது தூரஞ் சென்று விடைபெற்றனர். சிவயோகியாக வந்த நடராஜ வள்ளல் பொற்சபைக்கு எழுந்தருளினார்.

பன்னெடு நாள்கள் கடந்தன. ஒருநாள், திருவோடு, வைக்கப்பெற்ற இடத்தினின்றும் மறைந்தொழியச் சிவபெருமான் திருவருள் செய்து, முன்போலச் சிவயோகி வடிவந்தாங்கி நாயனார் இல்லம் போந்தார். நாயனார் அவரை வழிபட்டு நின்றார்.

சிவயோகியார் அவரைப் பார்த்து ''முன்னே உன்னிடந் தந்த ஓட்டைக் கொண்டு வா'' என்றார். நாயனார், திருவோடு கொண்டுவரச் சென்றார். திருவோட்டைக் கண்டாரில்லை. என் செய்வார் பாவம்! மனைவியாரைக் கேட்கிறார். மற்றவரைக் கேட்கிறார். பிற விடங்களில் தேடுகிறார். திகைக்கிறார். ''யோகியார்க்கு என் சொல்வேன். என் செய்வேன்'' என்று அலமருகிறார். நாயனார் ஒன்றுந் தோன்றாது நிற்கிறார்.

இந்நிலையில் சிவயோகியார், ''என்ன இவ்வளவு நேரம்?'' என்று கூவுகிறார். நாயனார் ஓடிவந்து, ''எந்தையே! திருவோட்டை வைத்த இடத்திலும் தேடினேன். வேறிடங்களிலும் தேடினேன். அதைக் கண்டிலேன். அப்பழைய ஓட்டினுஞ் சிறந்த புதிய ஒடு ஒன்று வனைந்து தருகிறேன். ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். பிழை பொறுத்தருளல் வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

சிவயோகியார்க்குச் சினம் மூண்டெழுகிறது. அவர், நாயனாரை உற்று நோக்கி, ''என்ன சொன்னாய்! புது ஓடா கொடுக்கப்போகிறாய். யான் கொடுத்த மண் ஓடே வேண்டும். மற்றது பொன் ஓடே யாயினும் ஆக அஃதெனக்கு வேண்டா. என் ஓட்டைக் கொண்டு வா'' என்றார்.

அடியவர் நடுக்குற்றுப் பெரியவரைப் பணிந்து, ''ஐயரே! தங்கள் திருவோடு கெட்டுவிட்டது. வேறொரு நல்ல ஓடு கொடுக்கிறேன் என்றாலும் அதை ஏற்க மறுக்கிறீர். தங்கள் மறுப்புரை என் உணர்வு முழுவதையும் ஒழித்துவிட்டது. என்ன செய்வேன்!'' என்று ஏக்குற்று நின்றார்.

புண்ணியப் பொருளாக நின்ற பெருமான், ''என்ன இது! உன்பால் வைத்த அடைக்கலப் பொருளை வெளவிக்கொண்டாய். பழி பாவங்கட்கு அஞ்சுகிறாய் இல்லை. யான் உன்னை விடேன். என் ஓட்டை வாங்கிக்கொண்டே போவேன்'' என்றார்.

நாயனார் ''திருவோட்டை நான் வெளவினேன் இல்லை. என் உள்ளத்தினுங் களவு இன்மையை எங்ஙனம் விளக்கவல்லேன்'' என்று இரங்கிக் கூறினார். அங்ஙனம் ஆயின், ''உன் மகனைப் பற்றிக் குளத்தில் மூழ்கித் 'திருவோடு கெட்டது' என்று சொல்லிப் போ'' என்று சிவயோகியார் உரைத்தார்.

அதற்கு நாயனார் ''எனக்குப் புதல்வனில்லையே'' என்றார். சிவயோகியார், உன் மனைவியைப் பற்றிச் சொல்'' என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கும் நாயனார், “எனக்கும் என் மனைவிக்கும் ஒரு சூள் உண்டு. அதனால் அவள் கையைப் பிடித்து மூழ்க இயலாமை குறித்து வருந்துகிறேன். யானே மூழ்கி உண்மை சொல்கிறேன்” என்று மொழிந்தார்.

உடனே, சிவயோகியார் கனன்று, “என் ஓட்டையுங் கொடாமல், மனைவியைப் பற்றிக் குளத்தில் மூழ்கவும் இசையாமல் சிந்தை வலித்திருக்கிறாய். தில்லை வாழ் அந்தணர்கள் கூடியுள்ள பேரவையில் என் வழக்கை உரைக்கப் போகிறேன்” என்று சொல்லி விரைந்து நடந்தார். நாயனாரும் அவரைத் தொடர்ந்து நடந்தார்.

சிவயோகியார் அந்தணர் அவைக்களம் புகுந்து நிகழ்ந்ததைக் கூறினார். வேதியர்கள் வேட்கோவரைப் பார்த்தார்கள். வேட்கோவரும் விளைந்ததை விளம்பினார். இருவர் கூற்றையுங் கேட்ட அந்தணர்கள், வேட்கோவரை நோக்கி, “இவர்தம் ஓட்டை நீரிழந்தீராயின், இவர் விரும்பும் வண்ணம் செய்வது நியாயம்” என்று தீர்ப்புக் கூறினார்கள்.



தமக்கும் மனைவிக்கும் உள்ள தீண்டாமையை நாயனார் வெளியிடமாட்டாராய், “பொருந்திய வகையால் குளத்தில் மூழ்குகிறேன்” என்று சொல்லி, சிவயோகியாருடன் தமது இல்லத்திற்கு ஏகி, மனைவியாரை அழைத்துக் கொண்டு, திருப்புலீச் சுரத்திற்கு முன்னுள்ள திருக்குளத்தையடைந்து, ஒரு மூங்கில் தண்டின் ஒரு முனையை மனைவியார் பற்ற, மற்றொரு முனையைத் தாம் பற்றி மூழ்கலானார்.

அப்போது சிவயோகியார், “உன் மனைவி கையைப் பற்றி மூழ்கு” என்றார்.

திருநீலகண்ட நாயனார் அப்படிச் செய்யக் கூடாமையை யாவரும் அறிய விளக்கி மூழ்கிக் கரையேறினார். ஏறிய இருவரிடமும் முதுமை ஒழிந்து இளமைச் செவ்வி மலர்ந்தது.

அக்காட்சி கண்டவர்கள், அங்கிருந்த சிவயோகியாரைக் கண்டார்களில்லை. “இஃதென்ன மாயம்!” என்று அவர்கள் மருண்டு நின்றார்கள்.

அந்நேரத்தில் சிவயோகியாக வந்த சிவபெருமான் உமையம்மையாருடன் விடை மீது காட்சி வழங்கினார். திருநீலகண்ட நாயனாரும் அவர்தம் அருமை மனைவியாரும் சிவபெருமானை வணங்கிப் போற்றி இன்பக் கடலில் மூழ்கினர்.

எல்லாம் வல்ல இறைவன், “ஐம்புலனை வென்ற விழுமிய அன்பர்களே! இவ் விளமை என்றும் நீங்காமல் நம்மிடத்து இருங்கள்” என்று திருவருள் சுரந்து எழுந்தருளினார். திருநீலகண்ட நாயனாரும் அவர் தம் மனைவியாரும் சிவலோகமடைந்து பெறுதற்கரிய இளமை பெற்றுப் பேரின்பம் உற்றனர்.

## வாழ்வை வளமாக்கும் திருமந்திரம்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றியது சைவம். சைவ சமயத்தவரின் முதற் குருவாக விளங்குபவர் திருமூலர். இவரே சைவசமயத்தவரின் ‘மூலகுரு’ ‘முதல்குரு’ என்றாலும் மிகையில்லை. திருமூலரே தமிழரின் ‘குருமூலர்’ எனலாம். ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்னும் சமயப் பொதுமையாகிய உரிய தத்துவத்தை முதன் முதலாகக் கூறியவர் திருமூலர் பெருமானே. சைவ சமயத்தின் புகழ்மிக்க தோத்திர நூல்களான பன்னிரு திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக வைத்துப் போற்றப்படுவது திருமந்திரமே ஆகும். மானிட சமுதாயம் உயர்வு பெற வேண்டும் என்ற உன்னத நோக்கோடு மூவாயிரம் ஆண்டுகள் யோகத்தில் இருந்து ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்களைப் பாடியவர் திருமூலர் பெருமான். அவற்றுள் இரு பாடலை திருமூலர் ‘தர்மம் எது’ என விளக்கியுள்ளார்.

நாம் செய்யும் தர்மங்களே நம்மை இந்தப் பிறவியிலும், வரும் பிறவியிலும் பாதுகாக்கும்! தம்மை அறிபவரே தவம் செய்வார், தர்மம் செய்வார், தனக்குள் தெய்வத்தையும் காண்பார்!

துறவிக்கும், ஏழைக்கும் இல்வாழ்வான் உணவு கொடுத்தல் கடமையாகும். ஆற்றங்கரை குளக்கரையில் உள்ள பற்று அற்ற ஞானியரைத் தேடிச் சென்று உணவு அளித்தல் தர்மம் ஆகும். “இருக்கும் இடம் தேடி, உருக்கமுடன் கொண்டு வந்து கொடுத்தாலன்றிப் புசியேன்” என்று கூறிவிட்டார் பட்டினத்தார். காமம், வெகுளி, மயக்கம் ஆகிய அழுக்கினை அகற்றுங்கள்! அறம் செய்யுங்கள்! இளமையும் செல்வமும் உள்ள போதே தர்மம் செய்து மகிழுங்கள்!

உண்பதற்கு முன்னே, உள்ளன்போடு இறைவனுக்கு ஒரு பச்சிலை இட்டு பூசை செய் போதும்! பசுவுக்கு ஒரு வாய் புல்லைப் பறித்துக் கொடு! உண்பதற்கு முன்னே ஒரு பிடி அன்னம் பறவை, நாய், பூனைக்குக் கொடு! இவையாவும் முடியா விட்டாலும் பரவாயில்லை! பிறரிடம் பேசும் போது இன்சொல் பேசு! இவை நான்குமே நல்ல அறங்கள் ஆகும்.

*யாவர்க்கும் ஆம் இறைவர்க்கு பச்சிலை*
*யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை*
*யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி*
*யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே*

**யோ. மோகனதாசன்**
சைவ வித்தகர் பயிற்சிநெறி மாணவன்
மாமன்ற யாழ் பணிமனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆசான் 'ஆறு. திருமுருகன்'

க. முரளிதரன்
சைவவித்தகர் பயிற்சி நெறி மாணவன் மாமன்ற யாழ் பணிமனை.

புகழை எவ்வாறு எடுத்துரைப்பேன்
நீர்பட்ட துன்பங்கள் எத்தனை
அத்தனை துன்பங்களையும் படிகளாக்கி
நீர் உயர்ந்து விட்டீரே...!

அந்த முருகன் ஞானப்பழத்துக்காக
உலகையே சுற்றினாராம் - இந்த முருகன்
'சொல்ஞானத்தால்' உலகையே சுற்றிவிட்டார்
அதனால் எழுந்த கோட்டைகள் பல...!

வீட்டில் முடங்கியவர்களை அரவணைத்து
'சிவபூமி பள்ளி' அமைத்து அவர்களுக்கு
ஏகனாய் இருந்து அவர்களின் புகழை
ஏதென்ஸ் நகர் கொண்டுபோய் விட்டீரே...!

பெற்றோர்களை தனியாக தவிக்கவிடும்
மனசாட்சி இல்லாத மனிதர் மத்தியில்
அவர்களுக்கு இந்த முருகன் இருக்கான்
என்று "சிவபூமி இல்லம்" அமைத்தீரே...!

பட்டத்தை கேட்டு வாங்கி காற்றில்
பறக்க விடும் சமுதாயத்தின் மத்தியில்
'நல்லவனாக' வாழ்ந்தால் பட்டம்
தானாக வரும் என்பதை நிருபித்தீரே...!

நீர் போகும் பாதையில் எத்தனை
முட்கள் அத்தனையும் கடந்தாய்
எத்தனை கற்கள் அத்தனை கற்களையும்
"கௌரவ கலாநிதி" மாலையாக்கி விட்டீரே...!

எங்கள் ஆசானின் புகழை
எவ்வாறு எடுத்துரைப்பேன்
வாழ்த்த வார்த்தையும் இல்லை
வாழ்த்துவதற்கு வயதும் இல்லை
இறைவா...!
உன் மகனுக்கு நீயே துணை.

# சைவம் என்பது...?

நெல்லை கணபதி

கடவுளைத் தொழுவது சைவம்! தினமும்
காலையில் எழுவது சைவம்!
திடமனம் உடையது சைவம்! அழகாய்த்
தேவாரம் படிப்பது சைவம்!

தினம் தினம் குளிப்பது சைவம்! உடனே
திருநீறு பூசுதல் சைவம்!
இனம் உயிர் வுடையது சைவம்! விருந்து
இன்பமாய்ப் படைப்பது சைவம்!

மது அருந் தாதது சைவம்! இறைச்சி
மாமிசம் தொடாதது சைவம்!
பொதுநலம் காப்பது சைவம்! பாவ
புண்ணியம் பார்ப்பது சைவம்!

பாவத்திற் கஞ்சுதல் சைவம்! நன்மை
பலருக்கு செய்வது சைவம்!
கோபமில் லாதது சைவம்! நல்ல
குணங்கள் நிறைந்தது சைவம்!

தீமைசெய் யாதது சைவம்! பிறர்க்குத்
தீங்கு எண் ணாதது சைவம்!
ஈகையில் சிறந்தது சைவம்! என்றும்
இல்லறம் பேணுதல் சைவம்!

பத்தியில் திளைப்பது சைவம்! நெஞ்சில்
பாசம் மிகுந்தது சைவம்!
முத்தியைத் தேடுதல் சைவம்! இறையருள்
மூழ்கிட நாடுதல் சைவம்!

அன்பினில் சிறந்தது சைவம்! சைவ
ஆகமம் தெரிந்தது சைவம்!
பண்பினில் உயர்ந்தது சைவம்! இதுவே!
பாரெல்லாம் போற்றிடும் சைவம்!

(நன்றி - கலைமகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து மாமன்றம்
## நாட்காட்டி 2012

### ஜனவரி

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### பெப்ரவரி

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | | | | |

### மார்ச்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### ஏப்பிரல்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### மே

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### ஜூன்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### ஜூலை

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### ஆகஸ்ட்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### செப்டெம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### அக்டோபர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### நவம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### டிசம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

● நோன்மதி தினம் ○ அரச, வங்கி விடுமுறை □ அரச, வங்கி, வர்த்தக விடுமுறை

## அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறை தினங்கள் (2012)

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனவரி | 08 | ஞாயிறு | நோன்மதி தினம் | § † ‡ |
| ஜனவரி | 15 | ஞாயிறு | தைப்பொங்கல் | § † ‡ |
| பெப்ரவரி | 04 | சனி | தேசிய தினம் | § † ‡ |
| பெப்ரவரி | 05 | ஞாயிறு | நபிகள் நாயகம் பிறந்த தினம் | § † ‡ |
| பெப்ரவரி | 07 | செவ்வாய் | நோன்மதி தினம் | § † ‡ |
| பெப்ரவரி | 20 | திங்கள் | மகா சிவராத்திரி | § † |
| மார்ச் | 07 | புதன் | நோன்மதி தினம் | § † ‡ |
| ஏப்பிரல் | 06 | வெள்ளி | நோன்மதி தினம் } | § † ‡ |
| ஏப்பிரல் | 06 | வெள்ளி | பெரிய வெள்ளி } | |
| ஏப்பிரல் | 12 | வியாழன் | தமிழ்ப் புதுவருட முன்தினம் | § † ‡ |
| ஏப்பிரல் | 13 | வெள்ளி | தமிழ்ப் புதுவருட தினம் | § † ‡ |
| மே | 01 | செவ்வாய் | மே தினம் | § † ‡ |
| மே | 05 | சனி | வெசாக் நோன்மதி தினம் | § † ‡ |
| மே | 06 | ஞாயிறு | வெசாக் மறுதினம் | § † ‡ |
| ஜூன் | 04 | திங்கள் | நோன்மதி தினம் | § † ‡ |
| ஜூலை | 03 | செவ்வாய் | நோன்மதி தினம் | § † ‡ |
| ஆகஸ்ட் | 01 | புதன் | நோன்மதி தினம் | § † ‡ |
| ஆகஸ்ட் | 19 | ஞாயிறு | றம்ழான் பெருநாள் | § † |
| ஆகஸ்ட் | 31 | வெள்ளி | நோன்மதி தினம் | § † ‡ |
| செப்டெம்பர் | 29 | சனி | நோன்மதி தினம் | § † ‡ |
| அக்டோபர் | 26 | வெள்ளி | ஹஜ்ஜுப் பெருநாள் | § † |
| அக்டோபர் | 29 | திங்கள் | நோன்மதி தினம் | § † ‡ |
| நவம்பர் | 13 | செவ்வாய் | தீபாவளி திருநாள் | § † |
| நவம்பர் | 27 | செவ்வாய் | நோன்மதி தினம் | § † ‡ |
| டிசம்பர் | 25 | செவ்வாய் | நத்தார் திருநாள் | § † ‡ |
| டிசம்பர் | 27 | வியாழன் | நோன்மதி தினம் | § † ‡ |

§ அரசாங்கம் † வங்கி ‡ வர்த்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய விழாக்களும் விரத நாட்களும் (2012)

**ஜனவரி**

- 05 – வியாழன் : சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்
- 06 – வெள்ளி : பிரதோஷ விரதம்
- 08 – ஞாயிறு : பூரணை விரதம் திருவெம்பாவை பூஜை நிறைவு
- 12 – வியாழன் : சங்கடஹர சதுர்த்தி
- 15 – ஞாயிறு : தைப்பொங்கல்
- 19 – வியாழன் : ஏகாதசி விரதம்
- 20 – வெள்ளி : பிரதோஷ விரதம்
- 22 – ஞாயிறு : அமாவாசை விரதம்
- 27 – வெள்ளி : சதுர்த்தி விரதம்
- 29 – ஞாயிறு : சஷ்டி விரதம்

**பெப்ரவரி**

- 01 – புதன் : கார்த்திகை விரதம்
- 03 – வெள்ளி : பீம ஏகாதசி விரதம்
- 05 – ஞாயிறு : பிரதோஷ விரதம்
- 07 – செவ்வாய் : பூரணை விரதம், தைப்பூசம்
- 11 – சனி : சங்கடஹர சதுர்த்தி
- 18 – சனி : ஏகாதசி விரதம்
- 19 – ஞாயிறு : பிரதோஷ விரதம்
- 20 – திங்கள் : மகா சிவராத்திரி
- 21 – செவ்வாய் : அமாவாசை விரதம்
- 25 – சனி : சதுர்த்தி விரதம்
- 28 – செவ்வாய் : கார்த்திகை விரதம் சஷ்டி விரதம்

**மார்ச்**

- 04 – ஞாயிறு : ஏகாதசி விரதம்
- 06 – செவ்வாய் : பிரதோஷ விரதம்
- 07 – புதன் : மாசி மகம்
- 08 – வியாழன் : பூரணை விரதம்
- 11 – ஞாயிறு : சங்கடஹர சதுர்த்தி
- 18 – ஞாயிறு : ஏகாதசி விரதம்
- 20 – செவ்வாய் : பிரதோஷ விரதம்
- 22 – வியாழன் : அமாவாசை விரதம்
- 26 – திங்கள் : சதுர்த்தி விரதம்
- 27 – செவ்வாய் : கார்த்திகை விரதம்
- 28 – புதன் : சஷ்டி விரதம்

**ஏப்ரல்**

- 03 – செவ்வாய் : ஏகாதசி விரதம்
- 04 – புதன் : பிரதோஷ விரதம்
- 05 – வியாழன் : பங்குனி உத்தரம்
- 06 – வெள்ளி : பூரணை விரதம்
- 10 – செவ்வாய் : சங்கடஹர சதுர்த்தி
- 13 – வெள்ளி : சித்திரைப் புதுவருடப் பிறப்பு
- 17 – செவ்வாய் : ஏகாதசி விரதம்
- 18 – புதன் : பிரதோஷ விரதம்
- 20 – வெள்ளி : அமாவாசை விரதம்
- 23 – திங்கள் : கார்த்திகை விரதம்
- 24 – செவ்வாய் : அக்ஷய திருதியை
- 25 – புதன் : சதுர்த்தி விரதம்
- 27 – வெள்ளி : சஷ்டி விரதம்

**மே**

- 02 – புதன் : ஏகாதசி விரதம்
- 03 – வியாழன் : பிரதோஷ விரதம்
- 05 – சனி : சித்திரா பூரணை விரதம் சித்திரகுப்த விரதம்
- 09 – புதன் : சங்கடஹர சதுர்த்தி
- 16 – புதன் : ஏகாதசி விரதம்
- 18 – வெள்ளி : பிரதோஷ விரதம்
- 20 – ஞாயிறு : அமாவாசை விரதம்
- 24 – வியாழன் : சதுர்த்தி விரதம்
- 26 – சனி : சஷ்டி விரதம்
- 31 – வியாழன் : ஏகாதசி விரதம்

**ஜுன்**

- 02 – சனி : பிரதோஷ விரதம்
- 03 – ஞாயிறு : வைகாசி விசாகம்
- 04 – திங்கள் : பூரணை விரதம்
- 07 – வியாழன் : சங்கடஹர சதுர்த்தி
- 15 – வெள்ளி : ஏகாதசி விரதம்
- 16 – சனி : சனிப்பிரதோஷ விரதம்
- 17 – ஞாயிறு : கார்த்திகை விரதம்
- 19 – செவ்வாய் : அமாவாசை விரதம்
- 23 – சனி : சதுர்த்தி விரதம்
- 25 – திங்கள் : குமாரசஷ்டி விரதம்
- 30 – சனி : சயன ஏகாதசி விரதம்

**ஜுலை**

- 01 – ஞாயிறு : பிரதோஷ விரதம்
- 03 – செவ்வாய் : பூரணை விரதம்
- 07 – சனி : சங்கடஹர சதுர்த்தி
- 14 – சனி : கார்த்திகை விரதம் ஏகாதசி விரதம்
- 16 – திங்கள் : பிரதோஷ விரதம்
- 18 – புதன் : ஆடி அமாவாசை விரதம்
- 22 – ஞாயிறு : நாகசதுர்த்தி விரதம்
- 23 – திங்கள் : ஆடிப்பூரம்
- 24 – செவ்வாய் : சஷ்டி விரதம்
- 27 – வெள்ளி : வரலக்ஷ்மி விரதம்
- 29 – ஞாயிறு : ஏகாதசி விரதம்
- 30 – திங்கள் : பிரதோஷ விரதம்

**ஆகஸ்ட்**

- 01 – புதன் : பூரணை விரதம்
- 05 – ஞாயிறு : சங்கடஹர சதுர்த்தி
- 10 – வெள்ளி : கார்த்திகை விரதம்
- 13 – திங்கள் : ஏகாதசி விரதம்
- 15 – புதன் : பிரதோஷ விரதம்
- 17 – வெள்ளி : அமாவாசை விரதம்
- 21 – செவ்வாய் : ஆவணி சதுர்த்தி விரதம்
- 23 – வியாழன் : சஷ்டி விரதம்
- 26 – ஞாயிறு : ஆவணி மூலம்
- 27 – திங்கள் : ஏகாதசி விரதம்
- 29 – புதன் : பிரதோஷ விரதம் ஆவணி ஓணம்
- 31 – வெள்ளி : பூரணை விரதம்

**செப்டெம்பர்**

- 04 – செவ்வாய் : சங்கடஹர சதுர்த்தி
- 06 – வியாழன் : கார்த்திகை விரதம்
- 07 – வெள்ளி : ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி
- 12 – புதன் : ஏகாதசி விரதம்
- 13 – வியாழன் : பிரதோஷ விரதம்
- 15 – சனி : அமாவாசை விரதம்
- 19 – புதன் : சதுர்த்தி விரதம்
- 21 – வெள்ளி : சஷ்டி விரதம்
- 26 – புதன் : பரிவர்த்தன ஏகாதசி விரதம்
- 27 – வியாழன் : பிரதோஷ விரதம்
- 29 – சனி : பூரணை விரதம்

**அக்டோபர்**

- 04– வியாழன் : கார்த்திகை விரதம்
- 11 – வியாழன் : ஏகாதசி விரதம்
- 13 – சனி : பிரதோஷ விரதம்
- 15 – திங்கள் : அமாவாசை விரதம்
- 16 – செவ்வாய் : நவராத்திரி விரதாரம்பம்
- 18 – வியாழன் : சதுர்த்தி விரதம்
- 20 – சனி : சஷ்டி விரதம்
- 21 – ஞாயிறு : சரஸ்வதி பூஜாரம்பம்
- 23 – செவ்வாய் : சரஸ்வதி பூஜை
- 24 – புதன் : விஜயதசமி கேதார கௌரி விரதாரம்பம்
- 25 – வியாழன் : ஏகாதசி விரதம்
- 27 – சனி : பிரதோஷ விரதம்
- 29 – திங்கள் : பூரணை விரதம்
- 31 – புதன் : கார்த்திகை விரதம்

**நவம்பர்**

- 02 – வெள்ளி : சங்கடஹர சதுர்த்தி
- 10 – சனி : ஏகாதசி விரதம்
- 11 – ஞாயிறு : பிரதோஷ விரதம்
- 13 – செவ்வாய் : தீபாவளி, அமாவாசை விரதம் கேதாரகௌரி விரதம் நிறைவு
- 14 – புதன் : கந்த சஷ்டி விரதாரம்பம்
- 17 – சனி : சதுர்த்தி விரதம்
- 19 – திங்கள் : கந்த சஷ்டி விரதம் நிறைவு சூரசம்ஹாரம்
- 24 – சனி : உத்தான ஏகாதசி விரதம்
- 25 – ஞாயிறு : பிரதோஷ விரதம்
- 27 – செவ்வாய் : திருக்கார்த்திகை விரதம் குமாராலய தீபம்
- 28 – புதன் : பூரணை விரதம் சர்வாலய தீபம்
- 29 – வியாழன் : விநாயக விரதாரம்பம்

**டிசெம்பர்**

- 02 – ஞாயிறு : சங்கடஹர சதுர்த்தி
- 09 – ஞாயிறு : ஏகாதசி விரதம்
- 11 – செவ்வாய் : பிரதோஷ விரதம்
- 13 – வியாழன் : அமாவாசை விரதம்
- 16 – ஞாயிறு : சதுர்த்தி விரதம்
- 18 – செவ்வாய் : விநாயகசஷ்டி விரதம்
- 19 – புதன் : திருவெம்பாவை பூஜாரம்பம்
- 24 – திங்கள் : சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்
- 25 – செவ்வாய் : கார்த்திகை விரதம், பிரதோஷ விரதம்
- 28 – வெள்ளி : பூரணை விரதம் திருவெம்பாவை பூஜை நிறைவு

## மாமன்ற நிகழ்வுகள் (2012)

### நடேசர் அபிஷேக தினங்கள்

| | | |
|---|---|---|
| 08.01.2012 | : | மார்கழி திருவாதிரை |
| 07.03.2012 | : | மாசி பூர்வபட்ச சதுர்த்தசி |
| 15.04.2012 | : | சித்திரை திருவோணம் |
| 26.06.2012 | : | ஆனி உத்தரம் |
| 30.08.2012 | : | ஆவணி பூர்வபட்ச சதுர்த்தசி |
| 28.09.2012 | : | புரட்டாதி பூர்வபட்ச சதுர்த்தசி |
| 28.12.2012 | : | மார்கழி திருவாதிரை |

### மாமன்ற வருடாபிஷேகம்

05.05.2012 (சித்திரை சுவாதி)

### குருபூசை தினங்கள்

| | | |
|---|---|---|
| 17.04.2012 | : | திருநாவுக்கரசு நாயனார் |
| 05.06.2012 | : | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் |
| 24.06.2012 | : | மாணிக்கவாசக சுவாமிகள் |
| 26.07.2012 | : | சுந்தரமூர்த்தி நாயனார் |
| 05.12.2012 | : | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் |

### நினைவு தினங்கள்

| | | |
|---|---|---|
| 19.07.2012 | : | சுவாமி விபுலானந்தர் |
| 05.12.2012 | : | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரணிபோற்றும் தாய்க்கோர் விழா

சி. யோகன்
மாமன்ற யாழ் பணிமனை சைவவித்தகர் பயிற்சிநெறி மாணவன்

தரணிபோற்றும் தாய்க்கோர் விழா – அதுவே நவராத்திரி விழா. அதாவது தோற்றுவாய் தெரியாத தொன்மைச் சமயமான இந்து சமயத்தில் இறைவனை தாயாகவும், தந்தையாகவும் உருவகித்து வழிபட நம் முன்னோர் வழிசமைத்துள்ளனர். உலகத்தின் இயக்கத்திற்கு மூலாதாரமாக விளங்கும் சக்தியை தாயாக உருவகித்து வழிபடும் விழாவே நவராத்திரி விழா. இந்துக்கள் பின்பற்றும் விரதங்கள், பண்டிகைகள் என்பவற்றுள் நவராத்திரியும் ஒன்றாகும். இவ் நவராத்திரி விழா வருடத்தில் நான்கு வகையாக கொண்டாடப்படுகிறது. ஆனிமாத அமா வாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களை ஆஷா நவராத்திரி என்றும், தைமாத அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களை மகா நவராத்திரி என்றும், பங்குனி மாத அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களை வசந்த நவராத்திரி என்றும், புரட்டாதி மாத அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களை சாரதா நவராத்திரி என்றும் அழைப்பர்.

இவற்றுள் சாரதா நவராத்திரிக்கே மிகவும் சிறப்பான இடமுண்டு. மகிஷாசூரன் என்றும் அசுரன் சாகாவரம் பெற தவமிருந்து பிரம்மனிடம் கேட்க, அதற்கு பிரம்மன் மரணம் எல்லோருக்குப் நிகழக்கூடியது, அதனால் வேறு வரம் கேள் என்று கூற, மகிஷாசூரன் அன்னையைத் தவிர வேறுயாராலும் தனக்கு மரணம் நிகழக் கூடாது என்றதும், அவ்வாறே பிரம்மனும் வரம் கொடுத்தார். அசுரன் அனைத்து உலகினையும் ஆட்டிப் படைத்தான். அவனுடைய கொடுமையைத் தாங்க முடியாமல் அனைவரும் அம்பிகையை வேண்ட, புரட்டாதிமாத பூர்வபட்ச சதுர்த்தசியில் அம்பிகை அவதரித்து ஒன்பது நாட்கள் விரதமிருந்து சுக்கிலபட்ச அஷ்டமியில் அசுரனை வதம் செய்தாள். அதனால் நவமியில் அன்னையை வெற்றித் திருமகளாகக் கொண்டாடினார்கள். அசுரனை அழித்துக் கொண்டாடும் நாள் விஜயதசமி என்று போற்றப்படுகிறது.

நவம் என்றால் ஒன்பது. அதாவது அவ்வாறான ஒன்பது நாட்களும் மலைமகள், அலைமகள், கலைமகள் மூவருக்கும் மூன்று நாட்கணக்கில் இரவில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

முதல் மூன்று நாட்களும் வீரத்திற்கு அதிபதியான துர்க்கா தேவிக்கும், அடுத்து வரும் மூன்று நாட்களும் செல்வத்திற்கு அதிபதியாக விளங்கும் இலட்சுமி தேவிக்கு, இறுதி மூன்று நாட்களும் கல்விக்கு அதிபதியாய் விளங்கும் சரஸ்வதி தேவிக்கும் பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. இறுதி நாளான பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாடப்படுகின்றது. விஜயதசமி அன்று ஆலயங்களில் மகிஷாசுரசம்காரம் நடைபெறுவதால் இரவில் மட்டுமே பூசை நடைபெறும். முதல் நாளன்று தூய்மையான ஒரிடத்தில் கும்பம் வைத்து சுற்றிவர மண்பரப்பி அதில் நவதானியங்களை இட்டு முளைக்க விடவேண்டும். நவதானியம் ஒன்பது நாட்களில் செழித்துவளரும். அதன் செழிப்பைக் கொண்டு குடும்பத்தின் அல்லது ஊரின் வளத்தை உணர்ந்து கொள்வது விசேடமானது. நவராத்திரி விழா காலத்தில் ஒன்பது கன்னிப்பெண்களை தேவியின் அம்சமாக பாவித்து ஆராதித்து மஞ்சள், குங்குமம், பட்டு வஸ்திரம் கொடுப்பது சிறப்பானதாகும். ஒன்பது நாட்களும் அன்னைக்கு வகைவகையான அலங்காரம் செய்து அமுது படைத்தல் வேண்டும்.

முதல் நாள் தேவியை குமாரியாகவும், இரண்டாம் நாள் இராஜ ராஜேஸ்வரியாகவும், மூன்றாம் நாள் கல்யாணியாகவும், நான்காம் நாள் ரோகிணிதேவியாக, ஐந்தாம் நாள் காளிதேவியாக, ஆறாம் நாள் சாம்பவியாக, ஏழாம் நாள் அன்னபூரணியாக, எட்டாம் நாள் துர்க்கையாக ஒன்பதாம் நாள் சுபத்திராதேவியாக நைவேத்தியம் செய்து தேவியை நாம் வழிபடவேண்டும். சரஸ்வதிக்குரிய இறுதி நாளான ஒன்பதாம் நாள் ஆயுத பூஜை என்றும் கலைமகள் விழா என்றும் சிறப்பித்து கூறப்படுகின்றது. பாடசாலை, கலைக்கூடம், தொழிற்சாலை, வீடுகள் போன்றவற்றில் இத்தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பத்தாம் நாள் விஜயதசமியன்று கோயில்களில் வாழைமரம் வெட்டும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. அம்பாள் எழுந்தருளி வலம் வாழைமரம் வெட்டும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. அம்பாள் எழுந்தருளி வலம் வந்து வாழைமரம் வெட்டும் வழக்கம் இருந்து வருகிறது. விஜயதசமியில் அம்பு போதல் என்று இதனை கூறுகின்றனர். மடமையின் உருவான மகிஷாசூரனை அம்பாள் அழித்த வெற்றித் திருநாளாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. அறியாமையை நீக்கிய இந்த நன்நாளில் அறிவை நாடிச் செல்லும் முதல் நிலையாக வித்தியாரம்பம் செய்தல் எத்துணை பொருத்தமான செயல் என்பதையும் விஜய தசமி எமக்கு உணர்த்துகின்றது.

நவராத்திரியின் சிறப்பம்சங்களில் ஒன்று கொலுவைப் பதாகும். "மண்ணில் சிலை செய்து அம்பிகையை எழுந்தருளச் செய்து வழிபட்டால் அன்னையின் அருள் கிடைக்கும்" என்று தேவிபுராணம் குறிப்பிடுகிறது. கொலுப்படிகளை ஐந்து, ஏழு, ஒன்பது என்ற அமைப்பில் வைக்க வேண்டும். முதற்படியில் புல், செடி, கொடி ஆகிய தாவரபொம்மைகள், இரண்டாம் படியில் நத்தை போன்ற பொம்மைகள், மூன்றாம் படியில் நண்டு, வண்டு, போன்ற பொம்மைகள் நான்காம் படியில் எறும்பு போன்ற பொம்மைகள், ஐந்தாம் படியில் மிருகங்கள், பறவைகளின் பொம்மைகள், ஆறாம் படியில் மனித பொம்மைகள், ஏழாம் படியில் முனிவர், மகான்கள் போன்ற வடிவங்கள், எட்டாம் படியில் தேவர் நாயன்மார், நவக்கிரகம், போன்றவையும், ஒன்பதாம் படியில் பிரமா, விஷ்ணு, சிவன் பொம்மைகள் போன்றவற்றையும் கொலுப்படிகளில் வைக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் கொலுப்படிகள் உயிர்களின் பரிணாம தத்துவத்தை உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் தமிழர் வாழும் இடங்களிலும் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக இந்தியாவில் ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு பெயர்களில் கொண்டாடப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் தசரா என்றும், வங்காளத்தில் துர்க்கா பூசை என்றும், உத்திர பிரதேசம், டெல்லி போன்ற இடங்களில் இராமலீலா என்றும் கொண்டாடப்படுகிறது. மேலும் ராஜஸ்தான், காசி போன்ற இடங்களில் இராமல்லா என்றும் பெயரிட்டு இந்துக்களால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

இவ் நவராத்திரி விழா கலைத்திருநாள் சக்தி வழிபாட்டை நிலையாகக் கொண்டு, வேதகாலத்துக்கும் முற்பட்டதாக முன்னோர்களால் கூறப்படுகின்றது. "வீடு தோறும் கலையின் விளக்கம்" என பாரதியார் பாடுவது போல அழகுணர்ச்சியும், பூசைவழிபாடுகள் என தூய்மையான சூழலையும், உருவாக்கி சமூக ஒற்றுமையை வளர்ப்பதில் இவ் நவராத்திரி விழா சிறப்பிடம் பெறுகிறது.

ஆகவே இப்புனித நோன்பை நாம் வெறுமனே கொண்டாடாமல் ஒவ்வொருவருடைய மனங்களிலும் நின்று ஆட்சி புரியும் பொறாமை, பொய், காமம், குரோதம், வஞ்சகம், ஆணவம் ஆகியவற்றை சம்ஹாரம் செய்து இவ் உலகிற்கு எப்படி ஒன்றுமே இல்லாமல் வந்து பிறந்தோமோ அதே போல்தான் போகவும் போகிறோம் என்பதை உணர்ந்து நிலையற்ற உலக வாழ்க்கையில் மற்றவருக்கு விட்டுக் கொடுத்து என்றுமே நிலைக்கும் ஆன்மீக ஞானத்தை கடைப்பிடித்து முத்தேவிகளின் அருளை பெற்று இறைஞ்சுவோமாக. முத்தேவிகளின் அருளை நாம் பெற்றுய்ய அபிராமிபட்டர் பின்வருமாறு அந்தாதியில் குறிப்பிடுகிறார்.

*தனந் தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா*
*மனம் தரும் தெய்வ வடிவம் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா*
*இனம் தரும் நல்லனவெல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே*
*கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே!*

திருச்சிற்றம்பலம்

## அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நினைவுதின கட்டுரைப் போட்டி முடிவுகள்

### மேற்பிரிவு

**முதலாம் பரிசு (3000 ரூபா)**
செல்வி ஜே. காயத்திரி
அருணோதயாக் கல்லூரி
அளவெட்டி.

**இரண்டாம் பரிசு (2000 ரூபா)**
செல்வன் எஸ். சத்தியபாலன்
ஸ்கந்தவரோதயா கல்லூரி
சுன்னாகம்.

**மூன்றாம் பரிசு (1000 ரூபா)**
செல்வி நா. ஜனுஷா பிரியதர்ஷினி
விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
நீர்கொழும்பு.

**ஆறுதல் பரிசுகள்:**
செல்வி யோ. ஜயந்தா
பெரியகல்லாறு மத்திய கல்லூரி
கல்லாறு.

செல்வி கே. தீபிகா
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
சாவகச்சேரி.

### மத்திய பிரிவு

**முதலாம் பரிசு (3000 ரூபா)**
செல்வி. கி. சுவஸ்திகா
புலோலி மெ. மி. த. கலவன் பாடசாலை
புலோலி.

**இரண்டாம் பரிசு (2000 ரூபா)**
செல்வி சி. இரேணுஹாசனி
பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி
நுவரெலியா.

**மூன்றாம் பரிசு (1000 ரூபா)**
செல்வி அர்ச்சனா அகிலன்
வாழைச்சேனை இந்துக் கல்லூரி
வாழைச்சேனை.

**ஆறுதல் பரிசுகள்:**
செல்வி புவித்தா சூரியமூர்த்தி
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
பருத்தித்துறை.

செல்வி ஜே. கிருஜா
புலோலி மெ. மி. த. க. பாடசாலை
புலோலி.

### கீழ்ப்பிரிவு

**முதலாம் பரிசு (3000 ரூபா)**
செல்வி கோக்கலே அம்ருதா
சத்தியசாய் பாடசாலை
மானிப்பாய்.

**இரண்டாம் பரிசு (2000 ரூபா)**
செல்வி ச. சிவன்யா
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
பம்பலப்பிட்டி. கொழும்பு – 04.

**மூன்றாம் பரிசு (1000 ரூபா)**
செல்வன் ர. சுஜேன்
புலோலி மெ. மி. த. க. பாடசாலை
புலோலி.


**ஆறுதல் பரிசுகள்:**
செல்வி கி. சிந்துஜா
விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
நீர்கொழும்பு.

செல்வன் சி. சுபஸ்ரீபன்
புலோலி மெ. மி. த. க. பாடசாலை
புலோலி.

கர வருடம் மார்கழி மாதம் 09ம் திகதி (25.12.2011) அன்று நடைபெறவிருக்கும் மாமன்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பரிசுகள் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மாமன்றம் நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நினைவுதின கட்டுரைப் போட்டி. மேற்பிரிவில் முதற்பரிசு பெற்ற கட்டுரை.**

# விபுலாநந்த அடிகளின் சமூகப்பணிகள்


செல்வி ஜெ . காயத்திரி
அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.


“தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று”

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க விபுலாநந்த அடிகள் புகழுக்குரியவராய் தோன்றி புகழுடன் வாழ்ந்து புகழோடே மறைந்தவராவார். இவர் சமூகத்துக்கு ஆற்றிய பணிகள் பலவாகும். இவருடைய பணிகளின் முக்கியத்துவம் கருதியே இவர் முத்தமிழ் வித்தகர் எனவும் போற்றப்படுகின்றார். அதாவது தமிழ், ஆரியம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெரும் புலமையும் பெற்றிருந்தார். இவர் ஈழநாட்டின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு பட்டினத்தின் தென்திசையிலே இருபத்தியெட்டு மைல் தொலைவில் அமைந்துள்ள காரைதீவு என்னும் கிராமத்தில் வாழ்ந்த சாமித்தம்பி, கண்ணம்மை தம்பதிகளுக்கு 1892 ஆம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தியொன்பதாம் திகதி அடிகளார் பிறந்தார். இவருடைய பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் மயில்வாகனன் என்பதாகும். கலாசாலை விடுமுறைக் காலங்களில், காரைதீவு வித்துவான் பொ. வைத்தியலிங்க தேசிகரிடம் சென்று கன்னல்தமிழ், இலக்கண இலக்கியங் களையும், வட மொழி நூல்கள் சிலவற்றையும் ஐயந்திரிபுறக் கசடறக் கற்றார்.

1911 ஆம் ஆண்டு கொழும்பு சென்று ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கழகத்தில் சேர்ந்து பயின்று, தேறி 1912 இல் ஆசிரியச் சான்றிதழ் பெற்ற அடிகளார் அதே காலத்தில் தமிழாராய்ச்சியிலும் கருத்து செலுத்தினார். யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிலே பௌதீகவியல் ஆசிரியராகவும், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராகவும் கடமைகள் செய்த பின்னரே துறவு பூண்டார். துறவியாகிய சுவாமி விபுலானந்தர் தொடர்ந்து தமிழாய்விலே ஈடுபாடு கொண்டிருந்தார்.

விபுலானந்த அடிகளார் அனேகமான பட்டங்களையும், பதவிகளையும் பெற்றுக் கொண்டவராவார். மட்டக்களப்பில் இரண்டாண்டுகள் ஆசிரியப்பணி புரிந்த பின் 1915 இல் விஞ்ஞா னக்கலையில் டிப்ளோமா பட்டம் பெற்றார் பண்டிதர் மயில்வாகனனார். 1917 இல் யாழ்ப்பாணஞ் சென்று அங்குள்ள சம்பத்திரிசியார் உயர்தரக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகப் பணிபுரிந்தார்.1920 இல் யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பதவி பெற்று அப்பதவிக்கு சிறப்பான பங்காற்றினார். 1924 இல் சித்திரை மாதத்து சித்திரை நட்சத்திர பூரணைத் திருநாளில், சிவானந்தா சுவாமிகளிடம் ஞானோபதேசமும், காவியுடையும், சுவாமி விபுலானந்தர் என்னும் தீட்சா நாமமும் பெற்று இராமகிருஷ்ண சங்கத் துறைகளுள் ஒருவரானார். பின்பு இராமகிருஷ்ண சங்கத்தின் கிளை நிறுவன மொன்றை நிறுவினார், கல்வி நிறுவனங்கள், மாணவரில்லங்கள் பலவற்றை அமைத்தார்.

கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய இடங்களில் ஆச்சிரமங்களைத் தோற்று வித்தார். மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் இருக்கும் சிவானந்த வித்தியாலயமும், ஏழை மாணவரில்லமும், யாழ். வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம், திருகோணமலை இராம கிருஷ்ணமிஷன் இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு விவேகானந்த மகளிர் ஆங்கிலக் கல்லூரி, காரைதீவு சாரதா வித்தியாலயம் என்பவையும் அடிகளாரால் உருவாக்கப்பட்ட குறிப்பிடத்தக்க கலா நிலையங்களாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழக முதல் தமிழ் பேராசிரியராக 1931 இல் அமர்ந்த சுவாமிகளை 1943 இல் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முதல் தமிழ்ப் பேராசிரியராக அமரும்படி அழைத்தனர்.

விபுலாநந்தர் இலக்கியத்துறைக்கு பெருமளவு முக்கியத் துவத்தினை அளித்துள்ளார். அந்த வகையில் அவரின் தமிழியற்பணிகளை நோக்குமிடத்து முதற்கண் எம்மனத்திலே தோன்றுவது அவருடைய யாழ்நூல் வெளியீடாகும். பண்டைய தமிழிலக்கியங்களிலும் சிலப்பதிகாரம் அதன் உரையிலும், ஏனைய இசை தொடர்பான நூல்களிலும் கூறப்பட்ட செய்திகளிலெல்லாம் ஆராய்ந்து பண்டைத் தமிழருடைய யாழ் எத்தகைய தென்பதை மீட்டுருச் செய்து அதுபற்றி விரிவான விளக்கங் கொடுக்கும் ஆய்வேடாக யாழ்நூல் என்னும் அரிய நூலை ஆக்கினார். இந்நூல் பழந்தமிழரின் இசை நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக விரித்துரைக்கும் ஒரு முதல் நூல். இப் பெருநூல் பண்டைத் தமிழரின் இசைக்கருவிகளாகிய வில்லியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், பேரியாழ் என்பவற்றுள் சகோடயாழ் பற்றிச் சிறப்பாகவும் ஏனைய நான்கினைப் பற்றி பொதுவாகவும் கூறுவதால் யாழ் நூல் என்னும் பெயர் பெற்றது.

அடிகளாரின் நூல்களில் குறிப்பிடத்தக்க இன்னொரு நூல் மதங்க சூளாமணி ஆகும். இது நாடக இலக்கண அமைதி கூறும் ஒருநூல். இந்நூல் அடிகளாரின் உரைநடைக்கும், செய்யுள் நடைக்கும், மொழி பெயர்ப்பு வன்மைக்கும் ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

விபுலாநந்த அடிகளார் அவர்கள் கவித்துவத்துறைக்கும், பணியாற்றி உள்ளார். அடிகளார் இயற்றிய கவிதைகள் பல விபுலானந்த கவிமலர் என்னும் தொகுதியிலே இடம் பெற்றுள்ளன. இக்கவிதைகள் எவ்வெவ் காலத்தில் இயற்றப்பட்டன என்னும் விபரம் தெரியாத போதும் “ஈசனுவக்கும் மலர்” என்பதே முதற் கவிதையாக அச்சிடப்பட்டது.

*‘வெள்ளை நிறமல்லிகையோ வேறெந்த மாமலரோ*
*வள்ள லடியினைக்கு வாய்த்த மலரெதுவோ?*
*வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல*
*உள்ளக் கமலமடி உத்தமானார் வேண்டுவது”*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கவிதை அடியை உதாரணமாகக் கூறலாம். அடிகளாருடைய "கங்கையில் விடுத்த ஓலை" அவருடைய கவித்திறனைப் புலப்படுத்தும் இன்னொரு கவிதையாகும். அந்த வகையில் கவிதைக்கும் சிறந்த வித்துவராகப் பணியாற்றியுள்ளார்.

கால்நடை மருத்துவம் கற்று விஞ்ஞானப் பயிற்சி பெற்ற சுப்பிரமணிய முதலியார், இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்தியசாதி வரலாறும் என்பது போன்று விஞ்ஞான நூல்களையும் எழுதினார். அடிகளாரோ தான் கற்ற கணித பௌதிகவியலைத் தக்க முறையிற் பயன்படுத்திப் பண்டைத் தமிழர் இசையினை நுணுகியாராய்ந்தார். அதாவது தாம் முயன்று கற்ற ஆங்கிலம், விஞ்ஞான சாத்திரம் முதலியனவற்றை மலினப்படுத்தாமலும், விகாரப்படுத்தாமலும் அவற்றை ஏற்ற முறையிற் பயன்படுத்தினார்.

ஆங்கில இலக்கியத்தை மட்டும் கற்பதோடு நில்லாது அடிகளார் உலக வரலாறு, மானிடவியல், தத்துவம், விஞ்ஞானம், புராதன மொழிகள் முதலியவற்றையும் இடைவிடாது படித்து வந்திருக்கிறார். இவற்றின் விளைவாகவே பரந்த உளப்பாங்கு அவரிடத்தே வளர்வதாயிற்று. தமிழ்க்காதல் அடிகளாரை ஆட் கொண்டிருந்த பொழுதும் அது அளவாகவேயிருந்தது. காதல் வெறியாக மாறவில்லை. பாரதியாரை அடிகளார் போற்றியதற்கு இத்தகைய மன ஒற்றுமையும் காரணமாய் இருந்திருக்கலாம், அடிகளாரால் ஆக்கப்பட்ட வசன நூல் நடராஜ வடிவம் – தில்லைத் திரு நடனம் போற்றுதற்குரியவை.

அடிகளார் எழுதிய "ஐயமும் அழகும்" "வர்ணமும் வடிவும்" "நிலவும் பொழிலும்" "கவியும் சால்பும்" என்னும் கட்டுரைகள் அவருடைய சுவைத்திறனாய்வை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. நல்ல உணவைச் சுவைத்துச் சாப்பிடுவது போல அடிகளார் இலக்கியங்களின் சிறந்த பகுதிகளைச் சுவைத்தார் எனத் திறனாய்வாளர்கள் கருத்து கூறியுள்ளனர்.

அடிகளாருடைய ஏனைய பணிகளை நோக்கின் அவருடைய ஒப்பியல்பு நோக்கு அவர் பிறமொழி இலக்கியங்களிற் கொண்ட சிறப்பான ஈடுபாட்டின் விளைவேயாகும். "யவனபுரத்து கலைச் செல்வம்" என்னும் கட்டுரையிலே அடிகளார் கிரேக்க மொழி இலக்கியங்களிலே காணப்படும் சில பண்புகளை வட மொழியுடனும் தமிழ் மொழியுடனும் ஒப்பு நோக்குகின்றார். ஈழத்திலே ஒப்பியல் ஆய்வுக்கு முன்னோடியாக விளங்கிய இவர் ஒப்பியல் ஆய்வுக்கு பயன்படக்கூடிய தரவுகளை மொழி பெயர்ப்புக்கள் ஊடாகவும், கட்டுரைகளூடாகவும் வழங்கினார். பாரதியாரினுடைய தேசியப் பாடல்களை பிரான்சு நாட்டுத் தேசியப் பாடலுடனும், பக்கிம் சந்திரரின் "வந்தே மாதரம்" பாடலுடனும் ஒப்பிட்டுக்காட்டியுள்ளார். விவேகானந்தன் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த காலத்தில் அதன் முதற் தொகுதி ஒன்பதாவது இதழிலே " இந்து மதம்" என்னும் கட்டுரையை எழுதினார்.

ஈழத்திலே ஈழகேசரிப் பத்திரிகையிலே மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் தம்முடைய ஆக்கங்களை வெளியிட்டுவரும் காலத்திலே விபுலானந்த அடிகளாரும் அப்பத்திரிகையிலே எழுதி வந்தார். மறுமலர்ச்சி கழகத் தொடக்க கூட்டத்திலே அடிகளார் பங்கு பற்றி உரையாற்றியுள்ளார்.

பழமையை நன்கு அறிந்து பேணியது போலவே புதுமையையும் நன்கு சுவைத்து வரவேற்றுள்ளார். தமிழ் உயர் இலக்கியங்களைப் போற்றியது போலவே அவ் இலக்கியங்களுக் கெல்லாம் ஊற்றாயமைந்த நாட்டார் இலக்கியங்களிலும் அடிகளார் ஈடுபட்டார். மட்டக்களப்பு வழக்கு மொழி யாழ்ப்பாணத்து வழக்கு மொழியினின்றும் வேறுபட்டது என்ற உண்மையினை முதன்முதல் உலகுக்கு எடுத்துக்கூறியவர் சுவாமி விபுலானந்தரேயாகும். இவர் கலைமகளில் எழுதிய "சோழநாட்டுத் தமிழும் ஈழநாட்டுத் தமிழும்" என்ற கட்டுரையிலே "மட்டக்களப்பு நான் பிறந்த இடம், ஈழத்தின் கிழக்குப் பாகத்திலுள்ளது. அந்நாட்டு வழக்கு மொழி யாழ்ப்பாணத்து வழக்கு மொழியினின்றும் வேறுப்பட்டது" எனக் குறித்துள்ளார்.

தமிழின் சிறப்பினையும், சுவையினையும், நன்குணர்ந்தவர் சுவாமி விபுலானந்தர் ஆவார். அவர் தலைமை தாங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழக, இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் துறைகள் தமிழ் கூறும் நல்லுலகுக்கு மிகச் சிறந்த அறிஞர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இவர் 1947ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் நாள் இவ்வுலகைத் துறந்தார்.

- உனக்குள் அளவற்ற ஆற்றலும் அறிவும் வெல்லமுடியாத சக்தியும் குடிகொண்டிருக்கின்றது என்று நீ நினைத்தாயானால் அந்த சக்திகளை வெளிக் கொண்டுவர முடியுமானால் நீயும் என்னைப் போல் ஆக முடியும்.
- இந்த உலகம் கோழைகளுக்கல்ல, ஓடும்பலாதே. வெற்றியையோ, தோல்வியையோ எதிர் பார்க்காதே.
- தூய அன்பு எதையும் எதிர்பார்க்காதது. மாறாக அது கொடுக்கும் தன்மையது.
- சுயநலமே ஒழுக்கக்கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுவே ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணமாகும்.
- தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை. அனைத்திற்கும் மேலாக அன்பு இருக்க வேண்டும்.
- எழுமின் விழுமின். கருதிய காரியம் கைகூடும் வரை அயராது உழைப்பின் அளவற்ற பலமும் பெண்ணைப் போல் இரக்கமும் பெற்றவனே உண்மையான வீரன்.
- முதலில் கீழ்ப்பணியக் கற்றுக்கொள். பிறகு கட்டளை இடும் பதவி உனக்குத்தானாகவே வந்து சேரும்.
- காலை மாலை சந்தியாகாலமே கடவுள் வணக்கத்திற்கு ஏற்றது. அப்பொழுது மனம் பரிசுத்தமாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாமன்றம் நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நினைவுதின கட்டுரைப் போட்டி. மத்திய பிரிவில் முதற்பரிசு பெற்ற கட்டுரை.**

# வித்தையில் சிறந்த வித்தகர் விபுலானந்தர்

செல்வி கி. சுவஸ்திகா
யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ், என்பன முத்தமிழ் எனப்படும். மக்களுக்கு எண்ணத்தை ஊட்டுவது இயற்றமிழ்; உணர்ச்சியை ஊட்டுவது இசைத்தமிழ்; நல்வழி காட்டுவது நாடகத்தமிழ். இவ்வாறு நாட்டின் நலனையும் மக்களின் ஒழுக்கத்தையும் கருதியே தமிழுக்கு இலக்கணம் வகுத்த நம் முன்னோர்கள் தமிழை மூவகைப்படுத்தினர். அத்தகைய முத்தமிழிலும் சிறந்து விளங்கிய காரணத்தால், முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டவர் நம் விபுலானந்த அடிகளாவார்.

சுவாமி விபுலானந்தரின் இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் சாமித்தம்பி, கண்ணம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவர் இலக்கியம் சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலிய பல துறைகளில் கற்றுத்தேர்ந்த புலவராவார். இவருடைய ஆரம்பக்கல்வி கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும், மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் அமைந்தது. "கேம்பிறிச் சீனியர்" பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், அவர் புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக சில காலம் பணி புரிந்து, அதன் பின் கொழும்பில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலே சேர்ந்தார். அங்கு விரிவுரையாளராயிருந்த தென்கோவை கந்தையாபிள்ளையிடம் பண்டைய தமிழ் இலக்கியத்தைக் கற்றார்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1912 ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற சான்றிதழுடன் மீண்டும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். 1915 ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் தொழில்நுட்பக்கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916 இல் விஞ்ஞானத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார். அத்துடன் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வில் தோற்றி பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையிலிருந்து இப்பட்டத்தை முதன் முதல் பெற்றவர் சுவாமி விபுலானந்தரே!

கொழும்பு அரசினர் தொழில்நுட்பக்கல்லூரியில் இரசாயன உதவி விரிவுரையாளராகப் பின்னர் பணியாற்றினார். மயில்வாகனனாரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பைத் தேடிக் கொடுத்தன. அதனால் 1917 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனைப் பெருவிருப்புடன் ஏற்றுக்கொண்டார். அத்துடன் 1920 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய விஞ்ஞானமாணி தேர்வில் சித்தியடைந்தார். மயில்வாகனனாரின் மொழிப்புலமையையும், ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி முகாமையாளரும், திருப்புகழ், சிவப்பிரகாசம், சிவஞான சித்தியார் என்பவற்றுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில், 1925 ஆம் ஆண்டிலிருந்து முகாமையாளராகக் கடமையாற்றிய சுவாமி விபுலானந்தர் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் தனது செறிவான கவனத்தைச் செலுத்தும் பொருட்டு 1928 இல் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக "யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச்சங்கம்" என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்க்கலானார். இந்தச் சங்கத்தின் மூலம் பிரவேசப் பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். மயில்வாகனனாரின் இந்த முயற்சி எத்தனையோ பண்டிதமணிகளை நாட்டிற்கு அளித்துள்ளது.

மனத்தை ஈர்த்து வந்த துறவுணர்வு, நாளும் பொழுதும் பெருகி இராமகிருஷ்ணமிஷனில் இணைந்து சங்கமிக்கத் துடித்துக் கொண்டிருந்தது. ஆசிரியப் பதவியைத் துறந்து 1922 ஆம் ஆண்டில் இராமகிருஷ்ணமிஷனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார். மயில்வாகனனாருக்கு சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சிவானந்தரினால் பிரபோத சைத்தன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும் சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன. இரண்டு வருடங்கள் அங்கு பயின்ற அவர் இராமகிருஷ்ணமிஷன் நடத்திய இராமகிருஷ்ண விஜயம் என்ற தமிழ்ச் சஞ்சிகைக்கும், வேதாந்த கேசரி (Vedantakesari) என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராகவிருந்து, பல அரிய கட்டுரைகளை எழுதினார். மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதப் பரீட்சையின் பரீட்சார்த்தகராக நியமிக்கப்பட்டார். தமிழ்ச்சங்க வெளியீடான "செந்தமிழ்" எனும் சஞ்சிகையில் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் பல திறனாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு இருக்கிறார். இக் கட்டுரைகள் "மதங்க சூளாமணி" என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. 1924 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் இவருக்கு "சுவாமி விபுலானந்தர்" என்ற துறவறப்பெயர் வழங்கப்பட்டது. அதன் பின்னர், அவர் இலங்கை திரும்பி இராமகிருஷ்ணமிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.

செட்டி நாட்டரசர் வேண்டுகோளின்படி, சுவாமி விபுலானந்தர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1931 ஆம் ஆண்டு முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணியை ஏற்று, பல்கலைக்கழக வரலாற்றில் என்றென்றும் நினைத்துப் போற்றக்கூடிய தம் தமிழ்த் தொண்டைப் பதிவு செய்தார். அக்காலப் பகுதியில்தான் அவருடைய இசை சம்பந்தமான ஆராய்ச்சி ஆரம்பமாகியது. புராதன தமிழர் இசை பற்றி அவர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். 1934 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தலைவர் பதவியில் இருந்து விலகி இலங்கைதிரும்பிய அடிகளார், இங்கு இராமகிருஷ் ணமிஷன் மேற்கொண்டு வந்த கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

இராமகிருஷ்ணமிஷன் இமயமலைப்பகுதியில் உள்ள அல்மறாச் என்ற இடத்தில் மாயாவதி ஆச்சிரமத்தில் இருந்து வெளியிடும் "பிரபுத்த பாரத" என்ற சஞ்சிகையின் ஆசிரியராக 1934 ஆம் ஆண்டில் விபுலானந்த அடிகள் நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது தான், இசைத் தமிழ் பற்றிய முழுமையான ஆய்வு செய்யப்பெற்று, அரிய நூலாகிய "யாழ்நூல்" உருவாக்கம் பெற்றது. 1943 ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கிய போது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளிற்கிணங்க பணிபுரிய இணங்கினார். தமிழ் ஆய்வுத்துறை எவ்வழியில் செல்லவேண்டுமென்ற திட்டங்களை சுவாமி விபுலானந்தரே வகுத்தார்.

சுவாமி அவர்களின் தமிழ்த்தொண்டால் தலை சிறந்து விளங்குவது அவருடைய யாழ்நூல் ஆராய்ச்சியாகும். சுவாமி அவர்கள் பதினைந்து ஆண்டு காலம் ஆராய்ந்து கண்டுணர்ந்த யாழ்நூலினைக் காந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில், நாளும் செந்தமிழ் இசைபரப்பிய ஞானசம்பந்தனின் சந்நிதானத்தில் இசை விற்பன்னர்கள் வியக்க, கற்றோரும், மற்றோரும் பாராட்ட தேவாரப்பண்களைத் தாமே அமைத்து 1947ஆம் ஆண்டு ஆனித்திங்களில் அரங்கேற்றினார்.

முதல் நாள் விழாவில் இயற்றமிழ்ப்புலவர்கள், அறிஞர்கள் சூழ்ந்து வர சுவாமி அவர்களை தெற்குக்கோபுர வாயிலின் வழியாக திருக்கோயிலுக்கு அழைத்து வந்தார்கள். சுவாமி அவர்கள் தான் ஆராய்ந்து கண்டுபிடித்த வரைபடத்தை விளக்கிய பின்னர், அவர் தயாரித்த முளரியாழ், சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்த்தண்டி வீணைகளைத் தாங்கி சிலர் சென்றார்கள். நாச்சியார் முன்னிலையில் சுவாமி இயற்றிய "நாச்சியார் நான்மணிமாலை" வித்துவான் ஔவை துரைசாமி அவர்களால் படிக்கப்பட்டு அரங்கேறியது. பாராட்டுக்களுக்குப் பின்னர் சங்கீதபூஷணம் க.பெ சிவானந்தம் பிள்ளை சுவாமிகளால் கண்டுணர்ந்த யாழ்களை மீட்டி இன்னிசை பொழிய, முதல் நாள் விழா இனிதாக நிறைவேறியது.

இராமகிருஷ்ணசங்கம் பல ஆன்மீக ஞானிகளை உலகிற்கு அளித்திருந்தாலும், வீரத் துறவி விவேகானந்தருக்கும், தமிழிசைத் துறவி விபுலானந்தருக்கும் ஒப்பாரும் மிக்காரும் இலர் என்றே கூறவேண்டும்.

அடிகளார் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மதுரைத் தமிழ்ச்சங்க இதழான "செந்தமிழ்", காந்தை தமிழ்ச்சங்க இதழான "ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்" ஆகியவற்றிலும் "கலைமகள்", "செந்தமிழ் செல்வி" முதலிய சஞ்சிகைகளிலும் அடிகளார் எழுதிய கட்டுரைகள் வெளிவந்தன. யாழ்ப்பாணத்திலுள்ள புனித சம்பத்திரிசியார் கல்லூரியிலும், வைத்தீஸ்வரா வித்தியாலயம் என்பவற்றிலும் கடமையாற்றினார்.

கருமயோகம், ஞானயோகம், விவேகானந்த ஞானதீபம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகானந்தர் சம்பாசணைகள் என்பன அடிகளார் மொழிபெயர்த்த நூல்களாகும். இவற்றைவிட விபுலானந்தர் வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் "கார்டனர்" என்னும் நூலிலுள்ள பாடல்களைப் "பூஞ்சோலைக்காவலன்" என்னும் பெயரில் அழகிய தமிழில் மொழிபெயர்த்தார்.

மயில்வாகனனார் பிறந்த காலப்பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியது. அக் காலத்தில் ஆங்கிலேயரின் கொடுமையால் சைவ ஆலயங்கள், பாடசாலைகள் அழிவடைந்ததாலும், சைவ மக்கள் சைவசமயத்தைவிட்டு சைவசமயத்தைவிட்டு விலகிச்சென்ற தாலும், சைவசமயம் நலிவடைந்து வந்தது. விபுலானந்தர் மக்களுக்கு இந்து சமயத்தைப் போதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. 1925 ஆம் ஆண்டு இலங்கை வந்த விபுலானந்தர், இந்து தமிழ்ப் பிள்ளைகள் தமது சூழலில் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்குடன் சிறுவர்,சிறுமிகளைத் தனது வீட்டிற்கு அழைத்து, தனியார் வகுப்புக்களை நடத்தினார்.

இவர் பாடசாலையில் கல்விகற்கத் தொடங்கிய காலந்தொட்டு சமயக்கல்விக்கு முக்கியத்துவம் அளித்தார். வெள்ளிக்கிழமை அதிகாலையில் பாடசாலைகளில் கூட்டுப்பிரார்த்தனை நடாத்தல், பக்தி பாசுரப் பாராயணம் செய்தல், வார இறுதியில் சைவ வகுப்புக்களை நடாத்துதல், பண்ணிசைப் பயிற்சி நடத்துதல் முதலான சமயமுயற்சிகளிலும் ஈடுபட்டார். அத்துடன் சமய அனுட்டான வழிமுறைகளையும் வகுத்துக் கொடுத்தார். சைவசமயம், வழிபாட்டுமுறைகள், கடவுளின் அற்புதம் பற்றிப் பிரசங்கம் செய்தார். விபுலானந்தர் "கலைமகள்" சஞ்சிகைகளில் சமயக் கட்டுரைகளையும் எழுதினார்.

சமய மாநாடுகளுக்குத் தலைமை தாங்கி ஆறுதல் வழங்கக்கூடிய கருத்துரைகளை வழங்கினார். மேலும் கல்விப் பகுதிப் பாடநூற்சபை, தேர்வுச்சபை, கல்வி ஆராய்ச்சிச் சபை ஆகியவற்றிலும் உறுப்பினராக இருந்து பணியாற்றினார். சைவசமய பாடத்திற்கான பாடத்திட்டத்தையும், சங்கீத பாடத்திற்கான பாடத்திட்டத்தையும், ஒழுங்காக வடிவமைத்துக் கொடுத்தார்.

நலிவுற்று வந்த சைவசமயத்தை மேன்மை பெறச் செய்தார். கணேச தோத்திரப் பஞ்சாங்கம்,கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, குமரவேல் நான்மணிமாலை, மகாலட்சுமி தோத்திரம் மற்றும் ஈசன் உவக்கும் இன்மலர்கள் போன்ற சமய நூல்களையும் எழுதி வெளியிட்டார். ஆங்கிலம், ஆரியம் போன்ற மொழிகளில் அடிகளார் கொண்டிருந்த புலமை, "மதங்க சூளாமணி" என்னும் நாடகத்தமிழ் நூலின் ஆக்கத்திற்கு பெரிதும் உதவியது.

விபுலானந்த அடிகளார் மனிதாபிமானம் மிக்கவர். ஆதித்தமிழ் குடியின் அறவழியில் வந்தவர். பாதியில் முளைத்தெழுந்த சாதிக்கொடுமை தனைச் சாடித் தகர்த்தெறிந்த சாதனைத் தமிழன் அவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த காலத்தில், ஒடுக்கப்பட்ட ஆதிதிராவிடர் வாழ்ந்த திருவேட்களம் எனும் சேரிக்குச் சென்று பாலர் படிக்கப் பள்ளிகள் அமைத்தார். முதியோர் கல்விக் கூடங்களை ஏற்படுத்தினார். இதை அறிந்த உயர் சாதிப் பார்ப்பனர்கள் சுவாமி மீது ஆத்திரம் கொண்டனர். குடிப்பதற்குக்கூட தண்ணீர் தர மறுத்தனர். இதனால் அடிகள் பலகாலம் உவர்நீரையே குடித்து வாழ்ந்தார். 1948 இல் வெளிவந்த ஈழமணிப் பத்திரிகையில் கவியோகி சுத்தானந்த பாரதியார் பின்வருமாறு அடிகளாரை நினைவு கூருகின்றார்.

"சங்கத் தமிழ் கேட்க வேண்டுமானால் இருவரிடம் கேட்க வேண்டும்.
ஒருவர் பெரும் பேராசிரியர் சாமிநாதையர்;
மற்றொருவர் விபுலானந்தர்".

அக்காலத்தில் தமிழகத்தில் எண்ணற்ற தமிழறிஞர்கள் இருந்தாலும் சங்கத் தமிழில் சிறந்தவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சாமிநாதையர் மற்றும் இலங்கையைச் சேர்ந்த விபுலானந்தர் மட்டுமே என்னும் புகழாரம் அடிகளாருக்கு மட்டுமல்ல, இலங்கைத் தமிழருக்கும் பெருமை தேடித்தந்தது

"யாழ் நூல்" அரங்கேற்றத்துக்குப் பின்னர் உடல் பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பினார். 1947ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை இரவு சுவாமி விபுலானந்தர் அமரத்துவம் அடைந்தார். சுவாமி அவர்களின் பூதவுடல், சுவாமி அவர்கள் கண்ணும் கருத்துமாக உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் விதைக்கப்பட்டுள்ளது. ஈழத்து மக்களிற்கு இவர் ஆற்றிய சேவையினைப் பாராட்டி இலங்கையரசு தேசிய தலைவர்கள் வரிசையில் ஒருவராக இவரைச் சேர்த்துள்ளது. அத்துடன் நாட்டிலுள்ள பாடசாலைகளிடையே கொண்டாடப்படும் அகில இலங்கை தமிழ்மொழிதினம் இவரது மறைவு தினமான அன்றே கொண்டாடப்படுகிறது.

கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலயத் தையும், காரைதீவில் சாரதா மகளிர் கல்லூரியையும் அமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்றம் நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நினைவுதின கட்டுரைப் போட்டி. கீழ்ப்பிரிவில் முதற்பரிசு பெற்ற கட்டுரை

# முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்

செல்வி அம்ருதா கோக்கலே
சத்தியசாய் பாடசாலை, மானிப்பாய்.

ஈழத்திருநாடு பெற்றெடுத்த பேரறிஞர்களுள் பெருமைக்குரியவராய் திகழ்ந்தவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர். இவர் வாழ்நாள் முழுவதும் துறவறத்தில் நின்று தமிழ் வளர்வதற்கு தவம் புரிந்த பெருந்தகை. தமிழின் பெருமையை, தமிழிசையின் பெருமையை, யாழ் எனும் பழந்தமிழ் இசைக்கருவியின் பெருமையை உலகறியச் செய்த பெரியார். இவர் தமிழ் மொழியையும், வடமொழியையும், தாமறிந்த மேல்நாட்டு மொழிகளையும், இணைத்து பயன் செய்து காட்டிய பரந்த உள்ளம் படைத்தவர் மட்டுமன்றி, பழமையை புதுமையால் அழகு செய்தும் புதுமையை பழமையால் அழகு செய்தும் உள்ளுவகை கண்ட முத்தமிழ் வித்தகர் ஆவார்.

மீன்பாடும் தேன்நாடு என்று போற்றப்படும் மட்டக்களப்பு பிரதேசத்தின் தெற்கே உள்ள காரைதீவு என்னும் ஊரில் சாமித்தம்பிக்கும், கண்ணம்மைக்கும் அருந்தவப் புதல்வராக 1892 ஆம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தொன்பதாம் திகதி முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்தார். தாய் தந்தை இவருக்கு மயில்வாகனம் என பெயரிட்டனர். மயில்வாகனம் இளமையில் கல்வியில் மிக்க ஆர்வம் கொண்டவராக விளங்கினார். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளையும் கற்றார். விஞ்ஞானக் கல்வியில் நாட்டம் கொண்டதுடன் பௌதீக சாஸ்திரத்தில் பி. எஸ். ஸி பட்டமும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதர் பட்டத்தையும் பெற்றார்.

யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகவும், பணியாற்றினார். இவர் ஆசிரியர் பணியைச் சிறப்பாக ஆற்றிய காலத்தில் அவரது உள்ளம் துறவு வாழ்க்கையை விரும்பியது. இதனால் இவர் இராமகிருஷ்ண சங்க மடத்தைச் சார்ந்து தமது முப்பதாவது வயதில் பூரண துறவியானார். மயில்வாகனன் என்னும் இயற் பெயரைத் துறந்து பிரபோதசைதன்யர் என்னும் திருநாமத்தைப் பெற்றார். பின்னர் முப்பத்திரண்டாவது வயதில் குருப்பட்டம் பெற்று சுவாமி விபுலானந்தர் என்னும் பெயரைப் பெற்றார்.

தமிழ் மீது தீராத பற்றுக் கொண்ட அடிகளார் தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதினார். இவரது ஆற்றல்களை நன்குணர்ந்து அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதற் தமிழ்ப் பேராசிரியராக நியமித்தனர். பல்கலைக்கழகத்தில் பாரதியாரின் பாடல்களின் சிறப்பினை எடுத்துரைத்து பாரதியின் பெருமையினைப் பறைசாற்றிட வேண்டுமென மாணவர்களை வழிப்படுத்தினார். மகாகவி பாரதியாரின் கவித்துவ ஆற்றலை வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் வித்தகரும் ஒருவராவார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய இவர் பலரதும் பாராட்டுதல்களைப் பெற்று பின்னர் இமய மலைச் சாரலில் உள்ள மாயாவதித் தவப் பள்ளியில் தங்கியிருந்தார். அங்கிருந்த காலத்தில் ''வேதாந்த கேசரி'' ''பிரபுத்த பாரதம்'' என்னும் பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதற் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

முத்தமிழ் வித்தகர் எனப் புகழப்படும் விபுலானந்தர் முத்தமிழ்களில் ஒன்றான இசைத்துறைக்கு ஆற்றிய பணிகள் மகத்தானவையாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் அங்கு இசைப்பேராசிரியராக இருந்த க. பொன்னையாபிள்ளையோடு கலந்து உரையாடியதன் பேறாக இசைத்தமிழ் ஆய்வில் பதினான்கு ஆண்டுகள் ஈடுபட்டதன் பயனாக இசை உலகம் போற்றும் வகையில் யாழ்நூல் என்னும் நூலை எழுதி வெளியிட்டார். இந்நூல் இசைத் தமிழ் ஆய்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

எழுத்தாற்றல், பேச்சாற்றல், கவிபுனையும் ஆற்றல் அனைத்தும் பெற்ற முத்தமிழ் வித்தகர் பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், கவிதை நூல்களையும் ஆக்கியுள்ளார். இயல்பாகவே கவித்துவ ஆற்றல் மிக்க வித்தகரின் கவிதைகள் இனிமையும், எளிமையும், அழகும், வாய்ந்தவையாகக் காணப்படுவதுடன் ஆங்கிலப்புலவர்களின் கவிதை வளத்தினை அவற்றின் சுவை குன்றாது தமிழாக்கித் தமிழர்கள் படித்துச் சுவைக்க வழி செய்தார். மட்டுநகர் வாவியில் இன்னொலியினைக் கூர்ந்து கேட்டு அதன் அருமையினைச் சுவைத்து மகிழ்ந்து ''நீரரமகளிர் இன்னிசைப்பாடல்'' எனும் உரைத் தொடரினை தமிழ்ப் பொழில் என்னும் இதழில் வெளியிட்டார். மேலும் ''ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று'' ''கங்கையில் விடுத்த ஓலை'' ஆகியன வித்தகரின் கவித்துவ ஆற்றலுக்கு சான்றாக அமைகின்றன.

நாடகத் துறையிலும் மிக்க ஈடுபாடு கொண்டிருந்ததற்கு வித்தகர் எழுதிய மதங்க சூளாமணி சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சென்னை தமிழ்ச் சங்கத்தின் கலைச் சொல்லாக்க குழுவின் தலைவராகவும் பணியாற்றினார். இவரின் கல்விப் பணிகள் ஈடு இணை அற்றவை. கல்வித்துறையில் நமது மாணவர்கள் நாட்டம் கொள்வதன் மூலமே நமது சமுதாயம் முன்னேற முடியும் என நன்குணர்ந்த வித்தகர் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலும் பல பாடசாலைகளை நிறுவ வேண்டுமென விரும்பினார். இராமகிருஷ்ண சங்கத்தின் மூலம் மட்டக்களப்பு காரைதீவு திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல பாடசாலைகள் தோன்றுவதற்கு மூல காரணமாக விளங்கினார். மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி, திருமலை இராமகிருஷ்ண கல்லூரி, காரைதீவு விபுலானந்தா வித்தியாலயம் போன்றன முத்தமிழ் வித்தகரின் கல்விப்பணிக்கு சான்று பகருவனவாக இன்றும் விளங்குகின்றன.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் ஒப்பற்ற தொண்டாற்றிய சுவாமி விபுலானந்தர் முத்தமிழ் முனிவர் என்று அறிஞர் உலகம் போற்றுவதோடு, ஈழம் தொட்டு இமயம் வரை புகழ் பரப்பிய இப் பேரறிஞரை நினைவு கூர்ந்து ஊர்கள் தோறும் விழா எடுத்துப் போற்றுவதோடு அன்னாரின் உருவச் சிலைகளை நாட்டியும் வழிபாடு செய்கின்றனர். இவ்வாறு இறவாத புகழாளராய் மறைந்து, வித்தகர் நம்முள்ளம் கலந்து நூற்றாண்டு கழிந்து விட்டது. தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்து தம்மையும், தம் அறிவாற்றலையும் உடைமைகளையும் உலகிற்கு அர்ப்பணித்து வாழ்ந்த உபகாரியாகிய முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் என்னும் திருநாமம் தமிழ் உள்ளவரை என்றும் நிலைத்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவற்றைக் கடைப்பிடித்தல்

செல்வி ஷாயினி ஜெயானந்தா
$7^{C}$ தரம் சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு - 06

சிறுவர்களாகிய நாம் சிறுவயதில் இருந்தே பணிவு, மன்னிப்பு, நீதி, நேர்மை போன்ற பழக்கங்களை பழகிக்கொள்ள வேண்டும். எம்மை விட வயதில் மூத்தவர்களிடமும், ஆசிரியரிட்மும், பெற்றோரிடமும், மேலதிகாரியிடமும் பணிவுடன் நடந்து கொள்ளவேண்டும். பணிவு எம்மை ஒரு போது தாழ்த்திவிடாது. பணிவுள்ளோர்தான் பிற்காலத்தில் பண்புள்ளவராக மாறமுடியும். நல்ல பழக்கத்தை நாம் சிறு வயதுமுதல் கைக்கொள்ளுதல் இன்றியமையாதது. இதனால் நாம் பிறரிடத்தில் மிக மதிப்பாக வாழ முடியும். சமூக சூழல் நன்றாக அமையும்போது சிறு பிள்ளைகளிடம் நல்லபண்பு நல்ல பழக்கம் போன்றவை உருவாகும். இதனால் பிள்ளைகள் மனதில் நல்ல எண்ணம் வளரும். அறிவாற்றலும் நல்லபண்பும் உள்ள ஒருவரை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும்போது நாமும் அவர்களைப்போல் வாழவேண்டும் என்னும் நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ளலாம் இதனால் எம் மனம்விருதியடைகின்றது. அனுபவத்தால் நம்மை பாதுகாத்து அறிவூட்டும் பெரியோர்களிடம் பணிவு, அடக்கம், பயபக்தி, கட்டுப்பாடு உள்ளவராக இருக்க பழக வேண்டும். அவர் தனது அனுபவத்தினால் கூறும் நல்ல போதனையை கடைப்பிடிக்கவேண்டும். இதுவும் நல்ல பழக்கங்களுள் ஒன்றாகும்.

நல்ல பண்புகளுள் முக்கியமானது மன்னிப்பு ஆகும். மன்னிப்பவர் மனிதாபிமானம் உள்ளவர் என கருதப்படுகிறது. இறைவன் கூட மன்னிப்பு என்னும் உயர்ந்த பண்பை கொண்டுள்ளான். இதனால் நாம் கடவுளை தினமும் வணங்கவேண்டும்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்"

இது திருவள்ளுவர் மன்னிப்பு என்னும் உயர்ந்த பண்பை பற்றி எழுதிய கவசமாகும்.

மன்னிப்பதும் மறப்பதும் மனித இயல்பாக இருக்க வேண்டும் நாம் அவசியமற்றவற்றை மறக்கவும், மன்னிக்க கூடியவற்றை மன்னிக்கவும் பழக வேண்டும். நாம் நமது கடமைகளை செய்யும் போது சரிவரச் செய்ய வேண்டும். அப்போதுதான் செய்யும் வேலைக்கு எப்பொழுதும் நல்ல பலன் கிடைக்கும். நாம் செய்யும் செயலை இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். இதனால் நாம் செய்யும் செயல்களை நேர்மையுடனும், பயபக்தியுடனும், செய்ய வேண்டும். மூத்தோர் கூறிய அறிவுரைகளை கேட்பதனால் எமது வாழ்வு மேன்மையடையும். ஏனைய உயிர்களை வருத்துவது தவறான காரியம். பஞ்சமா பாதகங்களான கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், காமம் போன்றவற்றை நாம் தவிர்க்கவேண்டும். பிறர் பொருள் மேல் ஆசைப்படாமல் இருக்கப் பழகவேண்டும். சைவப்பண்பையும், மன்னிப்பு, நீதி, நேர்மை போன்ற நல்ல பழக்கங்களையும் கடைப்பிடித்து சமுதாயத்தில் நல்லவராய் வாழ வேண்டும்.

## விநாயகர் சதுர்த்தி அபிஷேகம்


**அகில இலங்கை இந்து மாமன்ற ஆராதனை மண்டபத்தில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமானுக்கு செப்ரெம்பர் முதலாம் திகதி வியாழக்கிழமை விநாயக சதுர்த்தி தினத்தன்று விஷேட அபிஷேக, ஆராதனைகள் இடம்பெற்றன. விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களுள் விநாயக சதுர்த்தி விரதமும் ஒன்றாகும். இந்துக்களுக்கு விநாயகர் பூசை எத்தனை முக்கியம் வாய்ந்ததோ அதே போன்று ஆவணி மாதத்தில் சுக்கில பட்சத்தில் இடம் பெறும் சதுர்த்தி தினமும் முக்கியமானதாகும். மாமன்ற உறுப்பினர் திரு. டப்சி கனகரத்தினம் அவர்களின் அனுசரணையில் இடம் பெற்ற விநாயகர் சதுர்த்தி அபிஷேகக் கிரியைகளை சிவஸ்ரீ விமலநாதசர்மா, சிவஸ்ரீ அமிர்தேஷ்வரசர்மா கோவிந்தராஜசர்மா ஆகியோர் நடத்தி வைத்தார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவப் பாரம்பரியம் பேணுவோம் வாரீர்



**விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா**

நமது மக்களின் தாய் மொழி செந்தமிழ். நமது மக்களின் வாழ்க்கை நெறி சிவநெறி. செந்தமிழும், சிவநெறியும் நமது இரு கண்கள். இம்மையிலும், மறுமையிலும் நமக்கு உறுதி தருவது சிவநெறியே. சைவ சமயத்தில் நாம் பிறந்துள்ளமை அதனைப் பாரம்பரியமாக பெற்றுள்ளமை நாம் செய்த பாக்கியமே. சைவநெறி ஓர் உன்னதமான வாழ்க்கைத் தத்துவம்.; தனித்த பண்பாட்டின் ஆணிவேர். சைவ சித்தாந்த சாஸ்திரங்களும் தோத்திரங்களும் வாழ்வு நெறியைத் தெளிவுபடுத்துகின்றன.

"எனது வீட்டின் சாளரங்கள் யாவும் திறந்து இருக்க வேண்டும்; அவையூடாக காற்று அனைத்துத் திசைகளில் இருந்தும் உட்புக வேண்டும். அதனை யான் சுவாசிக்க வேண்டும். ஆனால் அக்காற்றினால் யான் அடிபட்டுப் போகமாட்டேன். நான் நானாக இருந்து எனது தனித்துவத்தைப் பேணுவேன்" இது மகாத்மாகாந்தி அடிகளின் முடிபாகும்.

இது போன்றே சைவ சமயமும் உலகளாவிய சிந்தனை உடையதாக இருப்பினும், அதன் தனித் தன்மையை இழக்காது. இதுவே உண்மை.

சைவமக்கள் தமது தனித்துவத்தை பேணும் அதே வேளையில், மாற்றுச் சமயத்தினரின் கொள்கையை நிந்தனை செய்யக்கூடாது. அதே வேளை எமது கலாசாரத்திற்குத் தீங்கு நேர்ந்தால் ஒருமித்த குரலில் கண்டிக்கவும் தயங்கக் கூடாது. இந்தப் பணியில் தனிமனிதனிலும் பார்க்க ஆலய தருமகர்த்தாக்கள், கோயில் அர்ச்சகர்கள், சைவ சமய நிறுவனத்தினர் இவர்களின் பணி முதன்மையானதும், முக்கியமானதும் ஆகும்.

ஆலயங்களில் சைவ ஆகமமுறைகள் ஒழுங்காகப் பேணப்பட வேண்டும் என்பதில் ஆலய தர்மகர்த்தாக்கள் கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும்.

சைவர்களுக்கென்று சில ஆசாரங்கள், பாரம்பரிய பழக்கங்கள் உள்ளன. அவற்றை பேணுதல் மிக அவசியம். திருகோயில் செல்லல், திருநீற்றினை சைவ மரபுப்படி சாத்துதல், சைவ சீலங்களை அனுசரித்தல், விரதங்களைக் கைக்கொள்ளல் என்பனவற்றை நாம் இயன்றவரை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும்.

இன்று சைவசமயத்தின் தனித்துவத்துக்குப் பல்வேறு திசைகளில் இருந்து, சவால்கள் வருகின்றன. நாயன்மார் காலத்திலும் இவ்வாறான அரசியல் ரீதியான நெருக்கடிகள் ஏற்பட்டன. அவர்கள் அதனை அன்பினாலும், அறத்தாலும், உறுதியாலும் வெற்றி கொண்டனர். இன்றும் மத மாற்றம் என்ற போர்வையில் தொல்லைகள் பல ஏற்படுகின்றன. அத்தொல்லைகளை அன்பின் மூலமும், அயராத பணிகள் மூலமும் அவற்றைப் புறங்காண வேண்டும். இன்னும் கலாசார ரீதியில் எமது மக்களின் புலம்பெயர்வு காரணமாக வேற்றுக் கலாசாரங்கள் எமது சமயத்திற்குள்ளே புகுந்து சீரழிக்க முற்படுகின்றன. அவற்றிற்கும் நாம் முகங்கொடுக்கத் தயாராக வேண்டும்.

வெறும் வாய்ச்சொல் வீரர்களால் இதனை வெற்றி கொள்ள முடியாது. சைவ சமயக் கருத்துக்களை மக்களின் உள்ளங்களில் ஆழமாக வேரூன்றச் செய்ய வேண்டிய அர்ப்பணிப்பு உணர்வு வேண்டும்.

சைவத்தின் தனித்துவத்தை நாம் பேண விரும்புவது அச்சமயத்தின் மீது கொண்டுள்ள எல்லையற்ற அன்பினால்தான். நந்திக் கொடியின் பெருமையை இலங்கையி[illegible], தம[illegible]திலும், மேலை நாடுகளிலும் மக்[illegible]ன் உள்ளங்களி[illegible]பதிக்க, [illegible] கூடிய ஆர்வத்துடன் இறைவன் அருளால் பணிசெ[illegible]து கொ[illegible]ருப்பது எமது பாரம்பரிய அடையாளங்களைப் பேணிப் பா[illegible]துகாப்[illegible]காகவே ஆகும். நந்திக்கொடி; சைவக்கொடி சிவனார் கொடி; சை[illegible] மக்கள் தமது இல்ல விழாக்களில், சமூக விழாக்களில், ஆலய விழாக்களில் ஏற்ற வேண்டிய கொடி.

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறை[illegible] என்ற பரந்த சிந்தனை, உலகளாவிய நோக்கு எமது நோக்கு. அன்புவழி நின்று அருட்பணி செய்வதே எமது குறிக்கோள். சமயங்கள் வழிபடுவதற்கு உரியதே தவிர ஆராய்ச்சிக்கு உரியதன்று. அருள் அனுபவத்தைப் பெறச் செய்வதே சமயங்களின் ஆழ்ந்த நோக்கமாகும்.

சைவ மக்கள் தமது தனித்துவத்தைப் பேண வேண்டும். கலை கலாசாரத்தினை தமது வாழ்க்கையில் அனுசரிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. செந்தமிழ், சிவநெறி ஆகியவற்றின் வாரிசுகள் நாங்கள் என்பதை மறக்கக் கூடாது.

**செந்தமிழ் இன்பத்தை நுகர்வோம் ;**

**சிவநெறி அமிழ்தத்தைத் துய்ப்போம் ;**

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் .**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப ஒளியில் திவ்வியதரிசனம்

# திருவிளக்கீடு

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குரு MA.

கார்த்திகை மாதக் கார்த்திகை திருக்கார்த்திகை எனப்படும். கார்த்திகை மாத சுப தினங்களுள் திருக்கார்த்திகை யன்று இடம் பெறும் திருவிளக்கீடு மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இது ஒரு ஜோதி வழிபாடு ஆகும். இதனை விட, கார்த்திகை மாதத்தில் இடம் பெறும் சோமவார விரதம், மகரிஷ யாக்ஞவல்கிய ஜயந்தி, கருட பஞ்சமி, கால பைரவ விரதம், திரிடிரோத்சவம், மகாவிஷ்ணுவின் ஒரு அவதாரமான தத்தாத்திரேய ஜயந்தி ஆகிய விஷேடங்களும் முக்கியம் வாய்ந்தவை.

திருவிளக்கீடு, கார்த்திகை மாத காாத்திகை நட்சத்திரத்திலே ஆலயங்களிலும், இல்லங்களிலும் கொண்டாடப் பெற்று வருகின்றது. இந்துக்களின் மத்தியில், பண்டு தொட்டு நிலவி வரும் விழாக்களை நோக்கின் சூரிய வழிபாடு, கோமாதா வழிபாடு, அக்கினி வழிபாடு, நாக வழிபாடு, விருட்ச வழிபாடு இயற்கை வழிபாடு, என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவ்வழிபாட்டு முறைகள் காலங்கடந்தவை. எவரால் எப்போ ஆரம்பிக்கப்பட்டவை என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. இவற்றுள் மேன்மை பெற்றது அக்கினி வழிபாடு. அக்கினியால் ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும் அக்கினியோடு சம்பந்தப்பட்ட, தீப வழிபாடே திருவிளக்கீடு ஆகும்.

பஞ்ச பூதங்களில் ஒன்றான தீ, மற்றைய நான்கினையும் யாம் அறிந்து கொள்ள வழி வகுக்கின்றது. அறிவுச் சுடர் அறியாமை எனும் அகஇருளை அகற்ற, தீபச் சுடர் புற இருளை அகற்றி நிற்றல் கண்கூடு.

திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம், விஷ்ணுவாலய தீபம், சர்வாலயதீபம், இல்லங்களில் விளக்கீடு என திருவிளக்கீடு கொண்டாடப்படும்.

திருவிளக்கீடன்று எண்ணெய் விளக்கு, நெய்விளக்கு, மாவிளக்கு, சொக்கப்பனை, ஏற்றுவது மரபு. பெரும் பாலும் பெண்கள், தினையரிசி மா எடுத்து, தேன், சர்க்கரை கலந்து பிசைந்து அகல் விளக்குகள் செய்து, விளக்கின் விளிம்பில் குங்குமம் பூசி அவற்றை அழகுபடுத்த அதனுள் நெய் விட்டுத் திரியிட்டு, சுவாமியின் சந்நிதியில் பெரிய தலைவாழையிலை, அல்லது தாம்பாளத்தில் அடுக்கி நிவேதித்து வழிபடுவர்.

குமாராலய தீபமன்று, முருகனாலயத்தில், மாவிளக்குப் பூசை இடம் பெறும். முருகன் சந்நிதியே ஒளி மயமாயும், அருள் மயமாயும் விளங்கும். இத்தெய்வீகக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமையும்.

முருகப்பெருமானுக்கும் கார்த்திகைக்கும், நெருங்கிய தொடர்புண்டு. சிவமைந்தன் முருகன், ஆறு குழந்தைகளாக, சரவணப் பொய்கையில் தோன்றி, கார்த்திகைப் பெண்களால் பாலூட்டிச் சீராட்டி, வளர்க்கப் பெற்றமையால், கார்த்திகேயன் எனும் நாமத்தையும் பெறுகின்றான்.

திரிபுர தகனமும் இப்புண்ணிய தினத்திலே இடம் பெற்றதாக வரலாறு உண்டு. தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி ஆகிய கொடிய அசுரர்கள், பொன் வெள்ளி இரும்பு ஆகியவற்றால் அமைக்கப் பெற்ற பறக்கும் கோட்டைகளுள் அமர்ந்து கொண்டு ஆணவ மயக்கத்தினாலே தேவர்களைத் துன்புறுத்தியபோது, எம் பெருமான் தனது புன்னகையொன்றினால் அவர்களது முப்புரங்களையும் எரித்தொழித்த சம்பவமே திரிபுரதகனமாகும்.

திருக்கார்த்திகையன்று ஆலய முன்றிலிலே, உயரமான பனைமரம், அல்லது தென்னங்குற்றியை நாட்டி, அதன் உச்சியில் காய்ந்த பனை அல்லது தென்னோலைகளைப் பந்தமாகக்கட்டி, அதில் தீபமேற்றி விளாசவிட்டு எரிப்பர். இஃது சொக்கப்பனை எரித்தல் எனப்படும்.

திருவிளக்கீடு அன்று தீபங்களை ஏற்றும் போது நாமும் தூயவராகி உரிய இடத்தையும் மிகச் சுத்தமாக வைத்திருத்தல் அவசியம். தீபத்திற்கு உகந்தவை நெய், தேங்காய் எண்ணெய், எள் எண்ணெய், இலுப்பெண்ணெய் முதலியனவாம். தீபத்திற்குரிய திரிகள், மஞ்சள் அல்லது வெண்ணிற நூல்களால் திரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். தீபம் ஐந்து அல்லது மூன்று முகங்கள்கொண்டனவாய் அமைதல் வேண்டும். ஐந்து முகங்களுக்கும் திரியிட்டுத் தீபமேற்றுதல் மிகச் சிறந்ததாகும்.

"இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரி கொளிஇ
நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது" என நெடு நல்வாடை கூறுவதிலிருந்து தீப வழிபாடு தொன்மை வாய்ந்தது என்பதை யாம் அறிய முடிகின்றது.

பிரம்ம விஷ்ணுக்கள் அடிமுடிதேடிய போது முடிவில் சிவனார் தமக்குக்காட்டிய அருட்பெருஞ் சோதி வடிவத்தை, மீண்டும் தமக்குக் காட்டியருள வேண்டுமென, அவர்கள் வேண்ட கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் காட்டுவோம் என எம் பெருமான் என்றருளியதாகவும் வரலாறு உண்டு.

தீபம் ஏற்றுதலின் உயர்பலனை விளக்கும் ஒரு பூர்வ கதையை இங்கு நோக்குவோம்.

சிவாலயமொன்றில் தீபம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அத்தினம் கார்த்திகைமாதக் கார்த்திகை தினமாகும். தீபத்தின் நெய்யை உண்ணவந்த எலியொன்று அத் தீபத்தின் திரியைத் தற்செயலாக தட்டி விட்டு ஓடவே, அத்தீபம் முன்னிலும் பார்க்கப் பிரகாசமாய் எரிய ஆரம்பித்தது. மங்கியிருந்த தீபத்தை அதிபிரகாசமாக ஒளிரச் செய்த அந்த எலி, மறு ஜென்மத்தில் அரசனாகப் பிறந்து அரசபோகம் அனுபவித்ததாம். தெரிந்தோ தெரியாமலோ இடம் பெற்ற இச்சம்பவத்திற்கு இத்துணை உயர் பயன் எனின், பகுத்தறிவுள்ள யாம் ஆலயத்திலும், இல்லத்திலும், தவறாது தூய்மையாக காலையிலும், மாலையிலும் தீபமேற்றி இறையை வழிபட்டு நற்பயன் பெறவேண்டாமா?

இறைவனை சோதி வடிவினன். "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி" என்றும், "சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே" "கேழில் பரஞ்சோதி" என்றும், "பாசம் பரஞ்சோதி" "மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே" என்றெல்லாம் அழகாக அர்த்தத்தோடு அருளாளர்கள் எம்பெருமானின் சோதி வடிவத்தைப் பாடியவற்றை யாம் அறிவோம்.

ஜோதி வழிபாடு முத்தியை நல்க வல்லது. பஞ்ச பூதங்களில் தீயோடு சம்பந்தப்பட்ட திரு அண்ணாமலைத் தலத்திலே இத்திருநாளன்று மலை உச்சியிலும், அடிவாரத்திலும் தீபமேற்றி அக்காட்சியைத் தரிசித்தபின்னரே விரதகாரர் விரதத்தை நிறைவு செய்தல் வழமையாக உள்ளது. எனவே இத்திருநாளை யாமும் ஒளிமயமாக ஆசாரமாக, மனத்தூய்மையோடு கொண்டாடி இறையருள் பெறுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்மலானை விடுதிப் பிள்ளைகளின் செப்ரெம்பர் மாத பிறந்த நாள் விழா

இரத்மலானை சக்தி இல்லப் பிள்ளைகளின் செப்ரெம்பர் மாத பிறந்ததின விழா 2011.09.03 ஆம் திகதி சனிக்கிழமை சக்தி இல்லத்தில் இடம்பெற்றது. இந்த விழாவுக்கு மாமன்றத் தலைவர், பிரதித்தலைவர், பொதுச் செயலாளர், விடுதிக்குழுச் செயலாளர், இவர்களோடு சமூக நலன்குழுத் தலைவர், சமூக நலன்குழுச் செயலாளர் மற்றும் முகாமைப் பேரவை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என ஏராளமான பிரமுகர்கள் வருகை தந்திருந்தனர். நிகழ்ச்சிகள் சக்தி இல்லப் பிள்ளைகளின் வேத பாராயணத்துடன் ஆரம்பமாகியது.

சிறப்பு விருந்தினராக வந்திருந்த திரு. திருமதி செல்வரத்தினம் தம்பதிகளை முதலில் மாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் அவர்கள் சபையோருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இரத்மலானை, பொறப்பன வீதி முதலாம் வீதியில் அமைந்த 20 பேர்ச் காணியையும் அங்கு அமைந்துள்ள வீட்டையும் மாமன்றத்திற்கு நன்கொடையாக வழங்கியமைக்காக நன்றியைத் தெரிவித்தார். அதேபோல லண்டனிலிருந்து வந்திருந்த சரோஜா சிவானந்தன் அவர்களையும் அறிமுகம் செய்து வைத்தார். அத்தோடு சக்தி இல்லத்தில் நீண்டகாலம் பணியாற்றி அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட சூரியகலாவையும் அவரது கணவன் தாசனையும் அறிமுகம் செய்து சூரியகலாவின் சேவையையும் பாராட்டினார்.

அதன் பின்னர் சக்தி இல்லப் பிள்ளைகள் பிரகலாதன் நாடகத்தினை மேடையேற்றினர். மிக அழகாகவும், நேர்த்தியாகவும் உடையணிந்து சிறந்த அங்க அசைவுடன் நல்ல தமிழ் உச்சரிப்புடனும் கூடிய நடிப்புடன் தமது திறமையை வெளிப்படுத்தி சபையோரின் பாராட்டினைப் பெற்றனர்.

நாடகத்தினை தொடர்ந்து தாசன் சூரியகலா தம்பதிகளுக்கு திருமண வாழ்த்துக் கூறி பொன்னாடைபோர்த்தி மலர்மாலை அணிவித்து கௌரவித்தனர். அதனைத் தொடர்ந்து செல்வா இல்லத்தை வழங்கிய திரு. திருமதி செல்வரத்தினம் ஆகியோரும் பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்பட்டனர். மணிவிழாக்கண்ட விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களையும் அவரின் துணைவியாரையும் மாமன்றம் கௌரவித்தது.

சமூக நலன் குழு செயலாளர் கலாநிதி மு. கதிர்காமநாதன் அவர்களும், அவரது பாரியாரும் தனபாலா தம்பதிகளுக்கு பொன்னாடைபோர்த்தி மலர்மாலை அணிவித்து மணிவிழாக்காணும் தம்பதிகளை வாழ்த்தினர். இதே வேளை இரத்மலானை இந்துக்கல்லூரி அதிபரும், மாமன்ற உறுப்பினருமான மன்மதராஜன் அவர்களும் அவரது பாரியாரும் வாழ்த்துப்பாவழங்கி கௌரவித்தனர். சபையில் வாழ்த்துப்பா வாசிக்கப்பட்டது.

செப்ரெம்பர் மாதம் பிறந்த நாளைக் கொண்டாடும் ஒன்பது பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருக்க அவர்களுக்கு கேக் வெட்டி உண்பதற்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி அ. கயிலாசபிள்ளை, மாமன்ற பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா, சமூக நலன்குழு தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா, திருமதி கணேசலிங்கம், திருமதி இராஜ மனோகரி புலேந்திரன், சமூக நலன் குழுச் செயலாளர் கலாநிதி கதிர்காமநாதன் ஆகியோர் பிறந்தநாள் கொண்டாடும் பிள்ளைகளுடன் கூட இருந்து மகிழ்வித்தனர்.

அதனைத் தொடர்ந்து மாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை அவர்கள் உரையாற்றினார்கள்.

செப்ரெம்பர் மாதம் பிறந்தநாளைக் கொண்டாடும் மாணவர்களுக்கு முதலில் வாழ்த்துத் தெரிவித்த தலைவர், அங்கு வருகை தந்திருந்த செல்வரத்தினம் தம்பதிகளின் பரந்த மனப்பான்மையையும், தாராள சிந்தையையும் குறிப்பிட்டுப்பேசினார். முதியோர் தங்கி வாழவும், பல்வேறு துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உதவும் முகமாகவும் செல்வரத்தினம் தம்பதிகள் தந்த 'செல்வாவிடுதி' இன்று பயன்படுகிறது. அவர்களுக்கு நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மாணவர்க்கான விடுதியுடன் முதியோருக்கான விடுதியும் இப்போது சேர்ந்திருக்கிறது. ஆரம்பத்தில் விடுதிக்கு தலைவராக இருந்த தனபாலா அவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் தனது பணியினை சிறப்பாக செய்தார் என்பதை இங்கு நினைவூட்ட வேண்டும். இன்று நந்திக்கொடி உலகெல்லாம் இந்து ஆலயங்களில் பறக்கிறது என்றால் அது சின்னத்துரை தனபாலாவையே சாரும். மணிவிழாக் காணும் தம்பதிகளுக்கு வாழ்த்துக்கள் எனக் கூறினார். அதே வேளை திருமண பந்தத்தில் இணைந்திருக்கும் தாசன் – சூரியகலா தம்பதிகளுக்கும் வாழ்த்தைத் தெரிவித்த தலைவர், சூரியகலா சக்தி இல்லத்துக்காக அர்ப்பணிப்புடன் தனது சேவையைச் செய்தார் எனவும் குறிப்பிட்டார். இரத்மலானை இந்துக் கல்லூரியை மீண்டும் மாணவர்கள் கற்பதற்கு பெற்றுத்தந்த கணேசலிங்கம் அவர்களை நாம் மறக்க முடியாது. அவரது பணியை திருமதி யமுனா கணேசலிங்கம் அவர்கள் தொடர்ந்து செய்து வருகிறார். அவர் தொடர்ந்து இப்பணியை செய்ய வேண்டும் என்பதே எமது அவா. எமது பிள்ளைகள் கல்வியில் கவனம் செலுத்தி நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதே எமது விருப்பம். பிள்ளைகள் கல்வியில் கவனமின்றியிருந்தால் பின் நாட்களில் கவலைப்பட வேண்டியேற்படும். அப்படி ஒரு நிலை வராமல் சக்தி இல்லப் பிள்ளைகள் கல்வியில் கருத்தூன்றிக் கற்கவேண்டும் என்றார்.

இரத்மலானை இந்துக் கல்லூரி அதிபரும், மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினருமான நா. மன்மதராஜன் அவர்கள் உரையாற்றும்போது நல்ல காரியங்கள் நடைபெறும் போது விழா எடுக்கிறோம். அதாவது தாசன் சூரியகலா புதுமணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளுக்கு விழா, அறுபது ஆண்டு பூர்த்தியையிட்டு தனபாலா தம்பதிகளுக்கு விழா, பிறந்தநாளைக் கொண்டாடும் பிள்ளைகளுக்கு விழா என இனிய நற்காரியங்களை விழாவாகக் கொண்டாடுகின்றோம். இந்த வேளையில் மணிவிழாக் காணும் தனபாலா அவர்களைப்பற்றிக் குறிப்பிட வேண்டும். தனபாலா அவர்கள் இந்த விடுதி ஆரம்பித்தபோது தலைவர் பொறுப்பை ஏற்றிருந்தார்கள். சமூக, சமய சேவையாளரான அவர் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் தனது பணியை சிறப்பாக ஆற்றினார் என்பதை மறக்க முடியாது. அதே போல திரு. கணேசலிங்கம் அவர்கள் மாமன்றத்துக்கு செய்த சேவையை எவரும் மறக்க முடியாது. அவரது பணியை திருமதி யமுனா கணேசலிங்கம் அவர்கள் தொடர்வது எமக்கும் பெருமையாக இருக்கிறது என்றார்.

சமூக நலன் குழுத் தலைவர் சின்னத்துரை தனபாலா பேசுகையில், விடுதிப் பிள்ளைகளின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள வந்த எனக்கும், பாரியாருக்கும் இப்படியொரு கௌரவம் கிடைக்கும் என எதிர்பார்க்கவில்லையென்றும், இது ஒரு மறக்க முடியாத இனிய நிகழ்ச்சி எனவும் குறிப்பிட்டார். விடுதியை ஆரம்பித்தபோது அதன் தலைவராக இருந்தேன். அன்று பல பிரச்சனைகளை எதிர்நோக்கினோம். அவைகளை சமாளித்து நல்லதோர் நிலைக்கு கொண்டுவந்திருக்கின்றோம். என்னையும் என் மனைவியையும் கௌரவித்து, பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா வழங்கி பெருமைப் படுத்தியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். முக்கியமாக தலைவர், செயலாளர், விடுதிச் செயலாளர், பிரதித் தலைவர், மற்றும் திரு. மன்மதராஜன் ஆகியோருக்கும் எனது நன்றிகள். அதேவேளை பிரதி மேயராக இருந்த கணேசலிங்கம் அவர்கள் மாமன்றத்திற்கு பல்வேறுவகைகளில் உதவியதோடு, இந்துக் கல்லூரியை மீட்டுத்தந்து எமது பிள்ளைகள் கல்விகற்க பேருதவி வழங்கியதை எப்போதும் மறக்க முடியாது. இன்று திருமதி இராஜ கணேசலிங்கம், திருமதி இராஜ மனோகரி புலேந்திரன் ஆகியோரும் தொடர்ந்து பணி செய்து வருகின்றார்கள். அவர்களது சமூகப் பணி மேலும் தொடர்ந்து வளரவேண்டும் என்பதே எனது அவா. செல்வா இல்லத்தினை வழங்கிய செல்வரத்தினம் தம்பதிகளுக்கு மாமன்றத்தின் சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

சமூக நலன் குழு செயலாளர் கலாநிதி மு. கதிர்காமநாதன் உரையாற்றும்போது விடுதிப்பிள்ளைகள் அரங்கேற்றிய பிரகலாதன் நாடகம் உணர்ச்சி பூர்வமாகவும், நல்ல உச்சரிப்போடும் விளங்கியது எனவும், அவர்களது அபிநயம், நடிப்பு எல்லாம் நன்றாக இருந்தது எனவும் குறிப்பிட்டார். நான் சமூகப் பணிக்கு வருவதற்கு முன்னுதாரணமாக இருந்தவர் தனபாலா என்பதை இங்கே குறிப்பிட வேண்டும் எனவும் கூறினார். சமூகப் பணியிலே முன்னின்று உழைக்கும் திருமதி இராஜ கணேசலிங்கம், திருமதி மனோகரி புலேந்திரன், திரு. மன்மதராஜன் ஆகியோரையும் மறக்க முடியாது. அவர்கள் பணி தொடரவேண்டும் என்றார். அதனைத் தொடர்ந்து திரு. செல்வரத்தினம் பேசிய போது பிறபிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும் என்று கூறி செல்வா இல்லம் நல்லோர் பணிக்கு வழங்கப்பட்டதை எண்ணி மகிழ்வதாகக் குறிப்பிட்டார். தானும், தனது பாரியாரும் இந்த இல்லத்தை வழங்கியதோடு நில்லாமல் மென்மேலும் உதவிகளைத் தொடர்ந்து செய்வோம் எனவும் கூறி, தம்பதிகள் விடுதிக்கு நன்கொடையும் வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து இந்துஒளி பிரதிகள் வந்திருந்த பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டன. தேவாரத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

# அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுதாபம்

***அமரர் பூதத்தம்பி யோகநாதன்***

சமயப் பற்றாளரும் நம் அனைவருக்கும் உதவும் மனப்பான்மை கொண்டவருமான சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் யோகநாதன் அவர்களின் மறைவு இந்து மாமன்றத்திற்கு பேரிழப்பாகும்.

அகில இலங்கை இந்து மாமன்ற நூலகக்குழுச் செயலாளரும், இந்து வித்தியாவிருத்திச்சங்க நிர்வாகக்குழு அங்கத்தவரும், சுங்கத்திணைக்கள இந்து ஊழியர் சங்கத் தலைவரும், ஜெயசக்தி நாடக மன்றத் தலைவரும் சுங்கத்திணைக்கள சுங்கப் பணிப்பாளருமான பூதத்தம்பி யோகநாதனின் திடீர் மறைவு எமக்கு அதிர்ச்சியைத் தந்தது. தமது நகைச்சுவைப் பேச்சால் அனைவரையும் கவர்ந்த யோகநாதன் மாமன்ற நூலகக்குழு செயலாளராக பல்வேறு வழிகளில் மன்றத்துக்கு உதவியிருக்கின்றார். கலைத்துறையில் ஆர்வம் கொண்ட இவரது ஆற்றலை பல்வேறு வழிகளில் நாம் கண்டிருக்கிறோம். இவரது இழப்பு கலைத்துறைக்கும், நண்பர் குழாமுக்கும், எமக்கும் பேரிழப்பாகும்.

அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி அம்மாள் சமேத நடராஜப் பெருமானின் பாதாரவிந்தங்களை வேண்டுகின்றோம்.

***அமரர் அருணாசலம் திருநாவுக்கரசு***

அருணாசலம் திருநாவுக்கரசு அவர்கள் எம்மைவிட்டு மறைந்தாலும் அவரின் நினைவுகள் மட்டும் எம்முள் நிழலாடிய வண்ணமே இருக்கிறது. சமயநெறிவாழ்ந்த திருநாவுக்கரசு அவர்கள் நல்லதோர் சமயசீலர். தன் வாழ்நாளில் ஓர் அங்கமாக தெய்வப்பணி, சமயப்பணி, சமூகப்பணி என்பவற்றை செய்துவந்த ஒருவர், ஆலயங்கள், சங்கங்கள், மன்றங்கள் போன்றவற்றில் சமய உரையாற்றி சமயக்கருத்துக்களை பரப்பியும் தன் சேவையை முன்னெடுத்துச் சென்றவர்.

கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கத்தில் உப-செயலாளராகவும், சிறப்பு உறுப்பினராகவும் இருந்து சமய, சமூகப்பணிகளை ஆற்றியவர். அதைத்தவிர அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினராகவும் இருந்து தன் சமய, சமூக, கலாசார பணிகளைத் தொடர்ந்தவர்.

அன்பர் திருநாவுக்கரசு அவர்களின் மறைவால் வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவடிகளை வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திக் குறிப்பு

# நல்லை ஆதீனக் கட்டிடத்தின் மீள்நிர்மாணப் பணிகள்

இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமான நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கட்டிடம் நீண்டகால பழமையானதாகவும், வசதிகள் குறைந்த நிலைமையிலும் இருப்பதால், அதனை மீள்நிர்மாணம் செய்யும் வகையில் புதிய கட்டிடத்தை அமைக்கவேண்டிய தேவையேற்பட்டுள்ளது. நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த திருப்பணி வேலைகள் இப்பொழுது ஆரம்பிக்கப்படுவதற்கு திருவருள் பாலித்துள்ளது.

இந்த வகையில் இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த நவம்பர் மாதம் 7 ஆம் திகதியன்று சுபவேளையான காலை 10.15 மணியளவில் இடம்பெற்றது. நல்லூர் கந்தசுவாமி கோயிலிலும், ஆதீன திருக்கோயிலிலும் நடந்த சிறப்பு பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நந்திக் கொடியை ஏற்றிவைத்த பின்னர் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த வைபவத்தில் பேசிய அகில இலங்கை இந்து மாமன்ற துணைத் தலைவரும், யாழ். சைவ ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் "இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமாக விளங்கும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கட்டிடத்தை மீள்நிர்மாணம் செய்யும் வகையிலான அரும்பெரும் பணிகளை இன்று தொடக்கி வைத்திருக்கிறோம்.

இங்கிலாந்திலுள்ள சைவ அன்பர்கள் ஒன்றிணைந்து இதற்கான ஏற்பாடுகளை செய்திருப்பதை சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். ஆதீன முதல்வருக்குரிய அலுவலகம், நூல் நிலையம், மாநாட்டு மண்டபம், பிரார்த்தனை மண்டபம் என்பவைகளை உள்ளடக்கியதாக அமையவிருக்கும் ஆதீனக் கட்டிடம் உள்ளூர் கட்டிடக் கலைஞர்களினதும், தென்னிந்திய சிற்பக் கலைஞர்களினதும் கைவண்ணத்தில், எதிர்வரும் நல்லூர் முருகன் ஆலய மகோற்சவத்திற்கு முன்பதாக நிறைவுபெற்று புதுப்பொலிவோடு திகழும் என எதிர்பார்க்கிறோம். நல்லை ஆதீன மீள்நிர்மாண செயற்பாடுகளுக்காக இங்கிலாந்தில் இயங்கும் திருப்பணிக் குழுவின் பணிகளுக்கு இங்கிருந்து அகில இலங்கை இந்து மாமன்றம் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிக் கொண்டிருக்கிறது. இன்றைய நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்களுக்கும், இந்த நற்பணிக்கு தொடர்ந்து உதவவிருக்கும் அன்பர்கள் அனைவருக்கும் நல்லை ஆதீன ஆலோசனை சபை சார்பாக இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று கூறினார்.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நல்லை ஆதீன திருப்பணிக் குழுவின் சார்பாக பிரித்தானியாவிலிருந்து வருகை தந்திருந்த குழுத் தலைவர் திரு. எஸ். பாலசிங்கம், இணைப்பாளர்களுள் ஒருவரான திரு. அ. தேவசகாயம், யாழ் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவர் திரு. வி. மகாலிங்கம், கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த இந்து மாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை, பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா, பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், பொருளாளர் திரு. வே. கந்தசாமி, மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி அ. கயிலாசபிள்ளை, கட்டிடக் குழுத் தலைவர் திரு. எஸ். ரி. எஸ். அருளானந்தன், சமூகநலன் குழுத் தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா, மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர் திருமதி வனஜா தவயோகராஜா உட்பட குருமார்களும், பல பிரமுகர்களும், சைவப் பெரியார்களும் மற்றும் இந்து மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நல்லை ஆதீன திருப்பணி சம்பந்தமாக மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் தகவல் தருகையில், "பிரித்தானியாவிலுள்ள சைவ அன்பர்கள் ஒன்றிணைந்து இந்த அறப்பணிக்கான நிதியுதவிகள் முதலாக சகல ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள். அகில இலங்கை இந்து மாமன்றம் இதற்கான இணைப்பாளராகவிருந்து கட்டிடப் பணி செயற்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும். இதற்காக மாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி வி. கயிலாசபிள்ளை, பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், பொருளாளர் திரு. வே. கந்தசாமி, உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், மாமன்ற கட்டிடக் குழுவின் தலைவர் திரு. எஸ். ரி. எஸ். அருளானந்தன், குழுச் செயலாளர் திரு. எஸ். திருஞானசம்பந்தர் ஆகியோர் உட்பட ஏழு உறுப்பினர்கள் கொண்ட இணைப்புக் குழுவொன்றும் மாமன்றத்தினால் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

நல்லை ஆதீன மீள் நிர்மாணப் பணிகளைப் பொறுப்பேற்றுள்ள பிரித்தானிய திருப்பணிக் குழுவில் திரு. எஸ். பாலசிங்கம் (தலைவர்), வைத்தியகலாநிதி எஸ். சோமசேகரம் (உப தலைவர்), வைத்தியகலாநிதி கணன் ஸ்ரீதரன் (செயலாளர்), திரு. என். சச்சிதானந்தன் (உப செயலாளர்), திரு. வே. சிவசுந்தரம் (பொருளாளர்), திரு. எஸ். செல்வராஜா (உப பொருளாளர்), இணைப்பாளர்களாக திரு. அ. தேவசகாயம், திரு. ரி. யோகநாதன் உட்பட பல சைவப்பிரமுகர்கள் இணைந்திருந்து பணியாற்று – கிறார்கள்.

ஆதீன கட்டிட வேலைகளைச் செய்வதற்காக மாமன்றம், திரு. க. சண்முகநாதன் தலைமையில் இயங்கும் ஊரெழு ஜெயசன்ஜன் கட்டிட நிர்மாண நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றை செய்துள்ளது" என்று தெரிவித்தார்.

**யாழ். மண்ணிலிருந்து அ. கனகசூரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஒளி – நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழ் வெளியீடு

நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழான "இந்து ஒளி" தீபம்: 15 சுடர்: 4 வெளியீட்டு நிகழ்வு யாழ் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் 25.08.2011 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு தேவாரத்துடன் ஆரம்பமாகியது. நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கி உரையாற்றிய செஞ்சொற்செல்வர், சைவஞானபானு ஆறு. திருமுருகன் அவர்கள் நல்லூர்க் கந்தன் உற்சவ நன்நாளில் அகில இலங்கை இந்துமாமன்றம் இந்து ஒளி சஞ்சிகையை துர்க்காதேவி மணிமண்டபத்தில் சிறப்பு மலராக வெளியிடுவது ஒரு சிறப்பு அம்சமாகும் எனக் குறிப்பிட்டார். இச்சஞ்சிகை நல்லூர்க் கந்தன் உற்சவம் பற்றிய பல தகவல்களைத் தாங்கி வந்திருக்கிறது. இவை தவிர சிவதொண்டர் மாநாட்டு விபரங்களையும், சமயம் சம்பந்தமான செய்திகளையும், மாமன்றத்தின் நல்ல பணிகளையும் சுமந்து வந்திருக்கிறது எனவும் கூறினார். அதனைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். அவர் தனது ஆசியுரையில் மாமன்றம் யாழ் மண்ணில் சிவதொண்டர் மாநாட்டை மிகச்சிறப்பாக நடத்தியது எனக் குறிப்பிட்டார். சிவதொண்டர் மாநாட்டுக்கு நாட்டின் நாலாபுறத்திலிருந்தும் ஏராளமான சிவதொண்டர்கள் கலந்து கொண்டது சமயப் பற்றினை பறைசாற்றியது எனவும், அதேபோல் சமய வளர்ச்சிக்கும், சமயத் தொண்டுக்கும் புத்துயிர் கொடுக்கும் வகையில் சைவ வித்தகர் பட்டப்படிப்பை ஆரம்பித்தது மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இவ்வாறான நற்காரியங்களைச் செய்துவரும் இந்து மாமன்றத் தலைவர் இந்து சிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை அவர்களுக்கும், பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் அவர்களுக்கும், பொருளாளர் வே. கந்தசாமி அவர்களுக்கும், மாமன்ற அங்கத்தவர்களுக்கும் இத்தருணத்தில் சிறப்பாக நன்றி கூறவேண்டும் எனவும், நல்லை ஆதீனத்தின் ஆசி என்றும் மாமன்றத்துக்கு உண்டு எனவும் குறிப்பிட்டார். அத்தோடு மாமன்றம், நல்லை ஆதீனத்துக்கு எப்போதெல்லாம் உதவிகள் தேவையோ அப்போதெல்லாம் கைகொடுத்து உதவி வருகிறது என நன்றிப்பெருக்குடன் கூறினார். அதுமட்டுமல்லாமல் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் கணிசமான பங்களிப்புச் செய்வதையும் குறிப்பிட்டார். மாமன்றம் தொடர்ந்து செய்துவரும் சமய, சமூகப்பணிகள் மேலும் தொடர தன் நல்லாசியையும் வழங்கினார். அதனைத் தொடர்ந்து கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் உரையாற்றினார்கள். அகில இலங்கை இந்து மாமன்றம் தனது அங்கத்துவ நிறுவனங்களை அரவணைத்துக்கொண்டு அவ்வப் பிரதேச மக்களுக்கு சமய, மனிதநேயப் பணிகளை ஆற்றிவருகிறது எனவும், இந்து மக்கள் துன்புறும்போது தன் நேசக் கரத்தை நீட்டி துயர்துடைத்து வருகிறது எனவும் குறிப்பிட்டார். இந்து மக்கள் தமது பெருமைகளையும், வரலாறுகளையும், சமயநெறிகளையும், மண்ணில் வாழ்ந்து மறைந்த ஞானிகளது தத்துவார்த்தங்களையும் மறந்ததாலேயே இத்தனை அல்லலுறவேண்டி வந்தது எனவும், இவைகளை நாம் மீண்டும் தெரிந்து கொள்ளவும், வாசித்து அறிந்து கொள்ளவும் மாமன்றம் வெளியிடும் இந்து ஒளி உதவுகிறது எனவும் குறிப்பிட்டார். அதுமட்டுமல்லாது நம் முன்னோரின் வரலாற்றுப் பெருமைகளை, ஆன்மீக வாழ்வின் சிறப்பை, சித்தாந்தக்கோட்பாடுகளைத் தந்து இந்து மதத்தின் பெருமையினை இந்து ஒளி காட்டி நிற்கிறது எனவும் கூறினார். இந்து ஒளி சிறப்புப் பிரதிகளை திருமதி கனகரத்தினம் அம்மையாரும், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபைச் செயலாளர் நா. தவநாதன் அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

## நடராஜப் பெருமானின் அபிஷேகம்

அகில இலங்கை இந்து மாமன்ற பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு புரட்டாதி பூர்வபட்ச சதுர்த்தசியான (10.10.2011) திங்கட்கிழமை விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன. மாமன்ற முகாமை பேரவைப் உறுப்பினர் திரு எஸ். தியாகராஜா அவர்களின் அனுசரணையில் இடம்பெற்ற நடராஜர் அபிஷேகத்தினை, சிவஸ்ரீ சாமிநாதையர் நிவிர்த்தி சாது ராஜக்குருக்கள் மற்றும் அமிர்தேஷ்வர சர்மா சிவஸ்ரீ கோவிந்தராஜ சர்மா ஆகியோர் நடாத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 ஏப்ரல் தொடக்கம் 2011 செப்ரம்பர் வரையான மூன்று மாத காலத்திற்கு பெறப்பட்ட நன்கொடைகள்

**விசேட நன்கொடைகள்**

| திகதி | அன்பளிப்பு செய்தவர் | தொகை |
|---|---|---|
| 19.04.2011 | திரு.வி. சிவசுந்தரம் U.K | 400 000.00 |
| 27.04.2011 | நவமங்கை ரஸ்ட் U.K | 100 000.00 |

இதில் திரு.வி. சிவசுந்தரம் அவர்களினால் வழங்கப்பட்ட நன்கொடை ரூ.400 000/= யாழ்ப்பாணத்தில் இயங்கும் சைவ ஆராய்ச்சி நிலையத்திற்கான நூல் கொள்வனவு செய்வதற்கு உபயோகப்படுத்தப்பட்டது.

நவமங்கை ரஸ்ட் மூலம் பெறப்பட்ட நன்கொடை ரூ.100 000/= இலிருந்து, யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இடம்பெயர்ந்த இரு மகளிருக்கு தலா 40 000/= பெறுமதியுடைய பசு மாடுகள் கொள்வனவிற்காக சுழிபுரம் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்தினூடாக 28.05.2011ந் திகதி வழங்கப்பட்டது.

2011 ஏப்ரல் தொடக்கம் 2011 செப்ரம்பர் வரையான ஆறு மாத காலத்தில் பின்வருவோரிடமிருந்து தையல் இயந்திரத்திற்கான நன்கொடை பெறப்பட்டது.

| திகதி | அன்பளிப்பு செய்தவர் | தொகை |
|---|---|---|
| 10.05.2011 | திருமதி. அருள்செல்வி ஸ்ரூவாட்13A, 40ம் ஒழுங்கை, கொழும்பு -06 | 20,500.00 |
| " | திருமதி. R. ஜெயநாதன்7B, 46ம் ஒழுங்கை, கொழும்பு -06 | 20,500.00 |
| 11.05.2011 | திரு.M.R. இராஜ்மோகன்34-2E, எலிகவுஸ்வீதி, கொழும்பு -15 | 20,500.00 |
| 23.05.2011 | ராஜன் ஏஜன்சிகொழும்பு -11 | 10,000.00 |
| " | திருமதி. அருள்செல்வி ஸ்ரூவாட்13A, 40ம் ஒழுங்கை, கொழும்பு -06 | 20,500.00 |
| 25.05.2011 | திருமதி. ஓவியாமிலாகிரிய அவெனியூ, கொழும்பு -04 | 20,500.00 |
| 07.06.2011 | திரு.S. பொன்மயிலைநாதன்38, கேவ் வீதி, | 11,600.00 |
| | ஸ்ராத் பீல்ட் 2135 அவுஸ்திரேலியா | |
| " | திருமதி. P. அருமைநாயகம்4/43, பேர்லிங்டன் வீதி, | 5,800.00 |
| | கோம்புஷ் Nsw 2140 அவுஸ்திரேலியா | |
| 16.06.2011 | ஈஸ்வரக்குருக்கள்10/2, பாத்தியா மாவத்தை, களுபோவில | 20,500.00 |
| " | திரு.K. ஜெகநாதன்கொழும்பு -03 | 10,500.00 |
| 17.06.2011 | திருமதி. அருள்செல்வி ஸ்ரூவாட்13A, 40ம் ஒழுங்கை, கொழும்பு -06 | 20,500.00 |
| " | திரு. P. திருச்செல்வம்அஜந்தா கோட்டல், | 10,500.00 |
| | 125 ஓல்கொட் மாவத்தை, கொழும்பு -11 | |
| 17.06.2011 | திரு.V. தனபாலசிங்கம் U.K | 20,500.00 |
| 15.07.2011 | திரு.D.P. கணகரட்ணம் கொழும்பு - 01 | 20,500.00 |
| | திருமதி. அருள்செல்வி ஸ்ரூவாட்13A, 40ம் ஒழுங்கை, கொழும்பு - 06 | 20,500.00 |
| | **மொத்தம்** | **374 900.00** |

இந் நன்கொடைகளிலிருந்து வன்னி மற்றும் யாழ் மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பத் தலைவிகளுக்கு, அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கமாக தலா ஒவ்வொரு சிங்கர் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்மலானை விடுதி நன்கொடைகள்

மாமன்றத்தின் நிர்வாகத்தில் இயங்கும் இரத்மலானை மாணவர்விடுதிக்கு சமைத்த உணவு, உபஉணவுப் பொருட்கள், பால்மா,உடுப்புவகைகள், மருந்து வகைகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் விடுதிக்குரிய பாவனைப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியவர்கள் விபரம்.

### ஜூலை – 2011

1. திரு க. விக்கினசாய் – கொழும்பு – 10
2. திருமதி பாலயோகரி சிவானந்தம் – கொழும்பு – 03
3. திருமதி S. மண்டலேஸ்வரன் – நுகேகொட
4. திருமதி ராதா விக்கினேஸ்வரன் – பொறளை.
5. சாய் சமித்தி
6. விஸ்ணுகோயில் – தெஹிவளை
7. அமாவாசை

### ஆகஸ்ட் – 2011

1. திரு சுரேஸ் சிவா – வெள்ளவத்தை
2. Dr. ரவி ரெட்ணவேல் – U.K
3. Dr. G. உமயோன் – வெள்ளவத்தை
4. திருமதி S. சாரதா. சிவசிதம்பரம் – U. S. A
5. திரு . பாலசிங்கம் – U.K
6. திரு. றஜனி திருநாமவேலவன் – U.S.A
7. திரு. திருமதி . கயிலாசபிள்ளை – கொழும்பு – 03
8. ஒரு அன்பர் திரு. தனபாலாவூடாக கொடுக்கப்பட்டது
9. திருமதி சுப்பிரமணியம் – பொறளை
10. திரு. எம். ரவிக்குமார் – மொறட்டுவை
11. அமாவாசை
12. விஸ்ணுகோயில் – தெஹிவளை
13. திரு. V. ராகுலன். கனடா
14. சாயிசமித்தி

### செப்ரெம்பர் – 2011

1. திருமதி சிவானந்தன் – கொழும்பு – 03
2. திரு. சதா. கோகுலன் – கொழும்பு – 06
3. திருமதி கமலாதேவி தம்பிராஜா – மொறட்டுவை
4. செல்வி J. கந்தசாமி ஐயர் – கல்கிசை
5. திரு. S. கிருபானந்தமூர்த்தி – கொழும்பு – 06
6. திரு. M. ரவிகுமார் – மொறட்டுவை
7. விஸ்ணுகோயில் – தெஹிவளை
8. அமாவாசை
9. சாயிசமித்தி

## இரத்மலானை மாணவர் விடுதி

போர்ச் சூழ்நிலைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பெற்றோர்களை இழந்தும், பாதிக்கப்பட்டுமுள்ள பிள்ளைகளின் நலன் கருதி அகில இலங்கை இந்து மாமன்றம் இரத்மலானையில் ஓர் இலவச விடுதியை ஆரம்பித்து நடத்திவருவதை உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். 1998ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆண் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்விடுதி பதின்மூன்று ஆண்டுகளை நிறைவுசெய்திருப்பது சிறப்புக்குரிய விடயம். அதனைத் தொடர்ந்து 2002ம் ஆண்டு ஜூன் மாதத்தில் பெண் பிள்ளைகளுக்காக 'சக்தி இல்லம்' என்ற பெயரில் மற்றுமொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது.

மாமன்றத்தின் பராமரிப்பில் இயங்கிவரும் இவ்விரு விடுதிகளிலும் 150க்கும் மேற்பட்ட பிள்ளைகள் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்வி பயில்வதற்கான வசதிகளுடன், மேலதிகமாக தனிப்பட்ட வகையில் கல்வி போதிப்பதற்காக பிரத்தியேக வகுப்புகளையும் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது. விடுதியில் மாதந்தோறும், ஒரு விடுமுறை நாளில் அந்த மாதத்தில் பிறந்த பிள்ளைகளது பிறந்தநாளும் கொண்டாடப் பட்டுவருகிறது.

இவ்விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு நீங்கள் அனைவரும் தாராளமாக உதவலாம். பிள்ளைகளுக்கு தினந்தோறும் உணவு, சிற்றுண்டிகளை வழங்குவதற்காக உங்கள் பங்களிப்பையும் எதிர்ப்பார்க்கிறோம்.

இதற்கான நன்கொடை விபரம் வருமாறு.


| விபரம் | சாதாரணம் | விசேடம் |
|---|---|---|
| காலை உணவு | 12,500/= | 15,000/= |
| மதிய உணவு | 17,500/= | 20,000/= |
| இரவு உணவு | 17,500/= | 20,000/= |
| மாலைதேநீர்/சிற்றுண்டி | 12,500/= | 15,000/= |

உணவுக்கான நன்கொடை அல்லது மாணவர்களுக்கு உப உணவுப்பொருட்கள், பால்மா, உடுப்புவகைகள், மருந்து வகைகள் மற்றும் விடுதிக்குரிய பாவனைப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றை நன்கொடையாக தந்து உதவ விரும்புவோர் மாணவர் விடுதி மேற்பார்வையாளருடன் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 011–2625588. அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்துடனும் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறலாம்.

தொலைபேசி இல. 011–2434990
தொலை நகல் இல. 011–2344720



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரணி போற்றும் தஞ்சாவூர்

திருமதி செல்வநாயகி முத்தையா

**தஞ்சையின் பொருள்**

சோழ மண்டலம் என்று பெருமை பெற்ற சோழ நாடு தஞ்சாவூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். தஞ்சை என்பதற்கு குளிர்ந்த வயல்கள் "தண் செய்" என்று பதம் பிரித்து இதற்கு பொருள் சொல்வர். பெருகி வரும் காவிரி ஆறால் இப்பகுதி வளம் மிக்கதாகத் திகழ்ந்தது. இவ்வூர் பற்றிய மிக பழமையான குறிப்புகள் பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணுவின் (கி.பி. 555-590) கல்வெட்டிலும் திருநாவுக்கரசர் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்திலும் இடம் பெற்றுள்ளன. தஞ்சையில் பெரிய கோயில் கட்டப்படுவதற்கு முன் தஞ்சை தளிக்குளத்தார் கோயில் என்றொரு சிவாலயம் இங்கு இருந்ததாகத் தெரிகிறது. தற்போதும் தஞ்சபுரீஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயிலின் பெயராலேயே இவ்வூர் தஞ்சாவூர் என அழைக்கப்பட்டதாக தல வரலாறு கூறுகிறது.

கலைக்கோயில் கட்டிய சோழன் உலகிற்கு ஆன்மீகக் கருத்தையும் பண்பாட்டுச் சிந்தனையையும் வாரி வழங்கி வரும் தமிழகத்திலுள்ள தஞ்சை மண்டலத்தை கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி 13ஆம் நூற்றாண்டு வரை 1500 ஆண்டுகள் பாரம்பரியமிக்க சோழ அரச மரபினர் ஆட்சி செய்தனர். அவர்களின் முதல் 400 ஆண்டுகால ஆட்சிச் சிறப்பை சங்ககாலத் தமிழ் இலக்கியங்களிலிருந்து அறிய முடிகிறது. காவிரியில் கல்லணை கட்டி, காடு திருத்தி, நாட்டை வளம் செய்த கரிகாற் பெருவளத்தான் என்ற சங்க காலச் சோழ மன்னன் கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தான். தொடர்ந்து சோழப் பரம்பரையின் புகழ் சிறிது குன்றியிருந்தாலும், ஆட்சி தொடர்ந்து நடந்தது. கி.பி.850 ஆண்டு சாத்தன் பழியிலி என்ற முத்தரையர் குலச் சிற்றரசனிடம் போரிட்டு 90 விழுப்புண்களை பரகேசரி விஜயாலயச்சோழன் பெற்றான். இவன்தான் தஞ்சாவூர் நகரைக் கைப்பற்றி தனது தலைநகராகக் கொண்டு தஞ்சைச் சோழப் பரம்பரையைத் தோற்றுவித்தான். பிற்காலச் சோழ மன்னர்களின் பரம்பரையில் தோன்றியவரே ராஜராஜசோழன். இவர் சுந்தர சோழனுக்கும், வானவன் மாதேவிக்கும் இரண்டாம் மகனாகப் பிறந்தார். இவன் ராஜகேசரி என்ற பட்டப் பெயருடன் மேலும் 42 சிறப்புப் பெயர்களையும் பெற்றவன்.

**ராஜராஜசோழனின் பெரியய்யா குடும்பம்**

ராஜராஜனுக்கு பல மனைவியர் இருந்தனர். இவர்களில் தந்திசக்தி விடங்கி என்னும் லோகமாதேவியே பட்டத்தரசியாக இருந்தார். இவரைத்தவிர சோழமாதேவி, திரைலோக்கியமாதேவி. பஞ்சவன்மாதேவி, அபிமானவல்லி, லாடமாதேவி, பிருதிமாதேவி, மீனவன்மாதேவி, வீரநாராயணி, வில்லவன் மாதேவி, வானவன் மாதேவி என்ற பத்து தேவியர்கள் மனைவியராக இருந்தனர். வானவன் மாதே விக்குப் பிறந்த ஒரே பிள்ளையே புகழ்மிக்க ராஜேந்திர சோழன். இவனுக்கு ராஜராஜனால் இட்ட பெயர் மதுராந்தகன்.

இது ராஜராஜனின் சித்தப்பா நினைவாக வைக்கப்பட்டதாகும். மதுராந்தகனுக்கு இருசகோதரிகள். மூத்தவள் மாதேவடிகள், இளையவள் குந்தவை. ராஜராஜன் தன்னை வளர்த்த பாட்டி செம்பியன் மாதேவியின் நினைவாக ஒரு மகளுக்கு மாதேவி அடிகள் என்றும், சகோதரி குந்தவையின் நினைவாக ஒரு மகளுக்கு குந்தவை என்றும் பெயரிட்டார். இதன்மூலம் அவருடைய பாச பந்தத்தையும், நன்றியுணர்வையும் அறியமுடிகிறது.

**1006இல் தொடங்கிய திருப்பணி**

ஆயிரம் ஆண்டுக்கு முன் தமிழர்கள் மிக உயர்ந்த பண்பாட்டுடன் கூடிய சமுதாய மரபுகளைப் பேணிக் காத்தனர் என்பதை எதிர்காலச் சந்ததியினர்க்குத் தெரிவிக்கவே மாமன்னன் ராஜராஜன் தஞ்சையில் ஸ்ரீராஜராஜீஸ்வரம் எனும் பெரிய கோயிலைக் கட்டி, அதற்குள் தமது நெஞ்சில் குடியிருந்த பிரகதீஸ்வர எனும் பெருவுடையாரை நிறுவினான். கி.பி. 1006 இல் திருப்பணியைத் தொடங்கி 1010இல் கட்டி முடித்தான். இக்கோயிலின் மூலம் சோழர்கால தமிழகத்தின் வரலாறு கல்வெட்டில், அரசியல், கட்டடம், சிற்பம், ஓவியம், நடனம், இசை ஆகிய பல்கலைகளுடன் சமுதாயப் பண்பியல் மற்றும் இறைக் கொள்கை ஆகியவற்றை நமக்கு இதன் மூலம் மாமன்னர் எடுத்துக் கூறியுள்ளார். ஆயிரம் ஆண்டுகளாக இந்தக் கோயில் தமிழகத்தின் பெருமையை உலகுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது.

**கோயிலைக் கட்டும் எண்ணம் வந்த விதம்**

காஞ்சிபுரத்தில் ராஜசிம்ம பல்லவனால் கட்டப்பட்ட கயிலாயநாதர் கோயில் ராஜராஜனின் மனதை மிக கவர்ந்தது. அக்கோயிலை "கச்சிப்பேட்டுப் பெரிய[illegible] என்று போற்றி மகிழ்ந்தார். இக்கோயிலின் அ[illegible] அவருக்குள் உணர்ச்சிப் பெருக்கையும் பக்தி[illegible] ஏற்படுத்தியது. தானும் ஒரு சிவாலயத்[illegible] அமைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தஞ்சாவூரில் பெரிய கோயில் திருப்பணியைத் தொடங்கினார். காஞ்சி கயிலாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதர் கோயிலைப் பார்த்ததன் விளைவே தஞ்சைப் பெரிய கோயில் கட்டப்பட அடித்தளமாக அமைந்தது.

பொறுமைமிக்க மாமன்னன் ராஜராஜ சோழனின் இயற்பெயர் அருள்மொழி என்பதாகும். இளம் வயதில் பெற்றோரை இழந்ததால் பாட்டி செம்பியன் மாதேவியார், சகோதரி குந்தவை ஆகியோரின் கண்காணிப்பில் வளர்க்கப்பட்டார். அவருடைய மூத்த சகோதரர் ஆதித்தகரிகாலன் பகைவர்களால் கொலை செய்யப்பட்டார். நாட்டுமக்கள் அனைவரும் இளையவன் அருள்மொழியே நாட்டை ஆளவேண்டும் என்று விரும்பினர். ஆனால் ராஜராஜனின் சித்தப்பா மதுராந்தக உத்தமசோழனுக்கு தானே சோழ நாட்டின் மன்னராக வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ராஜராஜனும் அரியணையை விட்டுக் கொடுத்து அவரை மன்னனாக்கினார். அவருடைய மறைவுக்குப்பின், தஞ்சைச் சோழர் வரலாற்றில் பொற்காலத்தைப் பதித்தான் ராஜராஜ சோழன். கி.பி.985ஆம் ஆண்டு தஞ்சைச் சோழ அரசுக்கட்டிலில் அமர்ந்த இவனுக்கு பட்டம் சூட்டும் வரை அருள்மொழி என்ற பெயரே இருந்தது.

**கேரளாந்தகன் வாயில் கோபுரம்**

பெரிய கோயிலின் கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் வாயில்கோபுரம். ராஜராஜன் கி.பி.988ஆம் ஆண்டு சேரமன்னன் பாஸ்கர ரவிவர்மனைப் போரில் வெற்றி பெற்றதைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்குக் "கேரளாந்தகன் வாயில் கோபுரம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது ஐந்து நிலையுடன் அமைந்துள்ளது. கோபுரத்தின் நிலைக்கால்கள் ஒவ்வொன்றும் நான்கு அடி நீளம், மூன்று அடி அகலம், 40 அடி உயரம் கொண்ட ஒரேகல்லால் ஆனவை. கோபுரத்தின் நாற்புறங்களிலும் நாயக்கர் மற்றும் மராட்டியர் காலக் கதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோபுரத்தை ஒட்டிச் செல்லும் சிவகங்கைக் கோட்டை உள்மதில் செவ்வப்ப நாயக்க மன்னரால் கட்டப்பட்டது.

**மராட்டியர் நுழைவுவாயில்**

தஞ்சை பெரியகோயிலில் சிவகங்கைக் கோட்டை எனப்படும் இக்கோட்டை செவ்வப்பநாயக்கர் காலத்தில் ஒரு சதுர கி.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. அகழியை ஒட்டித் தாழ்வாக ஒன்றும் செம்பாறாங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் கிழக்கில் செங்கல், சுண்ணாம்புச் சாந்துகொண்டு 1803இல் மராட்டியர் நுழைவு வாயிலை தஞ்சை மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோஜி அமைத்துள்ளார். வாயிலில் இருபுறமும் விநாயகர் முருகன் சன்றிதிகள் உள்ளன.

**கோயிலைக் கட்டிய தச்சர்கள்**

கல்வெட்டில் தஞ்சைப் பெரியகோயில் "ராஜராஜீச்சிரம்" என்று குறிக்கப்படுகிறது. இலக்கணப்படி ராஜராஜேச்சரம் என்பது சரியானதாக இருந்தாலும், கல்வெட்டுகளில் ராராஜீச்சரம் என்ற பெயரே இடம் பெற்றுள்ளது.

**தஞ்சாவூர்**

பெரியகோயில் மூலவரை பிரகதீஸ்வரர் என்றும், அம்பாளை பெரியநாயகி என்றும் அழைப்பர். இங்குள்ள வாராகியை வழிபட்டால் எல்லா செயல்களிலும் வெற்றி கிடைக்கும்.

**பிரகதீஸ்வரர்**

இக்கோயிலை உருவாக்கியவர் வீரசோழன் குஞ்சர மல்லனான ராஜராஜப் பெருந்தச்சன். இவருடைய பணிக்கு உதவியாக மதுராந்தகனான நித்தவிநோதப் பெருந்தச்சன், இலத்திசடையனான கண்டராத்தப் பெருந்தச்சன், என்பவர்களும் குஞ்சரமல்லனுக்கு துணையாக கோயில் திருப்பணிகளைச் செய்தனர்.

**ராட்சதமதில்சுவர்**

கோயிலைச் சுற்றி சுமார் 28 அடி உயரத்தில் அமைந்துள்ள மதில் ராஜராஜனின் தலைமை அமைச்சரான, சோழ மண்டலத்து உய்யக்கொண்டார், வளநாட்டு வெண்ணாட்டு அமன் குடியான கேரளாந்தகச்சதுர் வேதி மங்கலத்து கிருஷ்ணன் ரமன் என்னும் மும்முடிச் சோழ பிரம்மராயன் என்பவரால் மன்னனின் ஆணைப்படி கட்டப்பட்டது. மதிற்சுவர் மீது வரிசையாக நந்தி உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம் மதிற்சுவரின் வெளிப்புறத்தின், கீழ்பகுதியில் சோழர் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கிழக்கு மேற்காக 800 அடி நீளமும் தெற்கு வடக்காக 400 அடி அகலமும் கொண்டுள்ளன. கோயிலின் பிரகாரச்சுற்றில் கருங்கற்களினாலும், செங்கற்களினாலும், தஞ்சை மன்னர் இரண்டாம் சரபோஜி கி.பி.1803இல் தளம் அமைத்தார்.

**உலகில் முதல் பொற்கோபுரம்**

தட்சிணமேரு என்னும் தஞ்சை பெரிய கோயில் விமானம் முழுவதும் செப்புத் தகடுகளைப் போர்த்தி அதன் மேல் பொன் வேய்ந்தான் ராஜராஜன் எனக் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. 216 அடி விமானம் முழுவதும் தங்கத்தகடு வேய்ந்ததை ஒட்டக் கூத்தர் தக்கயாகப் பரணியில் குறிப்பிட்டுள்ளார். தட்சிணமேருவான தஞ்சை ராஜராஜேஸ்வரத்தை எப்படி ராஜராஜன் பொன்மயமாக அமைத்தானோ, அதுபோல தில்லை நடராஜர் கோயில் விமானத்தை குலோத்துங்கன் அமைத்தான் என்ற செய்தி சிதம்பரம் வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

பிற்காலத்தில் நிகழ்ந்த படையெடுப்புகளில் இந்த விமானத்தில் வேய்ந்த பொன் முழுவதும் சூறையாடப்பட்டு விட்டது.

**வள்ளிதெய்வானையுடன் முருகன் -கோபுர முருகன் மீது திருப்புகழ்**

தஞ்சைப் பெரிய கோயிலில் ராஜராஜசோழன் முருகப் பெருமானுக்கு தனி சந்நிதி கட்டவில்லை. அவர் எழுந்தருளி இருக்கும் திருக்கோயில்களுக்குச் சென்று திருப்புகழ் பாடும் அருணகிரிநாதர் ராஜராஜன் கட்டிய பெரிய கோயிலைக் காணும் ஆவலில் வந்திருக்கிறார். தனிச் சந்நிதி இல்லாததால் கோபுரத்தில் இருக்கும் முருகனையே "தஞ்சை மாநகர் ராஜகோபுரத்து அமர்ந்த பெருமாளே" என்று பாடியுள்ளார். பிற்காலத்தில் முருகப்பெருமானுக்கு பெரிய அளவில் நாயக்க மன்னர்கள் சந்நிதி அமைத்துள்ளனர்.

**கொடிமரம்**

நந்தி மண்டபம் அருகில் மேற்குப் புறத்தில் செப்புத்தகட்டால் மூடப்பட்ட கொடிமரம் உள்ளது. இம்மண்டபம் சிறந்த கலை வேலைப்பாடுகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்கிறது. இது நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்டதாகும். இரண்டாம் சரபோஜி மன்னர் இந்த கொடி மரத்தூண்களுக்கு கொறடு (ஒட்டுத்திண்ணை என்னும் பிடிமானம்) ஒன்றைப் புதிதாக அமைத்துள்ளார். அத்துடன் நந்தி மண்டபத்தின் கிழக்கே ஒரு செங்கல்மேடை அமைத்து, அதில் சித்திரைத் திருவிழாவின் 9ஆம் நாள், சரபேந்திரபூபால குறவஞ்சி என்னும் நாடகம் நடக்க செய்துள்ளார். அதன் எதிரில் வட்டமான மேடை அமைத்து, அதில் அமர்ந்து கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்துள்ளார்.

**பிரமாண்டநந்தி**

தஞ்சாவூர் கோயில் என்றாலே அங்குள்ள விமானமும், நந்தியும்தான் எல்லோர் நினைவிலும் வரும். ஒரே கல்லினால் செய்யப்பட்ட மிகப் பெரிய நந்திகளுள் இதுவும் ஒன்றாகும். (திருவாவடுதுறை கோமுக்தீஸ்வரர் கோயிலில் உள்ள கல்நந்தி தஞ்சாவூர் நந்தியை விடப் பெரியது, (மிகப் பெரியநந்தியும் இதுதான்). திருச்சி அருகிலுள்ள பச்சைமலையிலிருந்து கொண்டு வரப்பட்ட கருங்கல்லால் செய்யப்பட்ட இந்த நந்தி 25 தொன் எடை உடையது. 19 $^{1}/_{2}$ அடிநீளமும் 8 $^{3}/_{4}$ அடி அகலம், 12 அடி உயரமும் கொண்டது. விஜய நகரக் கலைப் பாணியில் அழகும், கம்பீரமும் கொண்டு அமைந்துள்ள இந்த நந்தி தஞ்சை மன்னர்களால் நிறுவப்பட்டதாகும். நந்தி, நந்தி மண்டபம் ஆகியவற்றை கி.பி.17ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்களான அச்சுதப்பநாயக்கர் ரகுநாத நாயக்கர் மற்றும் விஜய நாயக்கர் ஆகியோர் உருவாக்கினர். இவர்களது சிலைகள் இந்த மண்டபத்தூண்களில் உள்ளன. நந்தி மண்டபத்தின் மேல் விதானத்தில் மூன்றாம் சிவாஜி மன்னர் காலத்தில் பூக்களும் பறவைகளும் வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டன.

**இன்னொரு நந்தி**

நந்தி மண்டபத்திற்கு தெற்கே உள்ள திருச்சுற்று மாளிகையில் வடதிசை நோக்கியபடி உள்ள நந்தியே ராஜராஜன் காலத்தைச் சேர்ந்ததாகும். இதுவே முதலில் பெருவுடையாருக்கு எதிரில் இருந்தது. பின்னாளில் நாயக்கர்கள் மூலவருக்கு இணையான பெரிய நந்தியை நிறுவினர். முதலில் அமைக்கப்பட்ட நந்தி, கேரளாந்தகன் மற்றும் ராஜராஜன் வாயில்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இருந்தது. பிற்காலத்தில் திருச்சுற்று மாளிகைக்கு மாற்றப்பட்டது.

**உலகின் பெரிய லிங்கம்**

கருவறையில் உள்ள சிவலிங்கம் உலகிலேயே மிகப் பெரியதாகும். ஆறு அடி உயரமும் 54 அடி சுற்றளவும் கொண்ட ஆவுடையார், 13 அடி உயரமும் 23 $^{1}/_{2}$ அரை அடி சுற்றளவும் உள்ள லிங்கம் எனத் தனித்தனிக் கருங்கற்களினால் செதுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. நாம் தரிசனத்துக்கு செல்லும்போது நம் பார்வையில் படுவது லிங்கத்தின் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே. அபிஷேக, ஆராதனைகளுக்கு வசதியாக இருபுறங்களிலும் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. தஞ்சைக் கோயிலின் சிவலிங்க வழிபாடு மகுடாகம அடிப்படையில் செய்யப்படுகிறது. இக்கோயிலில் தினமும் காலை சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்த ஜாமம் என நான்கு காலப் பூஜைகள் நடந்து வருகின்றன. சிவலிங்கத்தைச் சுற்றி வர கருவறையைச் சுற்றி இடம் உள்ளது. அதில் சோழர்கால ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

**பாரம்பரியச்சின்னமானது எப்படி**

கி.பி. 1987இல் யுனெஸ்கோ நிறுவனம் பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாக தஞ்சைப் பெரிய கோயிலை அறிவித்தது. இதன் மூலம் இக்கோயிலின் பெருமை உலகத்தின் பலநாடுகளுக்கும் பரவத்தொடங்கியது. மனித மரபினை, பண்பாட்டினை பறைசாற்றும் கலைப்பொக்கிஷமாகத் திகழும் இக்கோயிலைக் காண வெளிநாட்டவர்கள் வந்த வண்ணம் இருக்கின்றனர். இக்கோயிலை பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ அறிவித்ததற்கான காரணங்கள் வருமாறு :

1. பொதுவாக பெரிய கோயில்களை பலகாலம் பல மன்னர்கள் கட்டுவர். ராஜராஜன் ஒருவனாலேயே எழுப்பப்பட்ட முழுமையான பிரமாண்டமான கோயில் இது.

2. ஒரே தன்மையான செந்நிறக்கற்களால் அமைந்த திருக்கற்றளி கோயிலாக அமைந்தது. கற்களால் ஆனகோயில்களைக் கற்றளியென்பர்.

3. கருவறைக்குமேலே உயரமான விமானம் அமைந்தது மாறுபட்ட அமைப்பாக இருந்தது.

4. புவியீர்ப்பு மையத்தைக் கண்டறிந்து அதற்கேற்ப வெற்றிட அமைப்பில் கட்டப்பட்ட அறிவியல் நுட்பங்கள் கொண்டது.

5. ராஜராஜசோழன், தானே கோயில் கட்டியதற்கான ஆதாரத்தை கல்வெட்டில் பொறித்ததோடு மட்டுமல்லாமல், எந்தெந்த வகையில் பொருள் வந்தது என்பதையும், கோயிலுக்கு யார் யாருடைய பங்களிப்பு, கும்பாபிஷேகம் நடத்திய வரலாறு ஆகியவற்றையும் கல்வெட்டில் பொறித்துள்ளான்.

6. கற்றளியால் அமைந்த விமானம் முழுவதும் தங்கத்தால் வேயப்பட்டது.

7. தஞ்சைப் பெரிய கோயில் ஒரு வழிபாட்டுத் தலம் மட்டுமல்ல. இது தமிழக வரலாறு, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றின் பெட்டகமாக திகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கம்

திருமுருக கிருபானந்த வாரியார்

திருமுருக கிருபானந்தவாரியாரின் இறைபணியும், தமிழ்ப்பணியும் மக்களால் என்றும் மறக்கமுடியாதவை. நவம்பர் மாதம் ஏழாம் திகதி அவரது நினைவுதினத்தை முன்னிட்டு வாரியார் வழங்கும் சிந்தனைச் செல்வத்திலிருந்து கட்டுரையொன்று பிரசுரமாகிறது.

மனிதனுடைய நற்குணங்களில் நனிசிறந்து விளங்குவது அடக்கம் என்பது. கல்வி, கேள்வி, செல்வம், குலம், பட்டம், பதவி முதலிய பல இருப்பினும், அடக்கம் என்ற ஒன்று இல்லையானால், அவை சிறப்படையா. ஒரு குழம்பில் புளி, மிளகு காயம், காரம் என்பன பல இருப்பினும் உப்பு என்ற ஒன்று இல்லையானால் உண்பதற்கு உகந்ததாக ஆகாது. உணவுக்கு உப்பு இன்றியமையாதது போல் வாழ்வுக்கு அடக்கம் இன்றியமையாதது.

திருவள்ளுவர் தமது சுருங்கிய நூலில் அடக்கத்திற்கு ஒரு முக்கியத்துவம் தந்து அடக்கமுடைமை என்ற அதிகாரம் அமைத்துப் பத்துக் குறள்கள் பாடியிருக்கின்றார்.

பணிவு என்ற இந்த அரிய குணம் அநேகருக்கு அமைவதில்லை. பணிவுடையார் தமது வாழ்வில் சிறப்புறுவார்கள்.

தண்ணீர் இறைக்கும் ஏற்றம் பணிவதனால் கிணற்றிலுள்ள நீரை முகக்கின்றது. அங்ஙனம் ஆன்றோர்களிடம் பணிந்தால் அவர்கள்பால் தேங்கிக் கிடக்கும் அறிவு வெள்ளத்தை நாம் முகந்து கொள்ளலாம்.

பணிவதனால் ஒன்றும் நமக்கு இழிவு வந்துவிடாது. அது நமது பெருமையைப் புலப்படுத்தும். துலாக் கோலில் தாழ்ந்த தட்டுக்குத்தானே பெருமை! காய்த்துப் பழுத்துப் பயனுடைய மரக்கிளை தாழ்ந்து இருக்கும். காய் கனி இல்லாத கிளைகள் உயர்ந்து நிற்கும். எதற்குப் பெருமை? தாழ்ந்த கிளைக்கா? உயர்ந்த கிளைக்கா? உன்னிப் பாருங்கள்.

*"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்*
*செல்வர்க்கே செல்வம் தகைத்து"* என்பார் திருவள்ளுவர்.

**பணிவினால் உயர்ந்தவர் ஸ்ரீராமர்**

விசுவாமித்திரர் இராமரையும் இலட்சுமணரையும் அழைத்துக்கொண்டு மிதிலாபுரிக்குச் சென்று ஜனகருடைய அரசவையில் அமர்ந்திருக்கின்றார். ஆசிரியராகிய விசுவா மித்திரருடைய அருகில் தம்பி இலட்சுமணருடன் ஸ்ரீராமர் ஓராசனத்தில் அமர்ந்திருகின்றார். உருத்திரருடைய வில்லைப் பற்றிச் சதானந்தர் கூறினார். அந்தப் பெரிய வில்லை பலர் ஒன்றுக்கூடிக் கொணர்ந்து ஒரு மேடை மீது வைத்தார்கள்.

"இந்த வில்லை எடுத்து வளைப்பதுபோல் ஒடித்து எறிவாய்" என்று வாய்விட்டுக் கூறாமல் கண் குறிப்பினால் ஸ்ரீராமரை விசுவாமித்திரர் பார்த்தார். ஸ்ரீராமர் அந்தக் குறிப்பையுணர்ந்து 'இந்த வில்லை ஒடித்தெறியுமாறு நமது குருநாதர் குறிப்பினால் உணர்த்துகின்றாரே" என்று கருதி அந்த வில்லைப் பார்க்கின்றார்.

*"நினைந்தமுனி பகர்ந்தவெலாம் நெறியுன்னி அறிவனுந்தான்*
*புனைந்தசடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்*
*வனைந்தனைய திருமேனி வள்ளலும் அம்மாதவத்தோன்*
*நினைந்தவெலாம் நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினான்."*

இது கம்பநாடருடைய திருவாக்கு.

இங்கே ஸ்ரீராமரை வனைந்தனைய திருமேனி என்று குறிக்கின்றார். என்ன பொருள்? சித்திர வல்லுனன் எழுதி வைத்த அழகிய ஓவியம் போன்றவன் என்கின்றார். நன்கு கூர்ந்து சிந்தியுங்கள்

இந்தச் சொற்றொடர் இராகவனுடைய அழகைப் புலப்படுத்துவதற்காக வந்ததன்று; ஏன்? அப்பெருமான் ஓவியத் திற்கு அடங்காத அழகுடையவன். மணிமகுடத்தையும் அணிகலன்களையும் பட்டாடையையும் துறந்து, மரவுரியையும் சடை முடியையும் புனைந்து நின்ற திருக்கோலத்தைக் கண்டு வெறுத்துரைக்க வந்த வாலியே "ஓவியத்தெழுதவொண்ணா உருவத்தோய்" என்று அழைக்கின்றான். 'சித்திரவல்லுனனால் எழுதமுடியாத அழகுடையவனே' என்று கூறுகின்றான் வாலி. அவன் அப்போது ஸ்ரீராமனிடம் மாறுபட்டவனாய்ப் பேசுகின்ற சமயம். மாறுபட்ட ஒருவனுக்குத் துறவு நிலையில் உள்ள ராமர் திருவுருவம் சித்திரக்காரனால் வனைய முடியாதது என்று தோன்றுமானால், திருமணத்திற்கு முன் சகல அணிகலன்களுடன் அரசவையில் அமர்ந்திருக்கும் திருக்கோலம் ஓவியத்தில் எழுதியது போன்றது என்றால், முன்னுக்குப் பின் முரணுமன்றோ. எனவே இதற்கு என்ன பொருள்?

நன்மாணாக்கர் ஆசிரியர் அருகில் இருக்கும் போது கை, கால், மெய் இவைகளை அசைக்காமல் சித்திரம்போல இருப்பர்; இதனைக் குறிப்பிடுகின்றார் கம்பர். நன்மாணாக்கர் ஆசிரியரிடம் 'சித்திரத்தகவின் வித்தகத்தடங்கி' நிற்பர் என்று, மாணவரியல்பு கூறவந்த இலக்கண நூல் இயம்புகின்றது. ஆகவே இங்கே ஸ்ரீராமர் குருநாதராகிய விசுவாமித்திரரது அருகில் சித்திரம்போல் அடக்கமாக ஆடாமல் அசையாமல் இருந்தார் என்று அவருடைய அடக்க நிலையைக் கவிச்சக்கரவர்த்தி "வனைந்தனைய திருமேனி வள்ளல்" என்று நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றார். இந்தச் சொற்றொடரின் மாண்புதான் என்னே! ஸ்ரீராமரைச் சீடராகப் பெற்ற விசுவாமித்திரரைப் புகழ்வதா? சக்கரவர்த்தித் திருமகன் ஒரு ஏழை சன்யாசியிடம் அடங்கியிருக்கின்ற அருமையைப் புகழ்வதா? இதனை மிக நுணுக்கமாக நமக்கு அறிவிக்கின்ற கம்பநாடரது கவித் திறத்தைப் புகழ்வதா?

**அர்ச்சுனனது அடக்கம்**

பாண்டவர்களும் துரியோதனாதிகளும் அத்தினாபுரத்தில் கிருபாச்சாரியாரிடம் குருகுலவாசம் புரிந்து கல்வி பயின்று கொண்டிருந்தார்கள்.

கிருபாச்சாரியாருடைய மைத்துனர் துரோணாச்சாரியார். இவர் கானகத்தில் தவத்தை மேற்கொண்டு வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரோணருடைய தவத்தினால் அவருடைய மனைவி கிருபியிடம் அச்வத்தாமா பிறந்தனர். அக்குழந்தை பாலின்றி வருந்தியழுதது. குழந்தையின் நலங்கருதி துரோணர் தனது பள்ளித் தோழன் துருபதனிடஞ் சென்றார். நட்பருமை யறியாத கயவனாகிய துருபதன் துரோணரை அவமதித்தான். அதனால் மனம் புண்பட்ட அவர் அத்தினாபுரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

நகருக்கு அருகில் மாணவர்கள் விளையாடும் இடம் இருந்தது. பாண்டவர்களும் துரியோதனாதியரும் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். பந்து ஒரு படித்துறையில்லாத கிணற்றில் விழுந்துவிட்டது. அதனை எடுக்கும் வழி யறியாது இருதிறத்துப் பிள்ளைகளும் கிணற்றைச் சுற்றி நின்று திகைப்புற்றிருந்தார்கள்.

மனைவியுடனும் மகனுடனும் அழுக்குத் துணியுடுத்தி, தாடியும் மீசையுமாக வருகின்றார் துரோணர். நகரவாசிகளும் அரச குமாரர்களுமாகிய இவர்கள் அவரை எப்படி மதிக்கக்கூடும்!

துரோணர், "குழந்தைகளே! படிக்கின்ற நீங்கள் இப்போது இக் கிணற்றைச் சுற்றி நிற்கின்ற காரணம் யாது?" என்று வினவினார்.

அவருடைய தோற்றம் அப் பிள்ளைகளுக்கு அவரிடம் மதிப்பை யுண்டாக்கவில்லை. "நாங்கள் எதற்காக நின்றால் உனக்கென்ன? உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ" என்று அலட்சியமாகக் கூறினான் துரியோதனன். மற்ற பிள்ளைகளும் துரோணரைப் பரிகசித்தார்கள். நட்சத்திரக் குழுவின் இடையில் இளம்பிறை திகழ்வதுபோல் திகழ்ந்த அர்ச்சுனன் மட்டும் துரோணரைத் தொழுது, "சுவாமி! வணக்கம். நாங்கள் குருகுலத்து அரசகுமாரர்கள். பந்து கிணற்றில் விழுந்துவிட்டது. அதனை எடுக்க வகையறியாது திகைக்கின்றோம்." என்றான்.

துரோணருக்கு அர்ச்சுனனுடைய அடக்கமான குணம் பெரு மகிழ்ச்சியைத் தந்தது. அர்ச்சுனனுடைய இனிய சொல் அவருடைய உள்ளத்தை உருக்கியது.

" தம்பி! நீங்கள் யாரிடம் படிக்கின்றீர்கள்?

"நாங்கள் கிருபாச்சாரியாரிடம் கல்வி பயில்கின்றோம்."

" நல்லது;" இப்படி ஒரு பொருள் கிணற்றில் தவறி விழுந்தால் இதனை எளிதாக எடுக்கும் முறையை அவர் உங்களுக்குக் கற்பிக்கவில்லையா?

"இல்லை."

"நல்லது" என்று கூறி துரோணர் அங்கு நிரம்பமுளைத் திருந்த சீவிரங் குச்சிகளை எடுத்து, அவைகளை ஒழுங்காகத் திருத்தினார். பிள்ளைகள் எல்லாம் அவர் என்ன செய்யப் போகின்றார். என்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அர்ச்சுனன் காதில் அவர் ஒரு மந்திரத்தை உபதேசித்தார். அந்தச் சீவிரம் புற்களை அவன் கையில் தந்து, "அர்ச்சுனா! உனக்கு நான் உபதேசித்த மந்திரத்தை உச்சரித்து ஒவ்வொரு குச்சியையும் கிணற்றில் எறி"என்றார்.

அர்ச்சுனன் அம்மந்திரத்தைக் கூறி ஒரு குச்சியை எறிந்தான். அது ஆழத்தில் உள்ள பந்தில் நுழைந்தது. பின்னர் ஒவ்வொரு குச்சியை எறித்தான். ஒரு குச்சியின் மறு நுனியில் தைத்துக்கொண்டே வந்தது. மேலே வந்த குச்சியைப் பிடித்துத் தூக்கினான். பந்து வெளியே எடுக்கப்பட்டது. அந்த அதிசயத்தை எல்லாப் பிள்ளைகளும் பார்த்தார்கள். "அடே! இவர் ஒரு பெரிய மந்திர வித்தைக்காரர்: மிகவும் சமர்த்தர். இவரை நாம் அலட்சியஞ் செய்தோமே!" என்று கூறி, அவரைப் பணிந்து, "சுவாமி! தாங்கள் யார்? எங்கு போகின்றீர்?" என்று கேட்டார்கள்.

துரோணர், "குழந்தைகளே! நான் துரோணர் என்கின்ற முனிவன்! உங்கள் குருநாதருடைய இல்லத்திற்குச் செல்கின்றேன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

பிள்ளைகளின் வேண்டுகோளுக்கிணங்கி பீஷ்மாச்சாரியார் துரோணரையும் அந்தக் குருகுலத்தின் ஆசிரியராக அமர்த்தி வில்வேதம் பயிற்றுவிக்குமாறு ஏற்பாடு செய்தார். இயல்பாகவே அடக்கமுடைய அர்ச்சுனன் துரோணரிடம் மேலும் அடக்கமாகப் பலப்பல பணிவிடைகள் புரிந்து அவருடைய மனத்தை மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழவைத்தான். குருவுக்கு உகந்த சீடனாக விளங்கி, வில்வித்தையில் சமானமில்லாதவனாக ஆனான். அர்ச்சுன னுடைய முன்னேற்றத்துக்கு முன் காரணமாக நின்று உதவியது அவனுடைய அடக்கமே.

அநுமார் சமானமில்லாதவர், வலிமையுடையவர். அவர் ஸ்ரீராமரிடம் பேசும்போது வணங்கிய உடம்புடனும் கையினால் வாயை மறைத்தும் பயபக்தி விகவாசத்துடனும் நிற்பார்.

"*வணங்கிய மேனியன் மறைத்த வாயினன்*
*நுணங்கிய கேள்வியன் நுவல்வ தாயினான்*

– (வீடணன் அடைக்கலப் படலம்,)

அறிவு உயர உயர அடக்கம் மிகுதியாக வேண்டும். அடக்கம் அறிவின் மிகுதியைத் தெரிவிக்கின்ற ஓர் அடையாளம். சாரமும், ஈரமும் இல்லாத உலர்ந்த ஓலை சலசல என்று ஒலிக்கின்றது. பச்சோலை ஒலிப்பதில்லை. அன்றியும் வெண்கலமணி அதிகமாக ஒலிக்கும். தங்கமணி ஒலிப்பதில்லை! அதனால் பச்சோலைக்கும் தங்கமணிக்கும் பெருமைதானே.

கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய பெரும் புலவர்கள் எத்தனை அடக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்பதற்கு அவர்களுடைய பாடல்கள் இன்றும் சான்று பகர்கின்றன

இந்திரஜித்து போருக்குப் புறப்பட்டான். அவனுடன் சூழ்ந்து சென்ற சேனைகள் நாற்பது வெள்ளம்; இவ்வளவுதான். இதனைக் கம்பநாடர் கூறுகின்ற அழகும் அடக்கமும் உன்னுந்தோறும் உள்ளத்தை உருக்குகின்றன.

"இந்திரஜித்துடன் சென்ற சேனைகளை அளவிட்டுச் சொல்ல யாரால் முடியும்? பிரம்மதேவராலும் முடியாது. ஆனால் வேதங்களில் வல்ல வால்மீகி முனிவர் நாற்பது வெள்ளம் சேனைகள் என்று கூறுகின்றார். அவரையன்றி அச்சேனையை அளவிட வல்லார் யாவர்?" என்று கம்பநாடர் முன்னோரை மதித்து அவர்களைப் பாராட்டிக் கூறும் அடக்கமுடைமை எத்துணை விழுமியது.

"*அன்னானொடு போகிய தானை அறிந்து கூற*
*என்னால் அரிதேனும் இயம்புவான் மீகன் என்னும்*
*நன்னான் மறையோன் அது நாற்பது வெள்ளமென்னச்*
*சொன்னான் பிறர் யார் அஃதுணர்ந்து தொகுக்க வல்லார்."*

ஒருசமயம் சோழமன்னன் பொய்யாமொழிப் புலவரைச் சந்தித்தான். "புலவரே!" என்று புரவலன் அழைத்தான். அது கேட்ட பொய்யாமொழிப் புலவர் உடம்பில் மின்சாரம் பாய்ந்ததுபோல் திடுக்கிட்டு, உள்ளமும் உடலும் குலுங்கிப் பதறினார்.

மன்னவன், "ஓ! ஏதோ நாம் தவறாக அழைத்துவிட்டோமோ? புலவர் மனம் புண்படக் கூடாதே" என்று கருதினான்.

புலவரைப் பூபாலன் தொழுது, "என்னை மன்னிக்க வேண்டும். 'புலவர் பெருமானே' என்று அழைத்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புலவர் ஏறே' என்று அழைத்திருக்கவேண்டும். நான் அடையின்றி வெறுமனே 'புலவரே' என்று அழைத்து விட்டேன். மன்னித் தருளும்" என்றான்.

பொய்யாமொழிப் புலவர் முன்னைக்காட்டிலும் பன் மடங்கு நடுக்கமுற்றனர். "மன்னர் பெருமானே! மற்றும் ஒருமுறை இப்படி அழைக்க வேண்டாம். இப்படி அழைப்பது எனக்கு மிகுந்த வேதனை தருகின்றது." என்றார்.

சோழமன்னருக்குப் புலவருடைய சொற்பொருள் விளங்க வில்லை. அவருடைய கருத்தும் தெளிவாக வில்லை. "புலவரே! நீர் என்ன கூறுகின்றீர் என்பதைத் தெளிவாகச் சொல்லும்" என்றார்.

"மன்னரே! மறுபடியும் மறுபடியும் என்னைப் புலவரே, புலவரே என்று அழைக்கின்றீரே! அறம் என்ற மகா பாரதத்தைப் பாடிய பெருந்தேவனாரையும் புலவர் என்று கூறி, அறம் பொருள் இன்பம் என்ற முப்பாலையும் கூறிய திருவள்ளுவரையும் புலவர் என்று கூறி, அகத்தியரையும் புலவர் என்று கூறி அடியேனையும் புலவன் என்று கூறினால் இந்த உலகம் பொறுக்குமா?" என்று கூறிக் கண் கலங்கி நின்றார். அப்போது அவர் கூறிய பாடல் இது:

*"அறம் உரைத்தானும் புலவன்; முப் பாலின்*
*திறம் உரைத்தானும் புலவன் – குறுமுனி*
*தானும் புலவன்; தரணி பொறுக்குமோ*
*யானும் புலவன் எனில். "*

இந்தப் பாடலை நன்கு படியுங்கள். சாபாநுக்கிரக சக்தியுடைய அப்பெரும் புலவருக்கு இந்த அடக்கம் இருந்தது.

*"கற்றறிவு குலமேன்மை கருணை பெரும் புகழ்*
*செல்வம் கைமா றெண்ணா*
*துற்றதுவுங் கொடை சீர்மை ஒழுக்க மருந்*
*தவம் நியமம் உறவின் கேண்மை*
*மற்றெதிரி லாத்திண்மை வாய்மை மிகும்*
*தூய்மை குண வனப்பி யாவும்*
*பெற்றிடினும் அடக்கமிலாப் பெருமிதத்தால்*
*இத்தனைக்கும் பிழையுண்டாமால்"*

– பிரபோதசந்திரோதயம்

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்." – திருக்குறள்

## வைரவிழா காணும் மாமன்ற அங்கத்துவச் சங்கமான இந்து வித்தியாவிருத்திச் சங்கம்






சங்கத் தலைமையக சரஸ்வதி மண்டபத்தில் திரு. திருமதி கைலாசபிள்ளை தம்பதியினர், திரு. திருமதி மகாராஜா தம்பதியினர், திரு. திருமதி தவயோகராஜா தம்பதியினர், திரு. கருப்பண்ணாபிள்ளை, திரு. மாணிக்கவாசகர் ஆகியோர் மங்கள விளக்கேற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HINDU EDUCATIONAL SOCIETY



BOARD OF GOVERNORS AS AT 05.02.2011

Seated (L-R) Mr. T. Nadesan (Vice President), Mr. Ramachandran (President), Mr. Kandaih Neelakandan (Secretary), & Mr. V. Kandasamy (Treasurer), Standing (L-R) Mr. T. Yoganathan (Member), Mr. S. T. Kanagaligam (Asst. Secy), Mr. M. Kanapathipillai (Asst. Treasurer), Mr. Sivakurunathan (Member) & Mr. S. Dhanabalaa (Member). Absent: Dr. P. Murugadas (Vice President), Mr. S. Panchadcharam (Member) & Mr. K. T. M. Kanapathipillai (Member)

## அகில இலங்கை இந்து மாமன்றத்தில் அருள்பாலித்திருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜ பெருமானுக்கு தீபாவளி தினத்தன்று விஷேட பூஜை ஆராதனைகள்



சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின்
திருவருட் காட்சி



தீபாவளி விசேட பூஜையில் கலந்துகொண்ட
மாமன்றப் பொருளாளர், பொதுச்செயலாளர், விடுதிக் குழுச் செயலாளர்,
தலைவர் ஆகியோர் வழிபாட்டில் ஈடுபடுவதைக் காணலாம்





இரத்மலானை இல்லப்பிள்ளைகளின் செப்ரெம்பர் மாத பிறந்தநாள் விழாவின் போது, சிறப்பு விருந்தினர்கள் செல்வரத்தினம் தம்பதிகளோடு, மாமன்றத் தலைவர் மனித நேயர் வி. கயிலாசப் பிள்ளை, உப தலைவர் சி. தனபாலா, கலாநிதி மு. கதிர்காமநாதன் மற்றும் சபையோர் இல்லப் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதையும், செல்வரத்தினம் தம்பதிகள், விடுதிக் குழுச் செயலாளர் திருமதி அ. கயிலாசபிள்ளையிடம் விடுதிக்கு நிதி வழங்குவதையும் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து மாமன்ற சமூக நலன் குழுவின் பணிகள்




தையல் பயிற்சி நிலையம் நடாத்தும் முள்ளியவளை
கல்யாண வேலவர் ஆலய குருக்களிடம்
தையல் இயந்திரம் வழங்குவதைக் காணலாம்



மாமன்ற சமூக நலன் குழு வன்னி புனர்வாழ்வு முகாமிற்கு
விஜயம் செய்து அங்குள்ள
இளைஞர் யுவதிகளை சந்தித்து உரையாடிய போது




யாழ் சிவதொண்டர் மாநாட்டின் போது வறுமைக்கோட்டின் கீழ் வாழும்
குடும்பம் ஒன்றுக்கு தையல் இயந்திரம் வழங்குவதைக் காணலாம்



முள்ளியவளையில் க. பொ. த. உயர்தர மாணவி ஒருவருக்கு
பண உதவி, சஞ்சிகைகள், அப்பியாசப் புத்தகங்கள்
வழங்குவதைக் காணலாம்.



அகில இலங்கை இந்து மாமன்ற சமூக நலன் குழுத் தலைவர் சின்னத்துரை தனபாலா,
வைத்திய கலாநிதி எம். கதிர்காமநாதன், கிரிதரன் மற்றும் குழுவினர் முள்ளியவளைக்குச் சென்று
உதவி கோரியோரைச் சந்தித்து உரையாடி ஆறுதல் கூறிய நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/147/NEWS/2011

## நல்லை ஆதீனத்தின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் 07.11.2011



நல்லூர் கந்தன் ஆலயத்தில் பூஜை



ஆதீன ஆலயத்தில் பூஜை வழிபாடு நடைபெறுகிறது



அடிக்கல் நாட்டு விழா நடைபெறுவதைக் காணலாம்



நந்திக்கொடி ஏற்றி வைக்கப்படுகிறது



நல்லை ஆதீனத்தின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம்

இக் காலாண்டிதழ் இல. 48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org